தமிழ் நூதன வாசகம்

முதற் புத்தகம்

TB
031 (6)
N31

OFFICE OF THE REGISTRAR
19 FEB 1931
MADRAS

வித்வான்
V. வேங்கடராஜுலு ரெட்டியார்
எழுதியது.

...ர்ன் பப்ளிஷிங் ஹவுஸ்
...பல்லிக்கேணி, சென்னை.
1931 [விலை அணா 7

508

494.81186

85152

முன்னுரை

சில யாண்டுகளுக்கு முன்னர், யான் சிதம்பரத்தில் பண்டிதர் போதனா முறைக் கல்லூரியில் (Sri Minakshi Oriental Training College) ஆசிரியனா யிருந்த காலத்தில், அக் கல்லூரியிற் பயில வந்த பண்டிதர்களுட் பலர், நல்ல தமிழ் நடையில் பாட புத்தகங்கள் எழுதும்படி அடிக்கடி என்னிடம் கூறினர். அவர்கள் கூறியவாறே யான் இப் புத்தகங்கள் எழுதலாயினேன்.

இப் புத்தகங்களில், தாவரம், மிருகம், பறவை, அரசியல் முறை, சுகாதாரம் ஆகியவைகளைக் குறித்தும், பெரியோர்களின் வாழ்க்கை வரலாறு, பிறநாட்டவரின் பழக்க வழக்கம் முதலானவைகளைக் குறித்தும் பல பாடங்கள் எழுதப்பட்டுள்ளன. அன்றியும், நல்ல ஒழுக்கங்களை உண்டாக்கத் தக்க கதைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சந்தர்ப்பத்திற்கு ஏற்ற மரபுச்சொற்களும், கருத்துக்களை விளக்கத்தக்க பழமொழிகளும் இப்புத்தகங்களில் இடம்பெற்றுள்ளன. வகுப்பிற்குத் தக்கவாறு வசன நடை அமைந்துளது. சந்தர்ப்பத்தினால் பொருள் விளங்கத் தக்க அருஞ்சொற்களும் வந்துள்ளன.

தமிழ்ச்செல்வர் ம-ா-ா-ஸ்ரீ, கா. நமச்சிவாய முதலியாரவர்கள் இப் புத்தகத்தை அழகுறச் செய்து உதவியதோடு, தாம் ... 'திருஞான சம்பந்த நாயனார்' என்னும் புத்த... ஒரு பகுதியை இதிற் சேர்த்துக்கொள்ளவும்

அனுமதி தந்தார்கள். அவர்களிடத்து யான் என்றும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையேன். இப்புத்தகம் வெளிவருவதற்கு உதவி செய்த நண்பர் பலருக்கும் யான் நன்றியறிதலுடையேன்.

பிராணிகள் இரைதேடும் விதம் என்னும் பாடத்திற்கு ஸ்ரீமான், மூர்க்கோத்து. குமாரனவர்கள் மலையாளத்தில் எழுதிய கட்டுரை உதவியாயிருந்தது.

இவ் வருடத்தில், I, II, III பாரங்களுக் குரிய பாட புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவ் வரிசையில் எழுதப்பட்டுள்ள மற்றைப் புத்தகங்கள் பின்னர் வெளிவரும்.

V. வேங்கடராஜுலு ரெட்டியார்.

பொருளடக்கம்

வசன பாகம்:		பக்கம்
1. கடவுள்	...	1
2. தமிழர்	...	4
3. தாமிரவருணி நதி	...	6
4. அரசனும், இடைச்சிறுவனும்	...	9
5. காலமும், அதன் அருமையும்	...	13
6. புகையிலை	...	17
7. முகம்மது நபி	...	21
8. தொழிற் கல்வி	...	26
9. தமிழரும், தமிழ்மொழியும்	...	29
10. அவ்வையார்	...	31
11. நகர பரிபாலன சபை	...	35
12. ஜப்பான் தேசத்து வீடுகள்	...	39
13. பொன்னும், வெள்ளியும்	...	44
14. சிறந்த துணைவன்	...	48
15. பிராணிகள் இரைதேடும் விதம்-I	...	53
16. சுகத்தைக் காக்கும் முறை-I	...	57
17. திருடன் திருந்தியது	...	61
18. பர்மியர்	...	65
19. பிராணிகள் இரைதேடும் விதம்-II	...	70
20. செங்கோலரசன்	...	75
சுகத்தைக் காக்கும் முறை II	...	79
...ர்	...	82
...ான சம்பந்தர் விஷம் தீர்த்தது	...	87

செய்யுட் பாகம்:

சிங்கத்தை முயல் கொன்ற கதை (பாட்டு)	...	91
துஷ்டபுத்தி கெட்ட கதை (பாட்டு)	...	93
நல்வழி	...	95
நீதி வெண்பா	...	100
குமரேச சதகம்	...	102
திருவேங்கட சதகம்	...	104

தமிழ் நூதன வாசகம்

முதற் புத்தகம்

1. கடவுள்

கடவுள் என்னும் சொல்லுக்குக் கடத்தல் என்பது பொருள். அஃது, எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பொருளுக்குப் பெயராக வழங்குகின்றது. அஃதாவது, கடவுள், மாந்தர்களின் மனத்தாலும் அறிய முடியாதபடி கடந்து நிற்பவர் என்பதாம். அவர், உலகத்தில் எல்லாவிடத்தும் இடையீடின்றி நிறைந்திருக்கின்றார். அதனால், அவரை இறைவன் என்று வழங்குகின்றோம். இறைவன் என்பது, எல்லாப் பொருளிலும் தங்கியிருப்பவன் எனப் பொருள்படும்.

கடவுளுக்கு முதலும் இல்லை, முடிவும் இல்லை. அவருக்கு உருவும் இல்லை, நிறமும் இல்லை; அவர், 'இப்படிப்பட்ட இயல்பினை உடையவர்' என்று நம்மால் அறிந்து கூற முடி
, அவர் அருள் இல்லாவிடின் உயிர்களால் யாதும் செய்ய
அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பது

கடவுள், உயிர்களுக்காக இந்த உலகமாகிய பெரிய வீட்டைப் படைத்தருளினார். அவர், ஞாயிறு திங்கள் ஆகிய இரண்டு சுடர்களைத் தூண்டா விளக்காக அமைத்திருக்கின்றார். அவர் ஆணையின்படி வானம் மழைபொழியும்; காற்று வீசும்; கடல் கரை கடவாமல் அடங்கியிருக்கும்.

மாந்தர், தம் அறிவிற்கு ஏற்பக் கடவுளுக்கு உருவம் அமைத்துப் பலவாறு பெயரிட்டு வழிபடலாயினர். அதனால், கடவுளின் உருவங்கள் பலவாகக் காண்கின்றோம். ஆயினும், 'கடவுள் ஒருவரே' என்னும் உண்மையை நாம் மறவாது, உள்ளத்திற் கொள்ள வேண்டும். மாந்தர்களிற் சிலர், கடவுள் இல்லை என்று வாதாடுகின்றனர்; வேறு சிலர், கடவுள் இருக்கின்றதோ இல்லையோ என்று ஐயுறுகின்றனர்.

கடவுள் இருக்கின்றதோ இல்லையோ என்பதை ஆராய்ந்து, நேரில் காணுதல் அரிது. ஆயினும், நாம் கடவுள் உண்டு என்று நம்பி வழிபடல் வேண்டும். ஏனெனில், நம் கண்ணுக்குத் தெரியாத பொருள்களையெல்லாம் இல்லை என்று கருதுதல் தகாது. காற்று, நமது கண்ணுக்குப் புலப்படுவதில்லை; ஆயினும், மரங்களின் கிளைகள் இலைகள் அசைவதனாலும், நம் உடம்பிற் படுவதனாலும் காற்று உண்டு என்று கருதுகின்றோம். அன்றியும், ஒரு வீட்டையோ அல்லது ஒரு பொருளையோ நாம் காணும்போது, அவற்றை அமைத்தவன் ஒருவன் இருத்தல் வேண்டும் என்று துணிகின்றோம். இவற்றால், இந்த உலகத்தையும், உலகத்தில் உள்ள எண்ணிறந்த பொருள்களையும் படைத்தவர் ஒருவர் [illegible]கிறார் என்று நம்பக்கூடுமன்றோ?

நாம் கடவுளை வணங்கி, அவர் திருவுள்ளம் உவந் தருளுமாறு, நற்செயல்கள் செய்தொழுக வேண்டும். பிற வுயிர்களைத் துன்புறுத்தாமையும், நம்மால் இயன்ற அளவு அவற்றிற்கு நன்மை செய்தலும் கடவுளுக்கு உவப்பான செயல்கள். அவர், எல்லாருடைய உள்ளத்தும் நிலைத்திருப் பதனால், எவரையும் இகழ்ந்து கூறுதல் தவறாகும்; பிறவுயிர் களுக்குத் தீங்கு இழைத்தோமானால், அதுவும் கடவுளுக்குச் செய்த தீங்கே யாகும். ஆதலால், நாம் எந்த உயிருக்கும் தீங்கு செய்யாது நன்மை செய்யவேண்டும். சிறந்த அறிவு வாய்ந்த பெரியோர், எல்லாப்பொருள்களையும் கடவுள் வடிவ மாகவே கருதுகின்றனர்.

கோயில்களில் பூசனை புரிதல், திருவிழாச் செய்தல் ஆகிய இவைமாத்திரமே கடவுளுக்கு விருப்பமானவை என்று கருதுதல் சரியன்று. நாம், வறியவருக்கு அளிக்கும் உணவே கடவுளுக்குச் செய்யும் பூசனை; அவர்களுக்கு அமைத்துக் கொடுக்கும் மனைகளே கடவுளுக்கு அமைக்குங் கோயில்கள்; துன்பப்படும் உயிர்களைப் பாதுகாத்தலே அவர்க்குச் செய்யும் திருவிழா; பிறருக்குச் செய்யும் உதவியே கடவுளுக்குச் செய்யும் திருத்தொண்டு. ஆதலின், நாம் பிறவுயிர்களுக்குத் தீங்கு இழைக்காமல் நன்மை செய்தலையே மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு நற்கருமங்கள் செய்து ஒழுகுவோ மாயின், நாம் கடவுள் அருளால் நன்மையடைந்து நலமாக வாழ்வோம்.

'நல்லவை செய்தல் இயலா தாயினும்
அல்லவை செய்தல் அகற்றி வாழுமின்.'

2. தமிழர்

நாம் வாழ்ந்திருக்கும் நாடு தமிழ்நாடு எனப்படும். தமிழ் நாட்டில் வாழ்பவர் தமிழராவர். தமிழர், தொன்று தொட்டே உயர்நிலையில் வாழ்ந்து வந்தனர். அவர்களைப் பற்றிச் சில செய்திகளை இங்கே கூறுவோம்:

மிகப் பழைய காலத்தில், நம் நாட்டின் பல இடங்களி லும் மக்கள் வாழ்ந்திருந்தனர். அவர்களுள், ஒரு கூட்டத் தார் மலைப்பக்கங்களில் குடியிருந்தனர்; வேறு சிலர், வளம் நிறைந்த காடுகளில் வசித்தனர்; பலர், செந்நெல் விளையும் செழிப்பான இடங்களில் வாழ்ந்தனர்; மற்றுஞ் சிலர், கடற் கரைகளில் வதிந்து காலங் கழித்தனர். ஒவ்வோரிடத்திலும் சிலர் சிலர் தலைவர்களாக விளங்கி மற்றையோரைக் காத்து வந்தனர்.

மலையை அடுத்த நிலங்களுக்குக் குறிஞ்சிநிலம் என்று பெயர். அங்கு வதிந்தவர் குறவர் எனப் படுவர். குறவர், மலைச்சாரல்களில் தினை முதலானவைகளைப் பயிரிடுவர்; மலைகளில் கிடைக்கும் கிழங்குகளையும் தேனையும் உணவாகக் கொள்வர்; அங்கு வசிக்கும் சில விலங்குகளை வேட்டை யாடிக் கொன்று தின்பதும் உண்டு. குறவர் முருகக்கடவுளை வணங்கி வழிபட்டு வந்தனர்.

காடு சார்ந்த நிலங்களுக்கு முல்லைநிலம் என்று பெயர். அங்கு வசித்தவர், ஆவினங்களை மேய்த்து வாழ்ந்தனர். அத னல், அவர்கள் ஆயர் எனப் பெயர் பெற்றார்கள். அவர்களுக் குப் பால், தயிர் முதலானவைகளே சிறந்த உணவு. அ[illegible] கள், கொல்லைநிலங்களில் சாமை, வரகு முதல்[illegible] பயிரிடுவதுண்டு.

ஆயர், அமைதியான வாழ்க்கை யுடையவர் ; பிறவுயிர் களுக்கு எவ்வகையிலும் தீங்கு இழைப்பதில்லை. அவர்கள், திருமாலை வழிபட்டு வணங்கி வந்தார்கள். ஆயர், ஆன் நிரை களைக் கானில் மேய்த்துக்கொண்டே, வேய்ங்குழலில் இன் னிசை பாடி மகிழ்வுறுவர். ஆய்ச்சியர், தயிரும் நெய்யும் விலைக்கு விற்பர். காடுகளில் உள்ள முல்லைமலரைச் சூடி, மாலைக் காலங்களில் ஆனிரையின் பின் வேய்ங்குழல் ஊதி மகிழும் ஆயர்களின் வாழ்க்கை எவ்வளவு இன்பமுடையது!

நெற்பயிர் விளையும் நிலங்களுக்கு மருதநிலம் என்று பெயர். மருத நிலங்களில் வாழ்ந்தவர் உழுது பயிரிட்டு வாழ்ந்து வந்தனர். அதனால், அவர்கள் உழவர் எனப் பெயர் பெற்றார்கள். உழவர், கழனிகளில் நெல் கரும்பு முதலானவை களைப் பயிரிடுவர். நிலத்துக்கு அலங்காரமாக இருப்பவை நெல்லும் கரும்புமாதலால், அவர்கள் வாழும் ஊர்கள் அழகும் வளமும் பொருந்தி யிருந்தன. மருதநிலம், நீர்வளம் நிலவளம் படைத்திருந்ததனால், அங்கே மக்கள் பெருகி வாழ்ந் தனர். நாளடைவில், நகரங்கள் பல ஏற்பட்டன. நகரங்களில் அரசர் ஆட்சி புரியத் தொடங்கினர். அவர்கள், பகைவர் உட்புகாவண்ணம், நகரங்களைச் சுற்றி மதிலும் அகழியும் அமைத்துக் காத்துவந்தார்கள்.

கடலை அடுத்த நிலத்திற்கு நெய்தல்நிலம் என்று பெயர். அங்கு வதிந்தவர், பரதவர் எனப் படுவர். பரதவர், கட்டு மரங்களிலும் படகுகளிலும் கடலிற் சென்று, வலை வீசி மீன் பிடிப்பர். சிலர், கடல்நீரால் உப்பு விளைவிப்பர். உப்பை வண்டியிற் கொண்டுபோய் நகரங்களிலும், மலைகளிலுள்ள குறிச்சிகளிலும் விற்பதுண்டு. பரத்தியர், மீன்களைக் கொண்டு போய் நெல்லுக்கு மாற்றி வருவர்.

மணல்வெளிகளாகிய நிலத்திற்குப் பாலைநிலம் என்று பெயர். பாலைநிலங்களில் குடி யிருந்தவர், மறவர் எனப்படுவர். மறவர்கள் மிக்க வீரமுள்ளவர்கள். அவர்கள், நாளடைவில், அரசர்களிடம் போர்வீரர்களாகவும் படைத்தலைவர்களாகவும் அமர்ந்து, நாட்டைக் காத்துவந்தார்கள். பழைய மக்கள் இவ்வாறு மேம்பாடு அடைந்து விளங்கினர்.

3. தாமிரவருணி நதி

தாவரங்கள் முதலாக எல்லா உயிர்களுக்கும் தண்ணீர் இன்றியமையாதது. ஆறு, ஏரி, குளம், கால்வாய், கிணறு முதலான நீர்நிலைகளில் தண்ணீர் கிடைக்கும். ஆறுகள், மலைகளில் உற்பத்தியாகிப் பெரும்பாலும் கடலிற் போய்ச் சேர்கின்றன. சில ஆறுகளில் எந்நாளும் நீர் வற்றாமல் ஒழுகிக் கொண்டிருக்கும்; அவற்றை ஜீவநதி என்று வழங்குவர். அத்தகைய ஆறுகளுள் ஒன்றாகிய தாமிரவருணியாற்றைக் குறித்து இங்கே சில விஷயம் கூறுவோம்:

தாமிரவருணிநதி, மேற்குத் தொடர்ச்சிமலையில் உற்பத்தியாகிப் பாவநாசம் என்னும் ஊருக்கருகில் அருவியாய் விழுகின்றது. அவ்விடத்தைக் கலியாண தீர்த்தம் என்று வழங்குகின்றனர். தாமிரவருணியாறு, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம் முதலான பேரூர்களை அடுத்துப் பாய்ந்து, மன்னார்குடாக்கடலிற் சங்கமமாகின்றது. திருக்குற்றால மலையிலிருந்து பாய்ந்து வரும் சித்திராநதியும், உப்பாறு என்று வழங்கும் வேறொரு சிற்றாறும், சீவலப்பேரி என்னுமிடத்தில் இதனோடு கலக்கின்றன. அதனால், அவ்விடத்திற்கு முக்கூடல் என்று பெயர் வழங்குகின்றது.

தாமிரவருணியாற்றில் பல இடங்களில் அணை கட்டி, அந்நீரால் ஏராளமான நிலங்களைச் சாகுபடி செய்கின்றனர். தென் மேற்குப் பருவக்காற்றினால், ஆனி, ஆடி மாதங்களில் மேற்குத் தொடர்ச்சி மலையில் மிகுதியாக மழை பெய்கின்றது. அக்காலங்களில் தாமிரவருணி யாற்றில் வரும் நீர், மிக்க தெளிவாயும் குளிர்ச்சியாயும் இருக்கும். அதனால், அது குளிப்பதற்கும் பருகுவதற்கும் மிகச் சிறந்தது என்று அந்நீரை அனைவரும் பயன்படுத்துகின்றனர்.

தாமிரவருணிநதிக்கு, ஸ்ரீவைகுண்டத்தின் அருகில், இரும்புப்பாலம் ஒன்று துரைத்தனத்தாரால் கட்டப்பட்டுள்ளது. அதுவேயன்றி, திருநெல்வேலிக்கும் பாளையங்கோட்டைக்கும் இடையில் பெரிய பாலம் ஒன்று இருக்கின்றது. அது, சுலோசன முதலியார் என்னும் சீமானால் கட்டப்பட்டது. ஆற்றில் பெருவெள்ளம் வரும்போது, மாந்தர்கள் அதனைக் கடப்பதற்குப் பட்ட பெருந்துன்பினைக் கண்டு மனமிரங்கி, அவர் அப் பாலத்தைக் கட்டினார். பாலத்தை அடுத்து, தைப்பூச மண்டபம் என்னும் மண்டபம் ஒன்று இருக்கிறது. அதில், தைப்பூசத்தன்று பெரிய திருவிழா நடைபெறும். அப்பொழுது, ஆடவரும் பெண்டிரும் திரள் திரளாக அங்கே கூடுவர். தாமிரவருணிநதியில், பல இடங்களைத் தீர்த்தத்துறைகளாகக் கொண்டாடுகின்றனர்.

இவ்வாறாக மேன்மை யுடைய ஆற்றை மாந்தர் பல வழிகளில் அசுத்தப்படுத்துகின்றனர். ஆடு, மாடு, குதிரை முதலானவைகளை ஆற்றில் குளிப்பாட்டுகின்றனர்; ஆற்றங்கரையில் மல ஜலம் கழிக்கின்றனர்; பிணங்களைச் சுடுகின்றனர்; சுட்டு, அவ்வெலும்புகளை நீரில் விடுகின்றனர்.

புண்ணிய நதிகளில் எலும்புகளை விட்டால், இறந்தவருக்குச் சுவர்க்கம் கிடைக்கும் என்று நம்பி, இவ்வாறு செய்கின்றனர். இவையேயன்றி, வண்ணர், பலவிடங்களில் துறை அமைத்துக்கொண்டு அழுக்குத் துணிகளை வெளுக்கின்றனர். சில நகரங்களில் சாக்கடைநீரை ஆற்றில் பாயும்படி கலக்க விடுகின்றனர். மாந்தர்களின் அறியாமை என்னே! இவ்வாறு பலவழிகளிலும் அழுக்கடைவதனால், மிக்க தூய்மையான நீரும் தன் இயல்பு கெட்டுவிடுகின்றது. ஆதலால், சில காலங்களில் அதனைப் பருகுவோர்க்குப் பலவகையான கொடிய நோய்கள் உண்டாகின்றன. ஆற்றுநீரை இவ்வாறு கெடுத்துவிடாமல், சுத்தமாகப் பாதுகாத்துக் கொள்ளுதல், சரீர ஆரோக்கியத்திற்கு நல்லது.

பாண்டிநாட்டில் உள்ள பெரிய ஆறுகளுள் தாமிரவருணியே மிக்க சிறப்புடையது. தாமிரவருணியைப் புலவர்கள், பொருநை என்று கூறுவர்; தண்பொருநை என்பதும் உண்டு. தண்பொருநை என்னும் பெயர், தாம்பிரணி என்று மருவி வழங்கலாயிற்று. அதனைத் தாமிரவருணி என்று மாற்றி, செம்பு போன்ற நிறமுடையது என்று பொருள் கூறுகின்றனர். செந்நிறமான நிலத்திற் பாய்வதனால் இப்பெயர் வந்தது என்பர். தாமிரவருணியாற்று நீரில் தாமிரச்சத்துக் கலந்திருக்கின்றது என்று கூறுதலும் உண்டு. மாந்தர் பலர், இதனைப் பேரியாறு என்றும் வழங்குகின்றனர். திருநெல்வேலி ஜில்லாவில் வாழ்பவர், இவ்வாற்றுநீரைப் பேரியாற்றுத் தண்ணீர் என்று புகழ்ந்து கூறுகின்றனர்.

4. அரசனும், இடைச்சிறுவனும்

முன்னொருகாலத்தில், அரசர் ஒருவர் வழக்கம்போல் வேட்டை யாடுவதற்குத் தம் பரிவாரங்களோடு புறப்பட்டுச் சென்றார். அவர், காட்டில் பற்பல மிருகங்களை வேட்டையாடி வதைத்தனர்; பின்னும், வேட்டையிலேயே நாட்டங்கொண்டு, சிலவற்றைப் பின்தொடர்ந்து விரைந்து நெடுந்தூரம் சென்றார். அப்பொழுது, அவருடன் சென்றவர் தளர்வுற்றுப் பின் தங்கிவிட்டனர். அரசர், காட்டில் தனியே ஓடி அலைந்து திரிந்து களைப்புற்றார். அவருக்குப் பசி மிகுந்தது. அதனால், அவர் தம் ஊர்க்குத் திரும்பிப் போக எண்ணினார். ஆனால், அவருக்கு வழி தெரியவில்லை.

பின்னர், அருகில் ஏதேனும் ஊர் இருக்குமோ என்று அறியும்பொருட்டு அரசர், அந்தக் காட்டிற் செல்லுகையில், அங்கே ஆட்டுமந்தை ஒன்று மேய்ந்துகொண்டிருக்கக் கண்டார்; கண்டதும், வறியன் பொற்குவியல் கண்டது போல மன மகிழ்ந்து அங்கே சென்றார். அவ்விடத்தில், இடைச்சிறுவ னொருவன் அவ்வாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான். அரசர், அச்சிறுவனை அணுகி, 'அப்பா, இங்கே அருகில் ஏதேனும் ஊர் உளதோ?' என்று வினவினார். சிறுவன் அவரை வணங்கி, 'ஐயா, சமீபத்தில் சிறிய ஊர் ஒன்று இருக்கின்றது; ஆனால், அதற்குச் செல்லும் வழி செவ்விதாயில்லை; புதியவர்கள், அவ்வழியை அறிந்து செல்லுதல் எளிதன்று' என்று பணிவுடன் கூறினான்.

சிறுவன் கூறியதைக் கேட்ட மன்னவர் அவனை நோக்கி, 'ஆயின், சிறிது தூரம் என்னோடு வந்து வழி காட்டு' என்று வேண்டினார். பையன், 'பெரியவரே, நான் இந்த ஆடுகளை

மேய்த்துக்கொண்டிருக்கிறேன் ; இப்பொழுது நான் உம் மோடு வருதல் இயலாது ; என் யஜமானர் எனக்கு இட்ட பணியை யான் தவறின்றிச் செய்யவேண்டுமன்றோ ?' என்று தெரிவித்தான். வேந்தர் அவனை நோக்கி, 'சிறிது தூரம் என்னோடு வா ; அதற்காக உனக்குப் பெரிதும் பொருள் தரு கிறேன்' என்றார். சிறுவன், 'ஐயா, இந்த ஆடுகளை மேய்ப்

பதற்காக என் யஜமானர் எனக்குச் சம்பளம் தருகிறார். நான் உம்மோடு வந்துவிட்டால் அப்பொழுது, ஆடுகளுக்கு ஆபத்து நேரலாம்; கள்வர் சிலவற்றைக் களவுசெய்து கொண்டு போகலாம்; அவ்வாறு ஏதேனும் நேர்ந்தால், என் யஜமான ருக்கு என்ன சொல்லுவேன்?' என்று பதிலளித்தான். அரசர்,

'அன்பனே, அவ்வாறாயின், யான் இம்மங்கையைக் காத்துக் கொண்டு இங்கேயே தங்கி யிருக்கின்றேன். நீ விரைந்து சென்று சிறிதளவு நன்னீர் கொண்டு, எனக்கு வழிகாட்டுதற் குத் துணைவன் ஒருவனையும் கூட்டிவா; இப்பொழுதே செல்' என்று ஏவினர்.

அதனைக் கேட்ட இடைச்சிறுவன், 'பெரியவரே, யான் உம்மை நம்பி, ஆடுகளை விட்டுவிட்டுச் செல்ல முடியாது; எவ்வாறாயினும் நீரே வழி யறிந்துகொண்டு செல்ல வேண்டும்' என்று சினந்து கூறினன். அச்சொற்கள் செவியுற்றதும், வேந்தர் வெகுண்டு, 'அடே பயலே, என்னைக் கள்வன் என்று கருதினாய் போலும்! நன்று நன்று!' என்று அதட்டிக் கூறினர். சிறுவன், 'பெரியவரே, கோபம் கொள்ளாதீர்; யான் உம்மைத் திருடன் என்று சொல்லவில்லை; என் ஆடுகள் உமது குரலை அறிய மாட்டா; உமது குரலைக் கேட்டால் அவை வெருண்டு ஓடுமே யன்றி அருகில் வாரா; அன்றியும் என் யஜமானர் இட்ட பணியை மேற்கொண்டுள்ள என்னிடத்தில் இவ்வாறு கூறுகின்ற நீர், வேறு எவரேனும் இங்கு வந்து உம்மைத் துணையாக வேண்டினால், அவரோடு செல்லாமல் இங்கே காத் திருப்பீரோ? இத்தகைய உம்மை யான் எங்ஙனம் நம்பு வது?' என்று துணிவாகக் கூறினன்.

சிறுவன் செப்பிய நியாயத்தைச் செவியேற்ற செம்மல், அவனது நற்குணத்தையும், நம்பிக்கையையும், அவன் தன் தலைவன்பால் கொண்டுள்ள அன்பையும் அறிந்து வியப்புக் கொண்டு, அவன் காட்டிய நெறியே செல்வாராயினர். அப் பொழுது இளைஞன், 'ஐயா, நீர் பசியால் களைத்திருப்பவர் போலக் காண்கின்றீர்; இதோ, இவற்றை உண்டு இளைப்பாறி

விட்டுச் செல்லும்' என்று சில தின்பண்டங்களைக் கொடுத்து வணங்கினான். சிறுவன் அன்பிற்காக, அவற்றை அரசர் கைக் கொண்டனர்.

அத்தருணத்தில், மன்னவர் சென்ற வழியை நோக்கி நடந்து சென்ற படைவீரர் அவ்விடத்தை அணுகினர்; அங்கே அரசரைக் கண்டு உவப்புற்று, அவரைக் கைதொழுது இறைஞ்சினர். படைவீரர்கள், இறைஞ்சுதலையும், பணி மொழி கூறி நிற்றலையும் கண்ட சிறுவன், 'இவர், நம் மன்னவர் போலும்!' என்று உளங்கொண்டு, நடுநடுங்கிக் கை குவித்து, கண்ணீர் உகுத்து, அரசரடிகளில் வீழ்ந்து இறைஞ்சினான். அரசர் அன்புரை கூறி அவனைத் தேற்றி, சிறிது பொருள் நல்கித் தம் படைகளுடன் சென்றார்.

பின்பு மன்னவர், அவ்விடைச்சிறுவனைத் தம்மிடம் வருவித்து, அவனுக்கு வேண்டுவன கொடுத்துக் கல்வி பயில்வித்து, உயர்பதவி அளித்து வாழ்வித்தார். இளைஞனும், முன்போலவே தலைவர்பால் அன்பும், உண்மையும் உடையவனாய்த் தன் தொழிலைத் தாழ்வின்றி நடத்தி மாண்புற்றான்.

பிள்ளைகளே, இடைச்சிறுவனுடைய நற்குண நற்செயல்களைக் கவனித்து அறியுங்கள். நீங்களும் இவ்வாறே உண்மையும் நம்பிக்கையும் உடையவர்களாக விளங்கி, நல்வாழ்வு வாழ்ந்து, நலம் பெறுவீர்களாக.

5. காலமும், அதன் அருமையும்

'சீதை நெடுந்தூரத்தில் இருப்பதைக் குறித்து நான் கவலைப் படவில்லை; இராவணன் அவளைச் சிறை வைத்திருப்பதைக் குறித்தும் வருந்தவில்லை; நான் ஒரே அம்பினால் இராவணன் தலையைத் துணித்துவிடுவேன்; சீதையைச் சிறையிலிருந்து விடுவிக்கவும் முடியும்; ஆனால், நாட்கள் கழிந்து போவதை நினைத்தே கவல்கின்றேன்; கடந்துபோன நாட்களை மீட்டுக் கொண்டுவர முடியாதல்லவா?' என்று ஸ்ரீராமர் ஒரு சமயத்தில் வருத்தப்பட்டிருக்கிறார். இதனால், எப்படிப்பட்டவர்களாலும், சென்ற காலத்தை மறுபடியும் கொண்டுவர இயலாது என்பது நன்கு விளங்குமன்றோ? சிறந்த அறிவுடையவர்கள், காலம் கழிந்து போவதற்கு வருந்துகின்றார்கள். சாமானிய மனிதரோ, பயனில்லாத சொற்களைப் பேசிக் காலத்தை அவமாக்குகின்றனர். காலம் வீணாகக் கழிவதைக் குறித்து அவர்கள் வருந்துவதில்லை; 'இன்று வேடிக்கையாகப் பொழுது போயிற்று' என்று கூறி மகிழ்கின்றனர்.

மனிதர் சாதாரணமாக நூறு வயசுவரை வாழ்ந்திருப்பர். ஆனால், நமது நாட்டில் பெரும்பாலோர் இளமைப் பருவத்திலேயே மரணம் அடைந்துவிடுகின்றனர். ஒரு மனிதனது ஆயுள் அறுபது வயசு என்று வைத்துக்கொள்வோம். அவனுக்குப் பத்து வயசு ஆகிவிட்டால், அவன் ஆயுளில் ஆறிலொரு பங்கு தீர்ந்துவிட்டதன்றோ? ஒருவருடம் கழிந்தால் அறுபதில் ஒரு பங்கு கழிந்தது. இவ்வாறே ஒருநாள் கழிந்தாலும் அவன் ஆயுளில் ஒரு கூறு கழிந்துவிட்டதாகும். ஆதலால், ஒரு நிமிஷம் சென்றாலும், நமது ஆயுளில் ஒரு சிறு பாகம் கழிந்து விட்டது என்பதை நாம் நன்கு அறிந்து

கொள்ளலாம். இதனை நன்கு உணர்ந்த பெரியோர், 'நாளாவது உயிரை அறுக்கும் வாள்' என்று கூறியுள்ளார். இவ்வாறு, மிகவும் அருமையானதாகப் பெரியோர்களால் கருதப்படுகின்ற காலத்தை வீணுகப் போக்குவது எவ்வளவு அறியாமை!

மனிதராகப் பிறந்து அறிவு படைத்தவர், பிறருக்கு உபகாரமான பல நற்செயல்கள் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றனர். ஆதலால், அவர்கள் தங்களுக்கு வாய்த்துள்ள காலத்தை வீணுகக் கழிக்காமல் பயன்படச் செய்தல் வேண்டும். சிலர், தங்களுக்கு அவகாசமுள்ள நேரத்தை, 'இவ்வளவு சொற்ப நேரத்தில் என்ன செய்ய முடியும்?' என்று சொல்லிக்கொண்டே வீணுகக் கழித்துவிடுகின்றனர்; ஆறு ஆறு நிமிஷங்களாகப் பத்துமுறை அவகாசம் கிடைத்தால், அஃது ஒருமணி நேரம் ஆகிவிடும் என்பதை மனத்திற் கொள்வதில்லை. சில பெரியோர், இவ்வாறு கிடைக்கும் சொற்ப நேரங்களில் மிகப் பெரிய காரியங்களைச் செய்து முடித்திருக்கின்றனர். மாஸன் என்னும் வைத்தியரொருவர், ஒரு நோயாளியின் வீட்டிலிருந்து மற்றொரு நோயாளியின் வீட்டிற்குப் போகும் நேரத்தில் ஒரு நூலை மொழிபெயர்த்திருக்கிறார். டாக்டர் டார்வின் என்பவரும் இவ்வாறே பல நூல்கள் செய்திருக்கின்றார். இவர்கள் செயலைப் பின்பற்றி, நாமும் நமக்கு அவகாசம் கிடைக்கும் சிறிது நேரத்தையும் வீணுக்காமல் நற்கருமத்தில் பயன்படுத்தல் வேண்டும்.

நாம் காலத்தைச் சரியாகப் பயன்படுத்த வேண்டுமானல் அதற்கு ஓர் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். முதலில், நாம் செய்ய வேண்டிய வேலைகளையெல்லாம் வகைப்படுத்திக் கொண்டு, 'இன்ன வேலையை இன்ன சமயத்திற் செய்ய

வேண்டும்' என்று ஒரு குறிப்பு எழுதிக்கொள்ள வேண்டும். அதற்கேற்ப ஒவ்வொன்றையும் தவறாமல் அவ்வக் காலத்தில் கவனித்து வரவேண்டும். இவ்வாறு நமக்கு நாமே ஒரு விதியை ஏற்படுத்திக்கொண்டு அதன்படியே நடந்து வருவோமானால், எல்லாக் கருமமும் சரியாக எளிதில் நடைபெறும்.

சிலர், உண்ணவேண்டிய வேளைகளில் உண்ணாமலும், உறங்க வேண்டிய காலத்தில் உறங்காமலும் நோயை வருவித்துக் கொள்கின்றனர். சிலர், பகற்பொழுதை வீணாகக் கழித்துவிட்டு, இரவில் காரியங்களைக் கவனிக்கின்றனர். சிலர், பகற்பொழுதையும் உறக்கத்தில் கழித்துவிடுகின்றனர். அந்தோ, காலத்தின் அருமையை இவர்கள் சிறிதும் அறிந்தனரில்லையே!

நம் நாட்டினர், தாம் குறித்த காலத்தில் குறிப்பிட்ட காரியத்தை நிகழ்த்துவதில்லை; அதைப்பற்றிக் கவலைப்படுவதும் இல்லை. இவ்விஷயத்தில் ஆங்கிலேயர் எவ்வாறு இருக்கின்றனர் என்பதைக் கவனிப்போம். அவர்கள், தாங்கள் குறிப்பிட்ட காலத்தில் குறித்த வேலையைச் செய்யத் தவறுவதே யில்லை; குறித்த காலம் தவறி நடப்பவர்களைக் காணவும் வெறுக்கின்றார்கள். அதனால், அவர்கள் பல பெருஞ்செயல்களைச் செய்து, புகழும் பொருளும் அடைகின்றார்கள். நாமோ எந்த விஷயத்தையும் விதியின்மேலும் கடவுளின்மேலும் ஏற்றிவிட்டுத் தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்றோம். சிலர், 'ஆங்கிலேயருக்குப் பல்லாற்றானும் வசதி இருப்பதனால் அவர்கள், சொன்னபடி செய்ய இயல்கின்றது; நமக்குப் பணமில்லை; சௌகர்யங்கள் இல்லை; நாம் எவ்வாறு செய்யக் கூடும்?' என்கின்றனர். இவை தக்க காரணங்கள் ஆகா. ஏனெனில்,

நம்மவர்களுள் பெருஞ்செல்வம் படைத்தவர் பலரும் குறித்த காலம் தவருமல் நடப்பதில்லையே!

நாம் விரைவில் செய்து முடிக்கத்தக்க காரியத்தை விரைவிற் செய்து முடிக்க வேண்டும். இல்லாவிடின், அதனுல் பொருட்கேடே யன்றி உயிர்க்கேடும் நேரும். இதனை விளக்க இங்கே ஒரு சிறு கதை கூறுவோம்:

ஓரரசனது நாட்டைக் கைப்பற்றக் கருதிப் பகையரசன் படை திரட்டினன். அதனை அறிந்த நண்பனெருவன் அவ்வரசனுக்கு அச்செய்தியைக் குறித்துக் கடிதமொன்று எழுதி அனுப்பினுன். கடிதத்தின்மேல், 'அவசரமான காரியம்' என்று எழுதப்பட்டிருந்தது. அதனைக் கொண்டுசென்றவன் அரசனை அடைந்து வணங்கி, 'அண்ணலே, இஃது அவசர காரியமாம்; உடனே கவனிக்கவேண்டுமாம்'என்றும் தெரிவித்தான். மன்னவன், அப்பொழுது அக் கடிதத்தைக் கவனிக்கவில்லை. சிறிது நேரஞ் சென்றதும் பகையரசன் சேனைகள், அவன் நகரின் நாற்புறமும் வளைந்து, கோட்டையை முற்றுகை செய்தன. அதை அறிந்த அரசன் கடிதத்தைப் படித்துப் பார்த்துத் தன் அஜாக்கிரதைக்கு வருந்திஞன். வருந்திப் பயன் என்? காலத்தைக் கவனியாமல் இருப்பவர்கள் நீக்க முடியாத துன்பம் அடைவார்கள் என்பதை இக் கதையினுல் நாம் நன்கு அறியலா மன்றே?

பிள்ளைகளே, நீங்கள் காலத்தின் அருமையைக் கவனத்தில் எப்பொழுதும் வைத்துச் சிறிது நேரத்தையும் வீணுக்காமல் பயன்படச் செய்து வாழுங்கள். அவ்வாறு செய்தால் அரிய காரியமும் எளிதில் நிறைவேறும்.

6. புகையிலை

புகையிலை, நம் நாட்டில் நெடுங்காலமாகப் பயிரிடப்பட்டு வருகின்றது. இஃது, அமெரிக்காவிலும், ஜப்பான், துருக்கி, ஆபிரிக்கா முதலான தேசங்களிலும் மிகுதியாகப் பயிராகின்றது. ஐரோப்பியர், புகையிலையை அமெரிக்காவிலிருந்து தம் நாட்டிற்குக் கொண்டு போயினர். இந்தியாவைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று, ஸ்பெயின் தேசத்திலிருந்து புறப்பட்ட கொலம்பஸ் என்பவர், அமெரிக்காவிற் போய்ச்சேர்ந்தார். அக்காலத்தில் அந் நாட்டார், புகையிலையைக் குழலினுள் வைத்துப் புகை பிடிப்பதைக் கண்டு, அவர் அதனைக் கைக்கொள்ளலானுர். அதனால், அவரோடு சென்றவர்களும் அதனை உபயோகப்படுத்தப் பழகினர். ஆயினும், அஃது அவர்கள் நாட்டில் பரவவில்லை.

பின்னர், ஸர். வால்டர் ராலே என்பவர், அமெரிக்காவிலிருந்து புகையிலையை இங்கிலாந்திற்குக் கொண்டுபோனுர். அப்பொழுது இங்கிலாந்தில் அவ்விலையைப்பற்றி அறிந்தவர் ஒருவரும் இலர்; சுருட்டுப் பிடிக்கும் வழக்கம் உண்டென்பதும் அவர்களுக்குத் தெரியாது. இதனை அறிவிக்கும் வரலாறென்றினை இங்கே கூறுவோம்:

ஸர். வால்டர் ராலே என்பவர், தாம் கொண்டுபோன புகையிலையைச் சுருட்டுப் பிடித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது, தற்செயலாக அவரறைக்குட் புகுந்த வேலைக்காரன், அவரிடத்தினின்று புகை வருவதைக் கண்டான். கண்டதும், அவர்மேல் தீப்பிடித்துவிட்டது என்று கருதி நடுநடுங்கி, உடனே வெளியே விரைந்து சென்று, ஒரு பாத்திரத்தில் நீர் கொண்டுபோய், அவர் முகத்திற் சொரிந்தான். பிரபு, பணி

யாளனை முனிந்து கூறவே, அவன், 'ஐய, நான் சிறிதுநேரம் இங்கு வாராதிருந்திருப்பேனாயின், எரியால் நீர் வெந்திருப்பீரே! உமது முகத்தில் நெருப்புப் பற்றியிருந்ததை நீர் அறியவில்லையா?' என்று உரைத்தான். அதைக் கேட்ட பிரபு, அவன் அறியாமையைக் குறித்து நகைத்து, நிகழ்ந்ததைப் பலர்க்கும் அறிவித்தார். இவ்வரலாற்றால், நாம் மேலே கூறியது வலியுறுமன்றோ?

ஸர். வால்டர் ராலேயின் காலமுதல், சுருட்டுப் பிடிக்கும் வழக்கம் இங்கிலாந்தில் பரவலாயிற்று. ஆயினும், சுருட்டுப் பிடிப்பதனால் தீங்கு விளையும் என்று கருதி, அதனைக் கைக்

கொள்பவர்களுக்கு அரசாங்கத்தார் தண்டனை விதித்தனர். அதனால், அதன் உபயோகம் குறைவடைந்தது. பின்னர், 1665ஆம் வருடத்தில், அந்நாட்டில் பிளேக் நோய் மிகவும் பரவிய போது, சுருட்டுப் பிடித்தவர்களுள் பெரும்பாலோரை அந்நோய் தாக்காததனால்,அதன் பயனைப் பலரும் அறிந்தனர்; அரசாங்கத்தாரும் தண்டனைவிதியை நீக்கினர். அதன் பின்னரே எல்லாரும் புகையிலையைக் கைக்கொள்ளலாயினர்; நாளடைவில் அதனை மூக்குப்பொடியாகவும் பயன்படுத்தினர்.

புகையிலை, நம் நாட்டில் பலவிடங்களில் பயிரிடப்படுகின்றது. அஃது, உவர்நிலத்திலும், சரல்நிலத்திலும் செழிப்பாக வளரும். உப்புத்தண்ணீரே அதற்கு ஏற்றது. நம் நாட்டில், திண்டுக்கல், சிவபுரி என்னும் இடங்களில் விளையும் புகையிலையை மிகச் சிறந்ததாகப் பாராட்டுகின்றனர்.

புகையிலை, சற்றேறக்குறைய ஐந்து மாதத்துப் பயிர். புரட்டாசி மாதத்தில், புகையிலை விதையை நாற்று விடுகின்றனர். நாற்பது நாட்கள் ஆயினபின், நாற்றைப் பறித்து, பண்படுத்தியிருந்த வேறிடங்களில், நடுகின்றனர். இரண்டு அல்லது ஒன்றரையடி இடம் இடைவிட்டு நடுவது வழக்கம். சில நாட்களின்பின் களை பறித்து, முறையாகத் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

புகையிலைச்செடி, சுமார் நாலடி உயரம் வளரும். அதன் இலைகள் இரண்டரையடி நீளமும் ஒன்றரையடி அகலமும் உள்ளவையாகும். செடியில், நாற்புறத்தும் இலைகள் விரிந்திருக்கும்; மேலும் மேலும் இலைகள் உண்டாக விடுவதில்லை. பத்துப்பன்னிரண்டு இலை வந்ததும், செடியின் நுனியைக் கிள்ளி எறிந்து விடுவர். அவ்வாறே கணுக்களி

லிருந்து கிளைக்கும் துளிரையும் கிள்ளிவிடுவர். இப்படிச் செய்யாவிடின், இலைகள் நீண்டு அகன்று வளரமாட்டா.

புகையிலைச்செடி முதிர்ந்தால், இலைகள் பொன்னிற மாக மாறும். அப்போது செடியை அறுத்து அங்கேயே போட்டுவைப்பர். மூன்றும் நாள் அவற்றை ஒன்றன் மேல் ஒன்முக அடுக்கி வைப்பர். இதனை, 'வரிக்காம்பு' என்று வழங்குகின்றனர். இரண்டு மூன்று நாட்கள் கழிந்த பின், அவ்வடுக்கைப் பிரித்துப் பக்குவமாகக் காய வைப்பர்; இலைகள் காய்ந்த பின் அம்பாரமாக அடுக்கி வைப்பர். புகையிலைஅம்பாரங்களை இரண்டு மூன்று மாதங்கள்வரை அந்நிலையிலேயே வைத்திருப்பர். ஆனல், அடிக்கடி அவற்றை மறுகளப்படுத்திக் கிளறுதல் வழக்கம். அதன் பின்னர், புகையிலையைத் தரம் பிரித்துக் கட்டுகளாகக் கட்டுவர். இலை யொழிந்த மற்றைப் பாகங்கள், நெற்பயிருக்கு நல்ல எரு ஆகின்றன.

புகையிலைப்பயிர் மிக்க பயன் தருகின்றது. அதனல் அதனைப் பல இடங்களில் பயிரிடுகின்றனர். மாந்தர், புகை யிலையைப் பல வகையில் உபயோகப்படுத்துகின்றனர். சிலர் வெற்றிலையுடன் சேர்த்து மெல்லுகின்றனர்; சுருட்டாகவும், மூக்குப்பொடியாகவும் பயன்படுத்துபவர் பலர். ஆயினும், இது, நம் நாட்டவர்களுக்கு எல்லாவகையிலும் கேட்டைத் தருவதே. புகையிலை போடுவதனல் நாக்கின் சுவையறியும் தன்மை கெடுகின்றது; அன்றியும், வாயில் ஊறும் நீரை வெளியில் உமிழ வேண்டியிருக்கின்றது; அப்படி உமிழ்ந்து விடுவதனல், ஜீரண சக்தி குறைவுபடுகின்றது. பொடி உறிஞ்சுவதனல் நாளடைவில் மூளைக்குக் கேடு உண்டா கின்றது. சுருட்டுப் பிடிப்பது மிக்க கேட்டை விளைக்கின்

றது. அதனல் சுவாசப்பை விரைவில் கெட்டுவிடுகின்றது. ஆதலால், புகையிலையை எந்த வகையிலும் உபயோகப்படுத்தாமலிருப்பதே நல்லது. இப்போது சில தேசங்களில் சுருட்டு முதலானவைகளைச் சிறுவர்களுக்கு விற்கலாகாது என்று துரைத்தனத்தார் சட்டம் ஏற்படுத்தியிருக்கின்றனர். இவ்வாறு நம் நாட்டிலும் சட்டம் விதிப்பது நலமாகும்.

7. முகம்மது நபி

முஸ்லீம்கள் அனைவரும் முகம்மதுநபியின் மதத்தைப் பின்பற்றினவர்கள். அரேபியா, துருக்கிஸ்தானம், மத்திய ஆசியா, ஆப்கானிஸ்தானம், இந்தியா முதலான பல நாடுகளிலும் முஸ்லீம்கள் வாழ்ந்து வருகின்றார்கள். முகம்மது நபி, இவ்வாறு பற்பல நாடுகளிலும் வாழும் பல்லாயிரக் கணக்கான மனிதர்களால் பின்பற்றப் படுகின்ற மதஸ்தாபகராவர். ஆதலால், அவரைப்பற்றிச் சில வரலாறுகளையாவது நாம் அறிந்துகொள்வது அவசியமாகும்.

முகம்மது, அரேபியாவிலுள்ள மக்கா என்னும் பட்டணத்தில் கி. பி. 570ஆம் ஞு ஆகஸ்டு மீ 29உ யில் அவதாரம் செய்தார். அவர் தகப்பனர் அப்துல்லா என்னும் பெயருடையவர்; தாயார் ஆமீனுபீவி என்பவர். அவர்கள் மிகவும் வறியவர்களா யிருந்தார்கள். முகம்மது கருப்பத்தில் இருக்கும் போதே அவர் தகப்பனர் மேலுலகம் அடைந்தார். அதனல், முகம்மதுவை அவர் பாட்டனர் அப்துல் முத்தலிப் என்பவர் மிக்க அன்போடு பாராட்டி வளர்த்து வந்தார்.

முகம்மது, இளமைப்பருவத்திலேயே எல்லாரும் கொண்டாடத்தக்க நற்குண நற்செயல்கள் வாய்ந்து விளங்கினர். அதனல், அந்நகரத்தவர், அவரை மிகவும் விரும்பிப்

பேணிவந்தனர். ஆயினும், முகம்மது பிறருடைய உதவியை நாடாமல், தாமே தொழில் செய்து பிழைக்க எண்ணினர். அதனால், அவர், முதலில் ஒட்டகங்களை மேய்த்துக்கொண்டிருந்தார்; பின்னர், சிறு சிறு வியாபாரங்களை மேற்கொண்டு, காலங் கழித்துவந்தார். அப்பொழுது கதீஜா என்னும் செல்வி, வாணிகம் செய்வதில் அவருக்கிருந்த திறமையை அறிந்து, அவரை விரும்பி அவருக்கு வாழ்க்கைப்பட்டார்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கிணங்க, முகம்மது இளமைப்பருவத்திலேயே கடவுளிடத்துப் பக்தி மிகுந்தவரா யிருந்தார். நாளடைவில், பக்தி முதிர்ந்து பெருகியது. அதனால் அவர், அடிக்கடி ஹிரா என்னும் மலைக்குப் போய், அங்குள்ள குகையிலிருந்து கடவுளைத் தியானஞ் செய்துகொண்டிருந்தார். அவர்மனம், வேறு எண்ணங்களிற் செல்லாமல், இறைவனையே நோக்கப் பழகியது. இவ்வாறு தியானம் செய்து வருகையில், நாற்பதாம் வயதில் அவருக்குக் கடவுளருளால் திவ்யதரிசனம் கிடைத்தது. அப்பொழுது அவர் நபி என்னும் பெயருடன் விளங்கினர். கடவுளிடம் நற்போதனைகளைப் பெற்று அவற்றை மாந்தருக்கு அறிவிப்பவர் நபியாவர். கடவுளால் அவருக்கு அருளிச்செய்யப்பட்ட விஷயங்களை யெல்லாம் ஒருங்கு சேர்த்து எழுதப்பட்ட நூலுக்குக் குர்ஆன் என்று பெயர்.

முகம்மது, நபியான பின்பு, தமது மதத்தை எல்லோருக்கும் அறிவிக்க எண்ணி அதில் முயன்றார். முதலில் தம் நாட்டில் வாழ்ந்த மக்களுக்குத் தமது கொள்கையை உபதேசத்தினல் அறிவித்து வந்தார். அக்காலத்தில், அந்நாட்டினர் பல்வேறு கடவுளரை வணங்கி வழிபட்டு வந்தனர்; கடவுள் ஒருவரே என்னும் எண்ணம் அவர்கள் மனத்தில்

வேறொன்றி இருக்கவில்லை. அதனால், 'அல்லாவைத் தவிர வேறு தெய்வம் இல்லை' என்று முகம்மதுநபி கூறிய கொள்கையை மாந்தர் மனங்கொள்ள மறுகினர். பேரறிவு வாய்ந்த கதீஜாப் பிராட்டியாரே முதல்முதலில் அவர் மதத்தை மேற்கொண்டார். அவர், தம் கணவர் கொண்ட கொள்கைக்குத் தம் உடலாலும் பொருளாலும் உதவி செய்துவந்தார். அதன்பின்பு, அலி, அபுபக்கர், உமர், உஸ்மான் முதலானவர் பலரும் முகம்மதுநபியின் மதத்தைத் தழுவலாயினர்.

மக்காவில் வசித்தவர், முதன்முதலில் முகம்மதுநபியின் மதத்தை வெறுத்தனர்; அதனால், அவரைத் துன்புறுத்தவும் கொலை செய்யவும் துணிந்தனர். பெருங்கூட்டத்தினர் நபியைப் பின்பற்றியதைக் கண்டு அனைவரும் மனம் பொறாது பகைத்தனர்; அதனால், அவருக்குத் துன்பம் இழைத்து வந்தனர். அப்பொழுது, நபிநாயகர் அங்கிருந்து மதினாவுக்கு ஹிஜரத் செய்தார். ஹிஜரத் என்பது, பிரயாணம் செய்தல் எனப் பொருள் படும். ஹிஜரி என்னும் முஸ்லீம்ஆண்டும், அக்காலத்திலிருந்தே வழங்குகின்றது. முகம்மதுநபி மதினாவை யடைந்ததன் பின்னர் பெரும் போர்கள் நடந்துகொண்டே யிருந்தன. அவற்றில், நபி நாயகரைச் சார்ந்த சிலர் கொலையுண்டன ராயினும், அவருக்கே வெற்றி யுண்டாயிற்று. கடைசியில், மக்கா நகரம் முகம்மதுவின் வசமாயிற்று. அதன் பின்னர், அரபி தேசம் முழுவதும் அவருக்குக் கீழ்ப்பட்டது.

இவ்வாறு முகம்மதுநபி மதஸ்தாபகராகவும் அரசராகவும் விளங்கினராயினும், அப்பதவிகளால் அவர் செருக்கு அடைந்தாரல்லர்; ஆடம்பரமான வாழ்க்கையை அவர் கைக்கொள்ளவில்லை; வாழ்நாள் முழுவதும் எளிய வாழ்க்கையையே

மேற்கொண்டு, பிறர்க்கு நன்மை செய்து வாழ்ந்தார். நபிநாயக ரின் வாழ்க்கை நிலைமையைப் பற்றி இங்கே சிறிது கூறுவோம்:

நபிநாயகர் வாற்கோதுமை மாவினுற் செய்த ரொட்டி சாப்பிடுவது வழக்கம். சில காலங்களில் அவர் வீட்டில் மாதக் கணக்காக அடுப்பு மூட்டுவதில்லையாம்! நபிப்பெருமான் பேரீச்சம்பழத்தைத் தின்று, நீர் பருகிப் பலநாட்கள் கழிப்பர். அவர், மிகச் சாதாரணமான முரட்டு உடைகளையே உடுத்து வார். 'பரிசுத்தமான வாழ்க்கையே மனிதனுக்கு அழ கான உடை' என்பது அவர் கொள்கை. இரவில், மயிரடர்ந்த தோலின்மேல் படுத்து உறங்குவார்; சில நாட்களில் கோணித் துண்டுகளை மடித்துப் பரப்பி, அவற்றின்மேல் படுத்துக் கொள்வார்.

முகம்மதுநபி வசித்து வந்த மனையின் சுவர்கள் மண் ணுல் அமைந்தவை; கூரை, ஈச்சமரத்தின் ஓலையாலும், ஒட்ட கத்தின் மயிராலும் வேயப்பட்டிருந்தது. மேன்மை தங்கிய உமர் என்பவர், ஒரு நாள் முகம்மதுவின் அறைக்குட் போய்ப் பார்த்தார். அங்கே, அவர், கயிற்ருல் பின்னப்பட்ட கட்டி லில், விரிப்பு ஒன்றும் இல்லாமல் படுத்துக்கொண்டிருந்தார். கயிறுகள் அவருடைய மென்மையான திருமேனியில் நன்ருகப் படிந்திருந்தன. அதைப் பார்த்ததும், உமர் ஆற்றவொண் ணுத் துயரால் வருந்தி அழுதார். அதைக்கண்ட நபி, 'இவ் வுலக வாழ்க்கை அரசர்களுக்கும் சக்கரவர்த்திகளுக்குமே பெரிதா யிருக்கட்டும்: நாம் நிலையான இன்பத்தைத் தேடு வோம்' என்று கூறித் தேற்றினர். இவற்ருல் அவருடைய எளிய வாழ்க்கையும், அதில் அவருக் கிருந்த திருப்தியும் விளங்குகின்றன அல்லவா? இனி, அவருடைய பேரருளை விளக்கத்தக்க சில வரலாறு கூறுவோம்:

சப்வான் என்பவரின் ஏவலால் உமைர் என்பவர், நபி நாயகரைக் கொல்லத் துணிந்தார். அதற்காக அவர், தம் வாளில் நஞ்சிட்டுச் சித்தஞ் செய்கையில், அச்செயல் வெளிப் பட்டுவிட்டது. அவரைப் பிடித்துப் பிணித்துக் கொண்டுபோய் நபியின் திருமுன் நிறுத்தினர். ஆனால், அருள்வள்ளலாகிய நபி, அவருக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து விடுத்தார். பின்னர், தம் நண்பன் சப்வானையும் மன்னிக்கவேண்டும் என்று அவர் வேண்டிக்கொண்ட போது, நபிநாயகர் அவ்வாறே அருள்புரிந் தார்.

நபிநாயகரின் திருமகளார் சிவிகையிற் சென்ற போது, ஹிபார் என்பவன் அவரைக் குத்திக் கீழே வீழ்த்தினான். அப் பொழுது அவ்வம்மையார் கருவுற்றிருந்ததனால் அக்கருவும் சிதைந்து போயிற்று; அவரும் நோயால் வருந்திச் சில நாட் களில் உயிர் துறந்தார். பின்பு, மக்கா பிடிபட்ட பொழுது, ஹிபார் என்பவனுக்குக் கொலைத்தண்டனை விதித்து, அதனைப் பறை யறைந்து தெரிவித்தனர். அவ்வாணையைக் கேட்டதும் ஹிபார் என்பவன் அஞ்சி நடுநடுங்கி விரைந்து சென்று, நபி நாயகரைச் சரண் அடைந்தான். அவர் அவனுக்கு உயிர்க் கொடை நல்கிக் காத்தருளினார். இவ்வாறே நபிநாயகர், தம் பகைவர் பலரைக் காத்து அருள்புரிந்துள்ளார்.

பிள்ளைகளே, முகம்மதுநபியின் பேரருளின் தன்மையை அறிந்தீர்களல்லவா ? இத்தகைய பெருங்குணங்கள் எல்லாம் அவரிடம் நிலைபெற்று விளங்கினதனாலேதான், அவர் கொள்கையைப் பலரும் பின்பற்றலாயினர். அவர் வரலாறுக ளெல்லாம் நன்மை தருவன வாதலால், அவைகளை நாம் அறிந்து கொள்வது நலம்.

8. தொழிற் கல்வி

கல்வி, நம் நாட்டில் எல்லா இடங்களிலும் பிறைச்சந்திரன் போல விருத்தியாகி வருகின்றது. ஒவ்வோர் யாண்டிலும் ஆயிரக்கணக்கான மாணவர் பட்டதாரிகளாய்க் கலாசாலை களினின்று வெளிவருகின்றனர். ஆயினும், கல்வி கற்பது அறிவு வளர்ச்சியின் பொருட்டே என்னும் கொள்கை மாத்திரம் வரவரக் குறைந்துவிட்டது. இக் காலத்தில் உத்தியோகத்தினை நாடியே கல்வி பயில்கின்றனர். ஆதலால், மாணவர்கள் கல்வி கற்றுப் பட்டம் பெற்றதும், அரசியல் துறைகளில் ஏதேனும் ஒரு பதவி பெற முயல்கின்றனர். சிலருக்கு அரசாங்கத்தில் வேலை கிடைப்பினும், பலர் அது கிடைக்கப் பெறாது வருந்துவதை நாம் கண்கூடாகக் காண் கின்றோம். தமக்கிருந்த நிலங்களையும் பிற பொருள்களையும், தொலைத்துக் கல்வி பயின்று, யாதொரு தொழிலும் இன்றி வருந்துகின்றவர் பலர். ஒவ்வோர் யாண்டிலும் பட்டம் பெற்று வெளியேறும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக் கெல் லாம் அரசாங்கத்தில் பதவி கிடைப்பது எங்ஙனம்? ஆதலால், கல்வி பயின்று தேர்ந்தவர்கள், பிறரைச் சரணடையாது, தாமே பிழைப்பதற்கான வழி யாது என்பதைப் பற்றி ஆராய்வது அவசியமாகும்.

நமது நாட்டில் முக்கியமாக நடந்துவரும் தொழில்கள், உழவும் நெசவும் வாணிகமுமாம். இத்தொழில்களைப் புரி பவர், பிறருக்குக் கீழ்ப்படியாமல் சுதந்தரவான்களாக வாழ் கின்றனர். ஆதலால், இவை மேன்மையான தொழில்க ளாகும் என்பதில் ஐயமில்லையன்றோ? ஆனால், இத்தொழில் கள் நம் நாட்டில் நல்ல முறையில் நடைபெறவில்லை.

வியவசாயம், வாணிகத்தினும் சீர்கேடான நிலைமையில் தாழ்வடைந்துகொண்டே வருகின்றது. இவ்வாறு கீழ்நிலைமையை அடைந்து வருவதற்குக் காரணம் யாது? நம் நாட்டுக் கல்வியாளர்கள் வியவசாயத்தில் மனஞ் செலுத்தாமையேயாம். அவர்கள், உழவுத்தொழில் இழிவானது என்று தவறாகக் கருதி, அத்தொழிலாளரையும் அவமதிக்கின்றார்கள். இஃது அறிவின்மையே! அனைவர்க்கும் பற்றுக்கோடாய் இருப்பவர் உழவரே யாவர். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்று திருவள்ளுவரும், 'சீரைத் தேடின் ஏரைத் தேடு' என்று அவ்வையாரும் கூறியுள்ளார். நம் நாட்டில் பெரும்புலவராய் விளங்குகின்ற ரவீந்திரநாத தாகூர் என்பவர், 'உழுதொழில் புரிபவனிடத்தில் கடவுள் விளங்குகின்றார்' என்று தமது நூலில் கூறியிருக்கின்றார். இத்தகைய மேம்பாடுடைய தொழில், இப்போது கல்வியறிவில்லாத சாமானிய மனிதர்களால் கையாளப்பட்டு வருகின்றது. கற்றுணர்ந்தவர்கள் அத்தொழிலை மேற்கொள்வார்களாயின், அது சிறந்த முறையில் நடைபெற்றுப் பெரும்பயன் அளிப்பதாகும்.

நாம், நமக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் அயல் நாட்டாரிடமிருந்தே எதிர்பார்க்கின்றோம். படிக்கும் புத்தகங்களுக்கான காகிதங்கள், எழுதும் கருவிகள், கத்திகள் முதலாக எல்லாப் பொருள்களும் பிற நாடுகளிலிருந்தே பெரும்பான்மையும் தருவிக்கப்படுகின்றன. நமக்கு இன்றியமையாதனவாயிருக்கும் பொருள்களையாவது நாம் செய்கின்றோமா, இல்லையே. நமது நாட்டில் விளையும் பருத்தியை மேல் நாட்டவர் குறைந்த விலைக்குக் கொண்டுபோய்ச் சுத்தஞ் செய்து, நூல் நூற்று, நேர்த்தியான உடைகள் நெய்து நமக்கே அதிக விலைக்கு விற்றுப் பொருளீட்டுகின்றனர்; இங்

கிருந்து கொண்டுபோகும் தோலைப் பதனிட்டு அழகான பல பொருள்களாகச் செய்து, அவற்றை இங்கேயே அனுப்புகின்றனர். நாம் மிகவும் அதிக விலை கொடுத்து அவற்றைப் பெறுகின்றோம். இந்நாட்டில் விளையும் நிலக்கடலை எங்கே போகின்றது? அது, பின்னர் எவ்வெப் பொருள்களாக மாறி இங்கு வருகின்றது என்பதை எண்ணிப் பாருங்கள். நிலக்கடலையெண்ணெயினால் மெழுகுவத்தி முதலான பல பொருள்கள் செய்யப்படுகின்றன. இவ்வாறே நம் நாட்டில் விளையும் பலவகைப் பொருள்களும் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நம்நாட்டில் உண்டாகும் பொருள்களை நமக்கு வேண்டிய பண்டங்களாக நம்மவர்கள் ஏன் செய்யலாகாது? நம்முடைய கல்வியாளர்கள் இத்துறைகளில் தங்கள் கவனம் செலுத்துவதில்லை; இழிவானது என்று அறிஞரால் கருதப்படுகின்ற சேவகத்தொழிலே மேன்மையுடையது என மாறாகக் கருதுகின்றனர்; அஃதன்றி, பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு வேண்டும் பொருளும் நம்மிடத்தில் இல்லை என்று காரணம் கூறுகின்றனர்.

கைத்தொழில்கள் நம் நாட்டில் ஓங்கி வளர்வதற்குச் செய்ய வேண்டுவது யாது எனின், கூரிய அறிவும் தொழில்களில் நோக்கமும் உள்ள மாணவர்கள் பிறநாடுகளிற் சென்று தொழிற்கல்வியில் பயின்று வரவேண்டும்; அதற்குப் பெருஞ்செல்வர்கள் முன்வந்து பொருளுதவி புரியவேண்டும். அன்றியும், கல்வியில் நாட்டமுள்ள மாணவர்களை மட்டும் உயர்தரக் கல்வி பயில்வித்து, ஏனைய மாணவர்களைத் தொழிற்கல்வியிற் பயிற்ற வேண்டும். அதற்குத் தொழிற்கல்விச்சாலைகள் நம் நாட்டில்எங்கும் நிலவ வேண்டும். அரசாங்கத்தவர்களேயன்றி, நம் நாட்டுப் பெருஞ்செல்வர்களும் அதில் நாட்டங் கொள்ள

வேண்டும். மாணவர்கள் தொழிற்கல்வியின் மேன்மையையும், அதனால் நாட்டிற்கு ஏற்படும் வளத்தையும் உணர்ந்து, தொழிற்கல்வி கற்றுக் கைத்தொழில் செய்வதே தாம் தம் நாட்டிற்குச் செய்யும் உதவியாக எண்ணி, அதில் ஈடுபட வேண்டும்.

9. தமிழரும், தமிழ் மொழியும்

பழைய தமிழ் மக்களைக் குறித்துச் சிலவற்றை முன்னொரு பாடத்தில் படித்தோம் அல்லவா? இங்கே நாம், நம் முன்னோர்களையும், நமது மொழியையும் பற்றி வேறு சில செய்திகளை ஆராய்வோம்:

நம் நாடு, முற்காலத்தில், தமிழகம் என்று வழங்கப் பட்டது. அது, மிகப் பழையகாலத்தில் கிழக்கே ஜாவா வரையிலும், மேற்கே மடகாஸ்கர் வரையிலும் பரவி யிருந்தது என்று சரித்திர ஆசிரியர் கூறுகின்றனர். இப்போது மலையாள மொழி வழங்கும் நாடும் பண்டைத்தமிழகத்தில் உட்பட்டிருந்தது.

முற்காலத்தில் தமிழ் நாடு, சேர, சோழ, பாண்டியர்கள் என்னும் முடிவேந்தர் மூவராலும் பல சிற்றரசர்களாலும் ஆளப்பட்டு வந்தது. வள்ளல்கள் பலர், புலவருக்கும் இரவலருக்கும் வரையாது நல்கிப் புகழ்படைத்து விளங்கினர். மக்கள், கல்வி கேள்விகளில் தேர்ந்து, உழவு, வாணிகம், கைத்தொழில் முதலான பல துறைகளிலும் பயின்று பொருளீட்டி வாழ்ந்து வந்தனர். அவர்கள், கிரீஸ், உரோம் முதலான பிறநாடுகளில், பெரிய வர்த்தகர்களுடன் வாணிகம் செய்து வந்தார்கள். அந் நாடுகளிலிருந்து வந்த அழகிய பொருள்களும், இனிய மது

வகைகளும் நம் நாட்டில் வழங்கி வந்தன. நம் நாட்டிலிருந்து, மிளகு முதலான பொருள்களை அவர்கள் வாங்கிக்கொண்டு போயினர்.

தமிழ்மக்கள், இல்வாழ்க்கையைச் சிறப்பாக நடத்தி வந்தார்கள். அவர்கள், போர்முறைகளிற் பயின்று தேர்ந்திருந்தார்கள். போரில் புறங்காட்டி ஓடாமல் முன்னின்று பொருது உயிர்துறந்த சிறந்த வீரர்களுக்குக் கல்நட்டு அவரை வணங்கி வந்தார்கள். அதனால், பண்டைத் தமிழர் வன்மையும் திண்மையும் படைத்து, ஒப்புயர்வற்ற வீரராய் விளங்கினர். அவர்கள் எல்லாத்துறைகளிலும் மேம்பாடு அடைந்து விளங்கியது போலவே, கல்வித்துறையிலும் சிறந்த பயிற்சி பெற்று விளங்கியிருந்தார்கள்.

பாண்டிய மன்னர் ஒரு காலத்தில், பெரும்புலவர் பலரைக் கூட்டிச் சங்கமொன்று நிறுவிச் செந்தமிழை வளர்த்து வந்தனர். புலவர், பல செய்யுட்களை இயற்றித் தமிழ் அன்னையை மகிழ்வித்தனர். பண்டைக்காலத்துப் புலவர்கள் இயற்றிய பாட்டுக்களே இப்பொழுது சங்கச் செய்யுட்கள் என வழங்குகின்றன. அவற்றால், தமிழரின் இல்வாழ்க்கை முறை, போர்த்திறன், வீரம், வண்மை, நட்பாளுந் திறன், வாணிகம், கைத்தொழில் முதலான பல செய்திகள் நமக்கு விளங்குகின்றன. அந் நூல்களிற் கூறப்பட்டுள்ள வரலாறுகள் உண்மையானவைகளே என்று சரித்திர ஆசிரியர் துணிகின்றனர்.

பண்டைத் தமிழர்களுக்கு, சரித்திரம் எழுதுவதில் சிறிதும் அவா இல்லை என்று கூற இயலாது. வீரர்களுக்கு நடும் கல்லின்மேல் அவர்கள் பெயரும் திறமும் பிறவும் எழுதுவது வழக்கம். இதனால், அவர்களுக்குச் சரித்திரச்

சுருக்கம் எழுதுவதிலேனும் அவா உண்டு என்பது விளங்கு மன்றோ? ஆயினும், அவர்கள், வீரர்கள், அரசர்கள் முதலான வர்களின் வரலாறுகளை எல்லாம் தொகுத்து எழுதிவைக்க வில்லை. பிற்காலத்தில், புலவர்களைப் பற்றியும் அரசர்களைப் பற்றியும் பல வரலாற்றுப் பகுதிகள் எழுதப்பட்டன. ஆயி னும், அவற்றில் உண்மையான வரலாறுகளோடு சில கற்பனைக் கதைகளும் சேர்ந்திருக்கின்றன.

தோன்றுதொட்டே பெருஞ் சிறப்புற்று, இலக்கியம், இலக்கணம் முதலான வளம் படைத்த நம் தமிழ்மொழியை, நாம் நன்கு பயில வேண்டும்; அங்ஙனம் பயின்று, உண்மை வரலாறுகளை ஆராய்ந்தறிந்து, சிறந்த செயல்கள் செய்து, மேன்மை யடைவோமாக.

10. அவ்வையார்

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்னும் புத்தகங்களை நீங்கள் படித்திருக்கின்றீர்க ளல்லவா? இவற்றை இயற்றியவர் அவ்வையார். அவரைப் பற்றிச் சில வற்றையேனும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். மற்றும் சில விஷ யங்களை இங்கே கூறுவோம்:

அவ்வையார் பெண்பாலார்; கவி பாடும் திறமை வாய்ந்து விளங்கினவர். அவர், ஒரூரில் நிலையாக வாழ்ந்தவரல்லர்; தமிழ்நாட்டில் பலவிடங்களிலும் சஞ்சாரம் செய்துகொண் டிருந்தவர் என்பது, அவரைப் பற்றிய கதைகளால் விளங்கு கின்றது. அவ்வையாரைக் குறித்து வழங்கும் கதைகள் மிகப் பல. அவற்றுட் பல கதைகள், அவர், கடவுள்-தன்மை வாய்ந்தவராகக் கூறுகின்றன. சில கதைகள், அவர் பாடியன

எல்லாம் பலிக்கும் என்று பகர்கின்றன. அத்தகைய கதைகளுள் ஒன்றை இங்கே கூறுவோம்:

சோழநாட்டில் அம்பர் என்னும் ஊர் ஒன்று உளது. அவ்வூரில், சிலம்பி என்னும் பெயருடைய பெண் ஒருத்தி இருந்தாள். அவள் யாருமில்லாத வறியவள். ஆதலால், பஞ்சு நூற்றுப் பணம் தேடிக் காலங் கழித்துவந்தாள். அக்காலத்தில் சோழ நாட்டில் கம்பர் என்னும் பெரும்புலவர் புகழ்பெற்று விளங்கினர். அவர்தாம், இராமாயணத்தைத் தமிழ்மொழியில் இயற்றியவர். அதனல், அவரைக் கவிச்சக்கரவர்த்தி என்று சிறப்பித்துக் கொண்டாடுகின்றனர். அப்பெரும்புலவர் பாடும் பாட்டுக்களால் மிக்க பயன் உண்டாகும் என்று மாந்தர் கருதினர். அதனை அறிந்த சிலம்பி, அவர், தன்னைப் பற்றிப் பாடுவாராயின், அதனல் தனக்குப் பெருஞ் செல்வம் சேரும் என்று எண்ணினள். அதுமுதல், கம்பரிடம் ஒரு பாட்டாவது தான் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆர்வங் கொண்டாள்.

ஒருநாள் சிலம்பி, கம்பரைக் கண்டு, அவரடிகளில் வீழ்ந்து வணங்கி, 'பெருமானே, தேவரீர் தயை கூர்ந்து அடியாள்மேல் ஒரு பாட்டுப் பாடியருள வேண்டும்' என்று பணிவுடன் வேண்டிநின்றாள். அதனைக் கேட்ட புலவர், 'அம்மையே, யான் ஒரு பாட்டு இயற்ற வேண்டுமாயின், எனக்கு ஓராயிரம் பொன் தரவேண்டும். அவ்வாறு தந்தாலன்றி யான் கவி பாடுவதில்லை' என்று பகர்ந்தார். எவ்வாருயினும் அவரால் கவி பெற்றுக் கொள்ள விரும்பிய சிலம்பி, அதற்கு இயைந்து, தான் பல காலமாகப் பாடுபட்டுத் தேடிய பொன்னையும், தன்பால் இருந்த பொருள்களையும் எடுத்துக் கொடுத்தாள். அவையனைத்தும் ஐந்நூறு பொன்னே ஆயின. புலவர், அதனைப் பெற்றுக்கொண்டு,

'தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ தும் சோழ மண்டலமே'

என்று அரைப்பாட்டுப் பாடி, அதனை அவள் வீட்டுச்சுவரில் எழுதிவிட்டுச் சென்றனர்.

அரைப்பாட்டைப் பெற்ற சிலம்பி, தன் கைப்பொருள் எல்லாம் இழந்தும், கருத்து முற்றுப்பெறாமையால் மிகவும் மனம் வருந்தினாள். ஆயினும், பாட்டு முழுவதும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒரே கருத்துக் கொண்டு, அதற் காகப் பின்னும் பொருளீட்டத் தொடங்கினாள். ஆதலால், அவள் முன்போலவே பருத்தி நூற்பாளாயினாள்.

அவ்வாறிருக்கையில் ஒரு நாள், அவ்வையார் பசியால் வாடி, நடை தளர்ந்து, சிலம்பியின் வீட்டை யணுகினர்; வீட்டினுள் நூற்றுக்கொண்டிருந்த சிலம்பியை நோக்கி, 'அம்மா, பசிப்பிணி வருத்துகின்றது; சிறிது அன்னமிடு' என்று ஈனசுரத்தோடு கூறி வேண்டினார். சிலம்பி, அக் கிழவி யின் நிலைமை கண்டு மனமிரங்கி, 'பாட்டி, அகத்தில் அன்னம் இல்லை, சிறிது கூழ் இருக்கிறது; அதனை வார்க்கின்றேன், அருந்துவாயோ?' என்று இன்மொழியோடு இசைத்தாள். அவ்வையார், அவ் வறியவள் அன்பைப் பாராட்டி, 'அம்மா, பசிவேளையில் கூழேயாயினும் அமிர்தமாகும்; அதனையே தாமதியாது அளிப்பாய்' என்று கூறினார். உடனே சிலம்பி கூழைக் கரைத்து, அவருக்கு வேண்டுமளவும் வார்த்து உப சரித்தாள்.

கூழ் குடித்துக் களைதீர்ந்த அவ்வையார், அவள் வீட்டுத் திண்ணையிற் படுத்துச் சிறிது நேரம் தூங்கி யெழுந்தார். பிறகு, அங்கே சுவரில் எழுதியிருந்த அரைவெண்பாவைப்

படித்து, அதனைப் பற்றிச் சிலம்பியை வினவினர். அவளால் அதன் வரலாற்றை யறிந்து, அவ்வையார், 'அம்மா, ஐந்நூறு பொன் கொடுத்தும், இந்தப் பாட்டில் உன் பெயர் இல்லையே; நான் உன் பெயரை வைத்துப் பாடிப் பாட்டை முடிக்கிறேன்' என்று கூறி,

—' பெண்ணவாள்
அம்பர்ச் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு'

என்று, மற்ற அரைப்பாட்டும் பாடி முடித்து, அங்கு நின்று அகன்றார்.

உடனே, சிலம்பிக்குக் கால்களில் பொற்சிலம்பு அணியத் தக்க பெருஞ் செல்வம் உண்டாயிற்று. சிலம்பி அதனைக் கண்டு, கிழவியின் கவித்திறத்தையும் வாக்குப் பலிதத்தையும் புகழ்ந்து கொண்டாடினள்; 'கம்பருக்கு ஐந்நூறு பொன் ஈந்தும் எனக்குச் சிறிதும் நன்மை உண்டாகவில்லையே! அநியாய மாகப் போயிற்றே! இந்த முதியவளுக்குக் கூழ்தானே வார்த் தேன்; வயிறார அன்னமாவது இட்டேனில்லையே! இவளா லன்றோ எனக்குப் பெருஞ் செல்வம் உண்டாயிற்று; நான் இவளுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்!' என்று கூறி அவ்வையாரை வாழ்த்தினள்.

பிள்ளைகளே, அவ்வையாரைப் பற்றி இவ்வாறு வழங்குங் கதைகள் பல உள. அதனால், அவர் பெயர் அறியாதவர் நம் நாட்டில் எவரும் இரார் என்னலாம்.

11. நகர பரிபாலன சபை

[நகர பரிபாலன சபையின் அங்கத்தவ ராவதற்கு நிற்பவர் 'வோட்'டிற்காக வந்து போனபின், மகனுக்கும் தகப்பனுருக்கும் நடந்த சம்பாஷணை]

மகன்:—அப்பா, இவர்கள் இன்று காலையிலும் உங்களைத் தேடி வந்தார்கள்; இப்பொழுதும் வந்தார்களே; ஏன் ?

தகப்பனுர்:—அவர்களா, வோட்டுக்காக வந்தார்கள்.

மக:—'வோட்' (Vote) என்ருல் என்ன, அப்பா ?

தக:—'வோட்' என்ருல் தேர்ந்தெடுப்பது. அது, நமக்குள்ள சுதந்தரத்தைக் காட்டுவதாகும். அதனை 'வாக்குரிமை' என்றும் சொல்லலாம்.

மக:—அப்படியா ! இப்போது 'வோட்டு' எதற்கு ?

தக:—நகர பரிபாலன சபைக்கு.

மக:—நகர பரிபாலன சபை என்ருல் என்ன ?

தக:—அதுவா, அதைப்பற்றி நீ தெரிந்துகொள்ள வேண்டியது அவசியந்தான்; சொல்லுகிறேன், கேள்.

மக:—சொல்லுங்கள் ; நான் கவனத்தோடு கேட்கிறேன்.

தக:—நாம் குடியிருப்பது ஒரு நகரம் அல்லவா ? இந் நகரத்தில் பல்லாயிரம் மனிதர் வாழ்கின்றனர். நகரவாசிகள் ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய சௌகர்யங்களைத் தாமே செய்துகொள்வது எளிதன்று. அதனுல், அவர்கள் சுகமாக வாழ்வதற்கு வேண்டிய முறைகளை ஏற்படுத்த ஒரு சபை அமைக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு நகர பரிபாலன சபை என்று பெயர். அதை 'முனிஸிபாலிட்டி' (Municipality) என்று வழங்குவர். சென்னபட்டணம், பம்பாய், கல்கத்தா போன்ற

பெரிய நகரங்களில் அவ்வாறு ஏற்பட்டுள்ள சபை களுக்குக் கார்ப்போரேஷன் (Corporation) என்று பெயர்.

மக:—சரி, அப்பா; சிறிய ஊர்களுக்கு இப்படிப்பட்ட சபை வேண்டுவதில்லையோ ?

தக:—மிகச் சிறிய ஊர்களுக்கு இப்படிப்பட்ட சபை அவசிய மில்லை; பெரிய ஊர்களிலெல்லாம் சபை ஏற்படுத்தப்பட் டுள்ளது. ஆனால், அதற்கு யூனியன் என்று பெயர்.

மக:—அப்பா, நகர பரிபாலன சபை எவ்வாறு ஏற்படுத்தப் படுகின்றது ?

தக:—ஒரு நகரத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அந்தப் பிரிவுகளுக்கு வார்டு (Ward) அல்லது டிவி ஷன் (Division) என்பது பெயர். ஒவ்வொரு பிரிவி லிருந்தும் குறிப்பிட்டவாறு வேண்டிய அங்கத்தவர்களை, அப்பிரிவில் வாழ்பவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள், ஜனங்களின் பிரதிநிதிகளா யிருந்து, சபைகூடி நகரத்தைப்பரிபாலித்து வருகிறார்கள். இந்தச் சபைக்குத் தலைவர் ஒருவர் உண்டு. அவருக்குச் சேர்மன் (Chairman) அல்லது பிரசிடேண்ட் (President) என்று பெயர்.

மக:—அவரை நியமிப்பது யார், அப்பா ?

தக:—சபையின் அங்கத்தவர்களே தங்களுள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

மக:—சரி, அப்பா; நேற்று இரவில் சிலபேர்கள் வந்தார்களே, அவர்கள் எதற்காக வந்தார்கள் ?

தக:—அவர்கள் வேறு கக்ஷியைச் சேர்ந்தவர்கள்; அவர்களும் வோட்டுக்காகத்தான் வந்தார்கள்.

மக:—இவர்கள் எல்லாரும் இப்படி அலைகிறார்களே; இவர்களுக்கு என்ன வரும்படி கிடைக்கும்?

தக:—வரும்படி ஒன்றும் இல்லை. இவர்கள் ஜனசமூகத்தின் நன்மைக்காக உழைக்க வந்திருப்பவர்கள்.

மக:—அப்படியா, சரி; நீங்கள் யாருக்கு 'வோட்' கொடுக்கப் போகிறீர்கள்?

தக:—நான் இன்னும் தீர்மானம் செய்துகொள்ளவில்லை; யோசித்துத்தான் முடிவு செய்யவேண்டும்.

மக:—யோசிப்பது ஏன், அப்பா? வோட்டு யாருக்குக் கொடுத்தால்தான் என்ன?

தக:—அப்படியா நினைக்கிறாய், அது தவறு. பொது நன்மையைக் கருதி உழைக்கும் உத்தமர்களுக்கே வோட் கொடுக்கவேண்டும். ஏனென்றால், நாம் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளே நம் நகரத்தைப் பாதுகாக்க வேண்டியவர்களாகிறார்கள். அன்றியும், வேறு சில முக்கிய காரியங்களும் அவர்கள் செய்ய நேரும். நாம் தகுதியுள்ளவர்களைத் தேர்ந்தெடுக்காவிட்டால், நமக்குக் கிடைத்துள்ள வாக்கு உரிமையை வீணாக்கினவர்கள் ஆவோம்.

மக:—இந்தச் சபையார் என்ன செய்கின்றனர்?

தக:—இச்சபையார், செய்யவேண்டிய பெருங்காரியங்கள் பல. முதன்மையாக, நகரத்தில் தெருக்களை நன்றாக அமைத்துச் செப்பம் செய்து, குப்பை கூளம் முதலானவைகளை அப்புறப்படுத்துவிக்கின்றனர். இருட்டுக்காலத்தில் விளக்குகள் போடுவித்து வெளிச்சம் உண்டாக்குகின்றனர். நகர மாந்தர்களுக்கு நன்னீர் கிடைப்பதற்கான வசதிகள் செய்கின்றனர். தொத்து நோய்கள் நகரில் பரவாதபடி சுகாதாரங்களைக் கவனித்து வருகின்றனர்.

பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி, ஏழைச் சிறுவரும் சிறுமியரும் கல்வி கற்குமாறு உதவி செய்கின்றனர். வைத்தியசாலைகளை அமைக்கின்றனர். பொதுவாக நகரமாந்தர்களுக்கு வேண்டிய எல்லாச் சௌகரியங்களையும் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

மக:—இவர்கள் தம் கடமைகளைச் சரியாகச் செய்யாவிட்டால் என்ன செய்வது?

தக:—அவர்களை நகரமாந்தர் மறுமுறை தேர்ந்தெடுக்கக் கூடாது.

மக:—அப்படியானால் மறுமுறை தேர்ந்தெடுப்பது எப்பொழுது?

தக:—மூன்று வருடத்திற்குப் பின்புதான்.

மக:—சரி; இந்தச் சபைக்குப் பொருள் எப்படிக் கிடைக்கின்றது?

தக:—நகர மாந்தர்களிடமிருந்து வீட்டு வரி, குப்பை வரி, தண்ணீர் வரி, வண்டி வரி, உத்யோக வரி முதலான பல வரிகளால் பொருள் வசூல் செய்கின்றனர். அன்றியும், துரைத்தனத்தாரும் பொருள் உதவுகின்றனர்.

மக:—சரி, அப்பா, நமக்கு வேண்டியவைகளை நாமே அமைத்துக்கொண்டு, நம்மைப் பாதுகாத்து வருகின்றோம்; இவ்வளவுதானே!

தக:—என்ன, இப்படிச் சொல்லுகின்றாய்! இஃது, எளிமையான காரியமா? ஒருவகையான 'சுய ஆட்சி' அல்லவா?

மக:—அப்படியா, சரிதான்; இப்போதுதான் எனக்கு முனிஸிபல் ஆபீஸைப்பற்றிய விவரங்கள் தெரியவந்தன. நமக்கு இப்படிப்பட்ட சுய ஆட்சியைத் தந்தவர் யார்?

தக:—துரைத்தனத்தாரே இப்படிப்பட்ட உரிமையை நமக்குத் தந்தனர். ஆனால், இதற்குக் காரணகர்த்தரா யிருந்தவர் ரிப்பன் பிரபு என்பவர். அவர் 1880-ஆம் வருடத்தில் ராஜப்பிரதிநிதியாக வந்து ஆட்சி செய்த காலத்தில், இத்தகைய ஆட்சியை நமக்குத் தந்தார்.

மக:—அப்படியானால், நாம் அந்தத் தாராள சிந்தையுடைய ரிப்பன் பிரபுவையும் துரைத்தனத்தாரையும் வாழ்த்தி, இன்னும் பல நன்மைகளைப் பெற முயல்வோம்.

12. ஜப்பான் தேசத்து வீடுகள்

மாந்தர் பல்வேறு நாடுகளில் வசிக்கின்றனர். ஒவ்வொரு நாடும் இயற்கையமைப்பிலும் சீதோஷ்ணஸ்திதியிலும் வேறுபட்டிருக்கின்றது. அதனால், அந்தந்த நாடுகளில் வசிக்கும் மனிதர்களிடத்தும் சிற்சில மாறுபாடுகள் உண்டாதல் இயல்பு. மக்களின் உணவும், உடையும், இருக்கையும் அவர்கள் வாழும் நாட்டின் நிலைமைக்கேற்ப அமைந்திருக்கும்; இவ்வுண்மையை நாம் கண்கூடாகக் காணலாம். பாண்டி நாட்டில் கூரைவீடுகளுக்குப் பனையோலை வேய்கின்றனர்; வீட்டுச் சாமான்களுக்கும் பனைமரங்களை உபயோகப்படுத்துகின்றனர். மலையாள தேசத்தில் இருப்பவர்களோ, எல்லாவற்றிற்கும் தென்னைமரத்தையே பயன்படுத்துகின்றார்கள். பிற நாடுகளிலும் இவ்வாறே வேறுபாடுகள் காணப்படும். இவ்வகையில் ஜப்பான் தேசத்து வீடுகள் எப்படி அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றிச் சிறிது கவனிப்போம்:

ஜப்பான் தேசம் ஆசியாக் கண்டத்தை அடுத்துள்ள சிறிய தீவு. அங்கு வாழும் மாந்தர்கள் சுறுசுறுப்பும் ஊக்கமும் முயற்சியும் உள்ளவர்கள். அவர்கள் கல்வியிலும் கைத்

தொழிலிலும் நன்கு பயின்று, திறமையுற்றிருக்கின்றார்கள். ஆயினும், அவர்கள் குடியிருக்கும் வீடுகளின் நிலைமை, நமக்கு மிகவும் எளிமையானவையாகத் தோன்றும்.

ஜப்பான் தேசத்தில் மச்சு வீடுகளைக் காணுதல் அரிது. வீட்டுச்சுவர்கள் கல்லாலும் சுண்ணாம்பாலும் கட்டப் படுவன அல்ல; மெழுகு பூசிய கடிதங்களால் அமைக்கப்பட்டிருக்கும். வாயிற்புறத்தில் கடிதங்களால் அமைத்த திரைகளை இட்டிருப்பார்கள். இராக்காலங்களில், கனமற்ற மெல்லிய மரப் பலகைகளை அச் சுவர்களோடு சுவராக அமைத்துக்கொள்வார்கள். வீடுகளின் முக்கியமான உறுப்புக்கள், கூரையும், அதைத் தாங்கிக்கொண்டிருக்கும் தூண்களுமேயாகும்.

ஜப்பானில், வறியவர்களின் வீடுகள் நீளமான ஒரே அறையை உடையனவாயிருக்கும். இரவில், தங்களுக்கு வேண்டிய அளவாக இரண்டு மூன்று அறைகளைத் தடுத்துக்கொள்வார்கள். அதில் அவர்களுக்கு அதிக வேலையும் கஷ்டமும் இல்லை. கடிதங்களால் சமைத்த திரைகளை நெடுஞ்சுவர்களுக்குக் குறுக்கே வைத்துப் பல அறைகளை அமைத்துக்கொள்வார்கள்.

ஜப்பானியர்களுக்கு நல்ல காற்றும் வெளிச்சமும் மிகுதியாக வேண்டும். அதனால் அவர்கள், பகல்நேரத்தில் வீட்டின் தலைவாயிலைத் திறந்து வைத்திருப்பார்கள்; பொறுத்தற்கரிய வெயில் காய்ந்தால், அப்பொழுது ஒரு திரையை அங்கே தொங்கவிடுவார்கள். திரையில், அவ் வீட்டுத் தலைவன் பெயரைக் குறிக்கும் எழுத்துக்கள் பெரும்பாலும் எழுதப் பட்டிருக்கும்.

ஜப்பானியர், தம் வீடுகளில் வழங்கும் பொருள்களும் அதிக விலையில்லாதவைகளே. அவர்கள் மேஜைகளையோ நாற்காலிகளையோ உபயோகப்படுத்துதல் இல்லை; உணவு உண்

னும் வேளைகளில்மட்டும் முக்காலி போன்றவைகளைக் கை யாளுதல் உண்டு. ஒருவிதமான வைக்கோலாற்செய்த கனமான பாய்களை வீட்டில் விரித்திருப்பார்கள். அவை மெத்தைபோல மிருதுவா யிருக்கும். ஒருவகைப் புல்லாலமைத்த படுக்கையை அவற்றின்மேல் விரித்து, மரத் தலைக்கணைகளை வைத்துக் கொண்டு துயில்வது வழக்கம். அவர்கள் செருப்பு முதலான வைகளைத் தரித்துக்கொண்டு வீட்டிற்குள் நடப்பதில்லை.

ஜப்பானியர், வீடுகளில் வழங்கும் சாமான்கள் மிகச் சில. முப்பது ரூபாய் இருந்தால், ஒரு வீட்டிற்கு வேண்டும் பொருள்களையெல்லாம் வாங்கிக் கொள்ளலாம்; வறியவர் வழங்கும் பொருள்கள் அத்தொகைக்கும் குறைவான மதிப் புள்ளவையே.



[விருந்தாளிக்கு அமைத்துக் கொடுக்கும் அறை]

வீடுகளில் சாமான்கள் வைக்க வேண்டிய ஒழுங்கையும், பூக்களையும் பூங்கொம்புகளையும் அமைக்க வேண்டிய முறை யையும் ஜப்பானியச் சிறுமியர் நன்கு அறிந்திருப்பர். ஜப்பா

னியர், தம் வீட்டிற்கு வரும் விருந்தாளிக்கு ஓரறையை அமைத்துக்கொடுப்பர்; அவ்வறையின் திரைகளை நாடோறும் மாற்றுவர்; ஒவ்வொருநாளும் புதிய புதிய படங்களை அழகு பெற அமைத்து, புதிய மலர்களையும் மலர்க்கொம்பு களையும் ஒரு பாத்திரத்தில் செருகி வைப்பர்; இரவில், காகி தத்தினுற் சதுரமாகச் சமைத்த லாந்தரில் மெழுகுவர்த்தி வைத்து எரிப்பர்.

ஜப்பான் தேசத்தில், பெருஞ் செல்வர்களும் எளிய வாழ்க்கையையே மேற்கொண்டுள்ளார்கள். ஆயின், அவர்கள் இல்லங்களில் தூண்கள் முதலாயினவை மரத்தாற் சமைக் கப்பட்டுத் தங்கப்பூண் கட்டப்பெற்றிருக்கும்; அறைகளும் மரப்பலகைகளாலேயே அமைக்கப்பட்டிருக்கும். அந்தப் பலகைகள் அழகாக வர்ணம் பூசப்பட்டுப் பூங்கொடிகள் வரையப்பெற்றிருக்கும். அழகமைந்த சித்திரப்படங்கள் ஒவ்வோர் அறையிலும் தொங்கவிடப்பட்டிருக்கும். ஓர் அறையிலிருந்து மற்றோர் அறைக்குப் போகவேண்டுமாயின், இடையில் அமைத்துள்ள பலகைகளில் ஒன்றைத் தள்ளிக் கொண்டு போகலாம்.

ஜப்பான் தேசத்தவர்கள் வீடுகளை இவ்வாறு அமைத் துக்கொள்வது ஏன், தெரியுமா? அந்தத் தேசத்தில் பூமி யதிர்ச்சி அடிக்கடி உண்டாகின்றது. பூகம்பத்தினால் தரை குலுங்குகையில், கட்டடங்கள் அதிர்ந்து இடிந்து விழுந்துவிடு மல்லவா? வீடுகள், மாளிகைகளை உடையனவாயும் கற்களால் கட்டப்பட்டனவாயும் இருந்தால், அவற்றில் வாழ்பவர் களின் நிலைமை என்னுகும்! நினைத்துப் பாருங்கள். அன்றி யும், அங்நாட்டில் அடிக்கடி தீப் பற்றிக்கொள்வதும் உண்டு. ஜப்பானியர், நெருப்பை உபயோகப்படுத்துவதில் கவனக்

குறைவுள்ளவர். அன்றியும், விலைகுறைந்த விளக்குகளையும், தாழ்வான மண்ணெண்ணெயையும் வழங்குகின்றனர். அதனால், விளக்குகள் உடைகையில் எண்ணெயில் நெருப்புப் பற்றுவதனால், வீடுகளில் தீப்பிடித்துவிடும். வீடுகளை இவ்வாறு அமைத்துக் கொள்வதனால், அவை எரிந்து போயினும் அவர்களுக்கு மிக்க கெடுதல் ஏற்படுவதில்லை. அவர்கள் சில கால்களும் கடிதங்களும் கொணர்ந்து, ஒரு நாளுக்குள் நல்ல புது வீடு ஒன்று சமைத்துக்கொள்வார்கள். பெருஞ் செல்வர்கள் தீக்கோளை அஞ்சி, விலை உயர்ந்த பொருள்களைத் தம் அகங்களில் வைத்துக்கொள்வதில்லை; அவைகளை, எளிதில் எரிபடா வண்ணம் 'சிமட்டி' ÷ சுண்ணும்பினுற் கட்டப்பட்டிருக்கும் கட்டடத்தில் வைத்திருப்பார்கள்.

ஜப்பானில், கூலி வேலை செய்து பிழைப்பவர்களின் குடியிருப்பு, நகரங்களின் புறத்தில் அமைந்திருக்கும். அவர்களின் குடில்கள் மிகச் சிறியவை. அவர்கள், வீடு மாற்றும்பொழுது சில சமயங்களில் தங்கள் சாமான்களையே யன்றி, தாம் குடியிருந்த குடிலையும் உடன் கொண்டுபோதல் உண்டு. இது நமக்கு வியப்பை உண்டுபண்ணக் கூடும். ஆனால், அவர்கட்கு இது மிகவும் எளிதில் இயல்கின்றது. கூரைக்கு வேண்டும் சாமான்கள், கடிதங்கள், பலகைகள் ஆகியவைகளை ஒன்றுகச் சேர்த்துக் கட்டி, அச்சுமையை ஆடவன் சுமந்துகொண்டு போவான்; அகத்தில் வழங்கும் பொருள்களையெல்லாம் சேர்த்துக் கட்டி, அம் மூட்டையை அவன் மனைவி சுமந்துகொண்டு போவாள். சாமான்களைக் கொண்டுபோய், அவர்கள் வேறிடத்தில் புதிதாக வீடு அமைத்துக்கொள்வார்கள். இவ்வாறே நமக்கு வியப்பைத் தரத்தக்க செயல்கள் இன்னும் பல உள்ளன.

13. பொன்னும், வெள்ளியும்

பூமியின் மேற்புறத்தில் எண்ணிறந்த பொருள்கள் தோன்றுகின்றன அல்லவா? அவ்வாறே பூமியின் உட்புறத்திலும் நமக்கு உபயோகமான பல பொருள்கள் கிடைக்கின்றன. நிலத்தைத் தோண்டிப் பார்த்தால், கல், மண் முதலானவைகளையே யன்றி, தாதுப்பொருள்கள் பலவற்றையும் காணலாம். பூமிக்குள் தோண்டி எடுக்கப்படும் பொருள்களுள் முக்கியமானவை உலோகங்கள் ஆகும். பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என்னும் ஐந்து உலோகங்களை மட்டும் நம் முன்னோர் அறிந்திருந்தனர்; அவற்றிற்கு ஐம்பொன் என்று பெயரிட்டனர். பின்னால், பாதரசம் முதலான சில பொருள்களையும் உலோகங்களாகக் கணித்து வந்தனர். இப்பொழுது சுமார் எழுபது உலோகப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட் டிருக்கின்றன.

உலோகங்களை வெட்டி எடுக்கையில், அவை ஒளி உடையனவாய் இரா; பல பொருள்களோடு கலந்து, கட்டி கட்டிகளாய் இருக்கும். அவற்றை உடைத்து, கழுவி, உருக்கி, புடம் வைத்து எடுக்கையில், அவை ஒளி முதலான தன்மைகளை அடைகின்றன. உலோகப்பொருள்களை வேறு வேறாக வகைப்படுத்துவதற்கு முக்கிய காரணம், அவைகளின் ஒளியேயாம். சாதாரணமாக நாம் வழங்கும் பொருள்களுள் சிறந்த ஒளியுடையது பொன். அதைக் குறித்து இங்கே சிறிது கூறுவோம்:

பொன் மஞ்சள்நிறம் உடையது. அது, வெள்ளி முதலான மற்ற உலோகங்களைக் காட்டிலும் திண்மையும் கனமும் உள்ளது. பொன், தண்ணீரினும் பத்தொன்பது மடங்கு கனம்

ஆனது. அது மலைகளிலும் சில ஆறுகளிலும் அகப்படும்; பூமியிலும் பல இடங்களில் கிடைக்கும். ப்ரெஜில், நியூஜீலந்து, ரஷியா, காலிபோர்னியா, ஆஸ்திரேலியா ஆகிய இடங்களில் பொன், பெரும்பான்மையும் அகப்படும். காலிபோர்னியா, ஆஸ்திரேலியா இவ்விரண்டு இடங்களில்மட்டும் யாண்டிற்கு முப்பதுகோடி ரூபாய் விலை பெறக் கூடிய தங்கம் கிடைக்கின்றதாம்! நமது தேசத்திலும் குடகு, மைசூர், வயநாடு இவ்விடங்களில் பொன் அகப்படுகின்றது. ஆயினும், அஃது அதிகமாக அகப்படாமையால் அதற்கு விலையும் அதிகமாயிருக்கின்றது.

பொன், மற்ற உலோகங்களோடு கலந்திருந்தாலும், அதை எளிதில் வேறுபடுத்திவிடக் கூடும். அதைப் பொடிசெய்து, ஓடும் நீரில் கழுவினால், அதுமட்டும் தனித்து நின்றுவிடும். பின்னும் அசுத்தமிருந்தால், ரசம் கலந்து காய்ச்சின், அதுவும் நீங்கிப்போகும். சுத்தமான தங்கம் எளிதில் உருகாது. அதைப் புடம் வைக்க வைக்க அதற்கு ஒளி அதிகப்படும். ஒரு குன்றிமணி அளவு பொன்னை ஐம்பது சதுர அங்குலமுள்ள தகடாக அகற்றலாம்.

பொன், பிற பொருள்களைப்போல் துருப் பிடிப்பதில்லை. ஆதலால், நகை செய்வதற்கு அத்தனை உபயோகப்படுத்துகின்றனர். பொன் மிகவும் நயப்பா யிருப்பதனால், அதை நாணயமாகச் செய்யும்பொழுது, அதனோடு பதினொன்றில் ஒரு பங்கு செம்பைச் சேர்க்கின்றனர். பவுன், அரைப்பவுன் ஆகிய தங்கநாணயங்களில் இவ்வாறு செம்பு சேர்க்கப்படுகின்றது.

வெள்ளி, செம்பு முதலானவைகளால் செய்யப்பட்ட சாமான்களுக்குத் தங்கம் பூசுவ துண்டு. தங்கம் பூச

வேண்டிய பொருள்களை நன்றாகத் தேய்த்துச் சுத்தி செய்து, அவற்றின்மேல் ரசத்தைப் பூசி, அதில் மிகவும் மென்மையான பொற்றகடுகளை வைத்துத் தேய்ப்பார்கள். அப்பொழுது அவை, ரசத்தில் ஒட்டிக்கொள்ளும். பின்பு, நெருப்பில் வைத்துக் காய்ச்சுவார்கள். காய்ச்சுகையில் ரசம் புகைந்துபோம்; பொன் மாத்திரம் நிலைத்திருக்கும். மின்சாரத்தின் உதவியினாலும், உலோகத்தாற் செய்த பாத்திரங்களுக்குத் தங்கம் பூசுகின்றனர். தங்கம் பூசிய பொருள்கள் தங்கமய மாகவே தோன்றும்.

வெள்ளி, உலோகங்களுள் தங்கத்துக்கு அடுத்த மதிப்புடையது. அது தண்ணீரினும் பத்தரை மடங்கு அதிக கனம் உள்ளது. அமெரிக்கா தேசத்தில் வெள்ளிச்சுரங்கங்கள் பல உள்ளன. அவற்றுள், வட அமெரிக்காவி லுள்ள மெக்ஸிகோ தேசத்து வெள்ளிச்சுரங்கங்களே சிறந்தவை. முற்காலத்தில், தென் அமெரிக்காவிலுள்ள பெரு, பொலீவியா என்னும் தேசங்களிலும் வெள்ளிக்கனிகள் அதிகமா யிருந்தன. இங்கிலாந்து, ரஷியா, நார்வே முதலான நாடுகளில் வெள்ளி அகப்படுகின்றது.

கனிகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட வெள்ளி, கந்தகம் ஈயம் முதலியவைகளோடு கலந்திருக்கும். கலப்பில்லாத வெள்ளியைச் சொக்க வெள்ளி என்று வழங்குவர். சொக்க வெள்ளியில் துருப்பிடித்தல் இல்லை. கனிகளிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட வெள்ளியை உடைத்துக் காய்ச்சிக் கழுவி, பாதரசத்தோடு சேர்த்து மறுபடியும் காய்ச்சுவார்கள். காய்ச்சுகையில், பாதரசம் வெப்பத்தினால் நீங்கிப் போய்விடும்; சுத்தமான வெள்ளி மாத்திரம் மிஞ்சும். அதைக் கட்டிகளாக வார்ப்பார்கள்.

பொன்னுக்கு அடுத்தபடி கனமுடையது வெள்ளி. ஓர் அங்குல உயரத்தில் லக்ஷத்தறுபதினயிரம் தகடுகள் அடங்கும்படி அவ்வளவு மெல்லிதாக அதை அடிக்கக் கூடும். வெள்ளியைக் கம்பியாக நீட்டி இழுப்ப துண்டு. வெள்ளிக்கட்டியைச் சரிகைக் கம்பிகளாகவும் இழுப்பார்கள். வெள்ளியை ஓர் அங்குல கனமும், ஒரு முழ நீளமு மாக உருட்டி, அதன் மேல் பதினைந்து வராகன் எடையுள்ள தங்க ரேக்குக்களை வைத்து மூடி, உருக்குச் சட்டத்தில் உள்ள துவாரங்களில் வைத்துச் சிறிய கம்பிகளாக இழுப்பார்கள். அந்த ஒரு முழக்கட்டியை 7200 முழ நீள முள்ள கம்பியாக இழுக்கலாம். கம்பிகள் உள்ளே வெள்ளியும், மேற்புறத்தில் தங்கமும் உடையனவா யிருக்கும். கம்பிகளை மிக்க மென்மையான தகடாக அடித்துப் பட்டுநூலின்மேல் சுற்றினல், அவை சரிகைநூல் ஆகும்

வெள்ளியினல் நாணயம் செய்கின்றனர். ரூபாய், அரை ரூபாய், கால்ரூபாய் இவைகள் வெள்ளிநாணயங்கள். நாணயம் செய்வதற்கு வெள்ளியோடு பன்னிரண்டில் ஒருபங்கு தாமிரத்தைச் சேர்ப்பதுண்டு. செல்வர், வெள்ளியினல் பாத்திரங்கள் செய்து உபயோகப்படுத்துகின்றனர். எளியவர், வெள்ளியினல் அணிகலன் செய்து அணிந்துகொள்கின்றனர். ஆதலால், செல்வர், வறியர் ஆகிய இருதிறத்தாருக்கும் வெள்ளியே பெரிதும் பயன்படுகின்றது.

14. சிறந்த துணைவன்

ஒரு குடியில் தோன்றிய மக்கள், அன்பு கூர்ந்து ஒருவரை யொருவர் நேசித்து, ஒற்றுமைப்பட்டு வாழ்தல் நலமாகும். உடன்பிறந்தோருக்கு இடர் வந்தபோது அவருடனிருந்து அதனை நீக்கித் துணை புரிபவரே சிறந்த துணைவராவார். தன் அண்ணனுக்கு இடையூறு உற்ற காலத்து அவனுக்குச் சிறந்த துணையாய் நின்று உதவி புரிந்த நற்றுணைவ னொருவன் வரலாற்றை இங்குக் கூறுவாம்:

ஸ்ரீராமர் தம் தந்தையின் கட்டளைப்படி, தமக்குரிய அரசாட்சியைத் தம் சிற்றன்னையின் புதல்வனாகிய பரதனுக்கு ஈந்துவிட்டு, காட்டிற் சென்று தவம் புரிதலை மேற்கொண்டார். பரதன் நாடாளவும், இராமர் காடாளவும் நேர்ந்ததை இலக்குவன் அறிந்தான். அறிந்ததும், அவனுக்குச் சினத்தீ மூண்டது; புருவங்கள் நெரிந்தன; கண்களில் தீப்பொறி சிந்தின; உதடு துடித்தது. அவன், பற்களைக் கடித்தான்; நாகம்போல் சீறி உயிர்த்தான்; கையோடு கையைப் புடைத்தான்; உடனே, கச்சை கட்டினான்; அதில் உடைவாளைச் செருகினான்; அம்பறாத்தூணியைத் தோளில் தூக்கினான்; வில்லில் நாண் பூட்டி வலித்தான்; காலில் வீரக்கழல் ஒலிக்க, இடிபோல் முழங்கி எழுந்தான்.

இவ்வாறு இலக்குவன், கண்டோர் அஞ்சும்படி வெளிப் போந்து, 'ஆஹா, பரதன் முடி சூடுவதைப் பார்ப்போம்! அவனையும், அவனுக்காக அமர் புரிய வருபவரையும் நொடிப் பொழுதில் அழித்து, என் தலைவனாகிய இராமபிரானுக்கே முடி சூட்டுகின்றேன். என்னோடு சமர் புரிய வருபவர் யாவராயினும் சரி; யான் அவர்க்கு அஞ்சுவேனல்லேன். ஆ, ஆ! நன்று

நன்று, கைகேயியின் சூழ்ச்சி! அவள் சூழ்ச்சியின் பயனை இதோ வீழ்ச்சி செய்கின்றேன்' எனச் சினந்து கூறி, வில் நாண் எறிந்தான்.

அந் நாணொலியைக் கேட்ட ரகு நாயகர், இலக்குவன் சீற்றந் தெரிந்து, அவன் சினத்தீயை ஆற்றும் பொருட்டு,

இன்சொல் மாரி பொழிந்துகொண்டே சென்றார். சென்றவர், தம்பியை நோக்கி, 'இலக்குவ, ஒரு நாளும் முனிவு கொள்ளாத நீ, இன்று இவ்வாறு முனிவுற்றுப் போர்க்கோலங் கொண்டதற்கு ஏது யாது?' என்று வினவினர். இளையவன் தலை வணங்கி, 'அண்ணலே, மனுகுல மரபினைக் கெடுத்த வஞ்ச

நெஞ்ச முடையவளாகிய கைகேயியின் கண்முன் உமக்கு முடி சூட்ட நினைத்தேன். அதற்கு இடையூறு இழைப்பவர் எவராயினும் அவரை அழிக்கத் துணிந்து, இவ் வில்லை ஏந்தினேன். தேவரும் என்னோடு எதிர்க்க அஞ்சுவர்; அஞ்சாது அமர் புரிய வருவாராயின், அவரையும் என் வாளிக்கு இரை யாக்கி, இவ்வரசை உமக்குத் தருவேன்' என்று கூறினான்.

இராமர் இளவலை நோக்கி, 'தம்பி, பேரறிவு படைத்த நீ, இவ்வாறு சீறி உரைப்பது தகுமோ? சினங் கொள்வது செவ்விதோ?' என்றார். இலக்குவன், 'அரசன் உமக்குத் தந்த அரசை வஞ்சனையாற் கவர்ந்து, உம்மைக் கொடுங் கானிற் போக்கிய கொடுமையை அறிந்தபோது உள்ளம் கொதியாதோ! சீற்றம் பிறவாதோ! உமக்கு நேர்ந்த இடையூற்றை நீக்காவிடின், யான் உயிர் வாழ்வதனாற் பயன் யாது?' என்று இயம்பினான். அதனைக் கேட்ட இராகவர், 'தம்பி, நீ கூறுவது சரியன்று, குற்றம் செய்தவன் யானே; எங்ஙனமெனின், மன்னவர் எனக்கு மகுடம் சூட்டுவிக்க எண்ணியதற்கு யான் உடம்பட்டது தவறு. முடிசூடுதல் தவிர்ந்தது, நம் தந்தையாரின் பிழையும் அன்று; என்னை அன்புடன் வளர்த்த அன்னை கைகேயியாரின் பிழையும் அன்று; பரதன் தவறும் அன்று; இது விதியின் பிழை. இவற்றை ஆராயாது நீ வெகுளுதல் தவறாகும்' என்று அறிவுறுத்தினர்.

இலக்குவன் அவ் வுரைகளைக் கேட்டும் சினந் தணியானாய், அண்ணனை நோக்கி, 'இது விதியின் பிழையாயின், என் வில் அவ் விதியையும் வென்று வெற்றி பெறும்; என் விற்றொழிலின் திறனைத் தாமுங் கண்டு மகிழ்வீர்' என்று முனிவுடன் மொழிந்தான். ஸ்ரீராமர், 'இலக்குவ, அருமறை

எல்லாம் அறிவுற்ற நீ இவ்வாறு இயம்புதல் தகாது. நம்மை ஈன்றெடுத்த தாய் தந்தையர் மீது சினங் கொள்ளுதல் சிறப்போ! இதனை இப்பொழுதே விட்டு விடு' என்று இளவலுக்கு இனிதாக இசைத்தார். இளையவன், 'எனக்குத் தாயும் நீரே; தந்தையும் நீரே; தலைவனும் நீரே; உம்மை யன்றி வேறு உறவினர் உளர் எனக் கருதேன்' என்று தன் உள்ளக் கருத்தைத் தெரிவித்தான்.

பின்னரும், இராமர் அவனை அன்புடன் நோக்கி, 'நின் கோபம் இன்னும் தணிந்ததில்லையே! அதுதான் தணிவது எப்பொழுது? துணைவனைத் தொலைத்தோ! தந்தையைக் கொன்றோ! தாயை மாய்த்தோ! அறிகிலேன். இந் நாடோ, அன்னை யாகிய கைகேயியாருக்கு உரிமையானது. அதனை, பரதன் அரசு புரிவது முறையே. அன்றியும், யார் எவ்வாறு செய்யினும், யான் தந்தையாரின் கட்டளையை மீறி நடவேன். என் சொல்லை மறுப்பதனால் உனக்கு நேரும் குறை யென்ன; நீ உனக்குத் தோன்றியவாறே செய்' என்று வெறுத்துக் கூறினார். அவற்றைக் கேட்ட இலக்குவன் மறுமொழி கூற இயலாதவனாய், மனம் தளர்ந்து நின்றான்; அவன் கோபத் தீ அவிந்தது. அவியவும், இராமர் அவனைத் தழுவி மகிழ்ந்தார்.

பின்னர், ரகு நாயகர், தம் சிற்றன்னையாகிய சுமித்திரையி னிடம் விடைபெற்றுக்கொண்டு,கானகம் செல்லும்பொருட்டு மரவுரி உடுத்தார். அதனைக் கண்ட இலக்குவன், தானும் அவ்வாறே மரவுரி தரித்தான். அப்பொழுது இராகவர் அவனை நோக்கி, 'தம்பி, நான் சொல்வதைச் சற்று அமைதி யுடன் கேள். நம்முடைய தந்தையும் தாயரும் துயர்க் கடலில் ஆழ்ந்துள்ளார். இத்தருணத்தில் நீயும் என்னோடு வந்துவிட்டால், அவர்கள் இன்னல் பின்னும் பெருகுமே!

இப்பொழுது அவர்களைத் தேற்றுதற்கு இவ்விடத்தில் ஒருவரும் இலர்; அவர்களைத் தேற்றுவது உன் கடனாகும். அதனால் நீ இங்கேயே இரு' என்று இசைத்தார்.

இலக்குவன் அதனைக் கேட்டதும், உள்ளம் பதைத்து உடல் நடுங்கி, 'அண்ணலே, அடியேன் உமக்கு யாது தவறு இழைத்தேன் ? தண்ணீர் இல்லாத இடத்தில் மீன்கள் உயிர் வாழ்ந்திருத்தல் எங்ஙனம் ? அதுபோல, தேவரீர் இல்லாத இடத்தில் சீதாபிராட்டியாரும் அடியேனும் உயிர்வாழ்ந்திருத்தல் எப்படி இயலும் ? தேவரீர், வனஞ் செல்வதை அறிந்து சினங்கொண் டெழுந்த என்னைத் தடுத்தீர். உமது ஆணைக்கஞ்சி யான் சீற்றத்தை மாற்றினேன். நீர் இப்போது இடுகின்ற கட்டளையோ கொடுமையினுங் கொடுமை யானது. எங்களைத் துறந்து நீர் செல்வது அறமாகுமோ ?' என்று பணிவுடன் மொழிந்தான்.

இலக்குவன் கூறிய அன்புரைகளைச் செவியுற்ற ஸ்ரீராமர், மறுமொழி சொல்லத் தோன்றாமல், கண்ணீர் விட்டுக் கவன்று நின்றார். பின்பு அவர் இலக்குவனையும், தம்மோடு உடன் வரத் துணிந்த சீதாபிராட்டியையும் உடன்கொண்டு கானகம் செல்வாராயினர். இளையவன், தன் ஐயனோடு வனம் புகுந்து, நிழல்போற் பிரியாதிருந்து, பதினன்கு யாண்டும் பணிவிடை புரிந்துவந்தான்.

பிள்ளைகளே, தன் தமையன் பொருட்டுத் தன் நலங் கருதாது, படாதன பட்டுப் பணிவிடை புரிந்த தம்பியின் அன்புடைமையை நினைத்துப் பாருங்கள். நீங்களும் உங்கள் உடன்பிறந்தோரிடத்து அன்பு செலுத்தி, அவர்க்குத் துணையாக நின்று, நல்லன செய்து மேன்மை யடைந்து வாழ்வீர்களாக.

15. பிராணிகள் இரைதேடும் விதம்—I

உலகத்தில் ஒவ்வொரு பிராணியும் தனக்கு வேண்டிய உணவைத் தானே தேடி உண்டு உயிர்வாழும் இயல்புடையது. ஆனால், மனிதர்களில் மட்டும் சிலர், தாமே வருந்தி உழைத்துப் பொருள் தேடி உண்பதில்லை. அவர்கள், தம் முன்னோர்களோ அல்லது பிறரோ தேடிவைத்த பெரும்பொருளைக் கொண்டு உண்டு வாழ்கிறார்கள். பலர், வெவ்வேறு முயற்சியால் பொருளீட்டி உணவுப்பொருளைப் பெறுகின்றனர்.

மக்கள், முதல் முதலில் காய் கனிகளைத் தேடி உண்டும், விலங்குகளை வேட்டை யாடிக் கொன்று தின்றும் உயிர் வாழ்ந்தனர். அநாகரிகமான ஜாதியார் இன்றும் அவ்வாறே உணவைத் தேடிக்கொள்கின்றனர். விலங்குகள் பறவைகள் முதலான பிராணிகள், ஆதிகாலத்து மனிதர்களைப்போலவே தமக்குரிய உணவை வெவ்வேறு வகையில் தேடுகின்றன. நாம், உழுது பயிரிட்டுத் தானியங்களை விளைவித்தல் போலவும், பசுக்கள், எருமைகள், ஆடுகள் இவற்றின் பாலைக் கறந்து உபயோகப்படுத்தல் போலவும் மிகச் சிறிய பிராணிகளும் செய்கின்றன. அவற்றை யெல்லாம் அறியுமிடத்து, இயற்கையின் அற்புத சக்தியைக் குறித்து மிக்க வியப்பு உண்டாகும். ஆதலின், சில பிராணிகள் இரை தேடும் முறையை இங்கே கவனிப்போம் :

மனிதர்களுக்குள் மாமிச வுணவை உட்கொள்பவர்களும் உட்கொள்ளாதவர்களும் இருப்பது போலவே, மற்ற உயிரினங்களிலும் இருக்கின்றன. சில பிராணிகள் மாமிச பக்ஷணிகளாயும், சில உயிர்கள் சாக பக்ஷணிகளாயும் உள்ளன. அவற்றுள், சாக பக்ஷணிகள் உணவின்பொருட்டுப் பெரிதும்

முயல வேண்டிய அவசியம் இல்லை. மாமிச பக்ஷணிகளோ உணவைத் தேடுவதற்கு மிக்க ஊக்கமும் தக்க முயற்சியும் மேற்கொள்வது அவசியமாகின்றது.

நம்முடைய வீடுகளிலும் மரக்கிளை முதலானவைகளிலும் வலை கட்டி வாழ்கின்ற சிலந்தியை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.



அஃது ஏன் வலை கட்டுகின்றது, தெரியுமா? தனக்கு வேண்டிய இரையைச் சம்பாதிக்கும்பொருட்டேயாம். சிலந்தி, தன்னிடத்திலிருந்து உண்டாகும் மெல்லிய நூலால் வலை கட்டி, அதன் நடுவில் மறைந்து இருக்கும். அந்த வலைக்குள் ஈயாவது

புழுவாவது போய்ச் சேருமாயின், திடீரென்று அதன்மேற் பாய்ந்து, அது தப்பிப்போகாதபடி, அதை நூலால் வரிந்து கட்டிக் கொன்று தின்னும். ஒரு சிறு பிராணி தன்னிடத்தில் உண்டாகும் மெல்லிய நூலால் வலை அமைப்பதும், அதிலிருந்தே இரை தேடுவதும் எவ்வளவு ஆச்சரியம்! மனிதர் தந்திரத்தினால் வலை கட்டி விலங்குகளைப் பிடிப்பதும், கண்ணிகளை வைத்துப் பறவைகளைப் பிடிப்பதும் சிலந்தியின் செயலோடு ஒப்பிடத் தகும் அல்லவா ?

இரை தேடுவதில் காக்கைகள் செய்யும் தந்திரத்தை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். சிறுவர்கள் கையிற் கொண்டு போகும் பண்டங்களை, காகம் எவ்வளவு தந்திரமாக வந்து, சமயம் பார்த்து அபகரித்துக்கொண்டு போய்விடுகின்றது! அது வஞ்சனையாக உணவைத் தேடுகின்றது என்பதைப் பல கதைகளினால் அறியலாம். எங்கேயாவது புகை வரக் கண்டால் காக்கை அங்கே செல்லும். ஆகாயத்திற் பறந்து திரிகையில் எங்கிருந்தேனும் புகை வந்தால், அங்கே தனக்கு ஏதேனும் உணவு அகப்படும் என்று கருதிக் காகம் அவ்விடத்தைச் சேர்வது வழக்கம். அது நினைத்தவாறே அதற்குப் பெரும்பான்மையும் அங்கு உணவு கிடைக்கும்.

காக்கைகளில் பல வகைகள் உள்ளன. ஒருவகைக் காகம், ஆடுகள் குட்டி போட்டவுடனே அக் குட்டிகளைக் கொத்திக் கொன்று, அவற்றின் கண்விழிகளைக் கொத்தி விழுங்கிவிடும். இஃது எவ்வளவு கொடுமையான செய்ல்! ஒரு ஜாதிக் காக்கைகள் முயலை வேட்டையாடிப் பிடித்துக் கொன்று தின்கின்றன! இது, கேட்போருக்கு மிக்க வியப்பை உண்டு பண்ணக் கூடும். ஆனால், காக்கை முயலை எப்படிக் கொல்கின்றது என்பதைச் சொல்லுகிறேன், கேளுங்கள்:

முயல்வேட்டை ஆடுவதற்கு இரண்டு காகங்களாவது வேண்டும். முயல், சாதாரணமாகக் குழிதோண்டி அதனுள்ளே சுரங்கம் அமைத்துக்கொண்டு வசிக்கும். முயலின் சுரங்கம்,



எலிவளை போல இரண்டு பக்கமும் துவாரமுடையதா யிருக்கும். இப் பிராணிகள், தங்கள் பகைவர்களுக்கு அஞ்சி இவ்வாறு சுரங்கம் அமைத்துக்கொள்கின்றன. ஆனால், இவற்றின் சத்துருக்களுக்கும் இவ்வுபாயம் தெரியும். ஒரு காக்கை வளையின் வாயில் ஒன்றில் தங்கியிருக்கும். மற்றொன்று வேறொரு வாயிலின் வழியே உட்புகுந்து, முயலை வெளியே துரத்தும். முயல் வெளிப்படுகையில், வாயிலில் இருக்கும் காகம் அதன் தலையில் வலிமையோடு கொத்தித் துன்பப்படுத்தும். அதனால் சில சமயங்களில், முயல் அங்கேயே இறந்துபடுவ துண்டு. காக்கைகள் முயலைப் பின்தொடர்ந்து சென்று, அது தளர்ச்சியடையும் சமயத்தில் அதன் தலையிற் கொத்திக் கொல்வதும் உண்டு. ஓடும் திறமை வாய்ந்த முயல், காக்கைகளின் உபாயங்

களினால் அறிவு கெட்டுத் திகைத்து, ஒன்றுந் தோன்றாது நின்று விடும். காக்கைகளின் உபாயமும் சாமர்த்தியமும் என்னே!

காகங்களுக்குப் பலியிடுபவர்கள் கைதட்டிக் கூப்பிடுவது வழக்கம். அவை அந்த ஓசையை அறிந்து கூடிவிடும். வீடுகளில், வழக்கமாகத் தமக்கு உணவு கிடைக்கும் சமயத்தைக் காக்கைகள் சரியாக அறிந்துகொண்டு, அந்த வேளைக்கு அங்கே செல்லும். காக்கைகள் கரைந்து தம் இனத்தைக் கூவிக் கொண்டே உண்ணும்.

16. சுகத்தைக் காக்கும் முறை—I

'சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுதலாம்' என்பது ஒரு பழமொழி. நமது சரீரம் சுகமுடையதா யிருந்தால்தான் நாம் எல்லா நன்மைகளையும் அடைய முடியும் என்னும் உண்மையை இப் பழமொழி அறிவிக்கின்றது. ஒருவன், நோயில்லாமல் சுகமுடையவனா யிருந்தால், அவன் இன்பமாக வாழ்வதோடு, பிறர்க்கும் உபகாரம் செய்யக்கூடும்; பிணிவாய்ப்பட்டிருப்பின், அவன் மிக்க துன்பத்தை அநுபவிப்பதோடு வேறு சிலரும் அவனுக்கு உதவி செய்யநேரும். இது கருதிய, 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்னும் வாக்கியமும் வழங்கி வருகின்றது.

நோய் வந்தபின் அதைப் போக்க முயல்வதினும், அது வாராதபடி தடுத்துக்கொள்ளுவதே சிறந்த முறையாகும். 'முட்டுண்டபின் குனிவதினும் முதலிலே குனிவது மேன்மை' அன்றோ? ஆதலால், நோய் அணுகவொட்டாமல் சுகமாக வாழ்வதற்காகக் கைக்கொள்ள வேண்டிய சில முறைகளை இங்குக் கவனிப்போம். காற்று, தண்ணீர், உணவு, உறக்கம், உடற்

பயிற்சி முதலான விஷயங்களில் நாம் ஜாக்கிரதையா யிருந்தால், பெரும்பாலும் உடலில் நோய் அணுகாதபடி காத்துக் கொள்ளலாம். அதனால் அவைகளைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்:

காற்று:—நமக்கு உணவு, நீர் இவ்விரண்டினும் காற்று இன்றியமையாதது என்பது நீங்கள் அறிந்த விஷயமே. நாம் ஒரு நாளில் சில தடவை உணவு அருந்துகின்றோம்; சில சமயங்களில்மட்டுமே நீர் பருகுகின்றோம்; ஆனால், வாயுவைமட்டும் எப்பொழுதும் சுவாசித்துக்கொண்டே யிருக்கிறோம். சுவாசிக்காமல் ஒரு நிமிஷமும் நம்மால் இருக்க முடியாது. இதனால், நாம் உயிர் வாழ்ந்திருப்பதற்கு வாயுவே முக்கிய ஆதாரம் என்பது விளங்குகின்ற தன்றோ?

நாம் உட்கொள்ளும் வாயு பரிசுத்தமானதா யிருக்கவேண்டும். சுத்தமான வாயுவினால், கெட்ட ரத்தம் சுத்தமடைகின்றது. அதனால், சரீர ஆரோக்கியம் ஏற்படும். கிராமங்களில் எல்லா விடங்களிலும் சுத்தமான வாயு வீசும். அதைப்பற்றிக் கிராம வாசிகள் அதிகமாகக் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. நகரங்களில் வீடுகள் நெருங்கி யிருப்பதனால் நல்ல காற்று வரத் தடைப்படுகின்றது. ஆதலால், நகரத்தில் வசிப்பவர்கள் நாடோறும் காலை மாலைகளில் வெளியிடங்களிற் போய்ச் சிறிது நேரமாவது சுத்த வாயுவை உட்கொள்ள வேண்டும். வீடுகளிலும் காற்று உலவத் தக்க வசதிகளை அமைத்துக்கொள்வது நலம்.

தண்ணீர்:—தண்ணீர், எல்லா வுயிர்களுக்கும் இன்றியமையாதது. தண்ணீர் பருகாமல் ஒருநாள்கூட நாம் உயிர் வாழ்ந்திருக்க முடியாது. சுத்தமான தண்ணீர் சரீர சுகத்திற்கு முதற்காரணம். அசுத்த ஜலத்தினால் பலவகையான

நோய்கள் உண்டாகும். வாந்திபேதி, சொறி சிரங்கு முதலான நோய்களுக்கு அழுக்குத்தண்ணீரே முக்கிய காரணம்; விஷக் காய்ச்சல் என்னும் கொடிய நோய்க்கும் இதுவே மூலமாகும்; சில விடங்களிலுள்ள நீரைப் பருகினால் உடனே காய்ச்சல் உண்டாதலைப் பலர் அநுபவத்தில் கண்டறிந்திருக்கின்றனர். யானைக்கால் முதலான கொடிய நோய்கள், சதுப்பு நிலங்களில் தேங்கிக் கிடக்கும் தண்ணீரால் உண்டாகின்றன. ஆதலால், நீர்நிலைகளைச் சுத்தமாகப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். நம் நாட்டவர், தமது சௌகரியம் ஒன்றையே கருதி நீர்நிலைகளைப் பல வழிகளில் கெடுத்துவிடுகின்றனர். சிலர், 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்க லாகாது' என்று சொல்லிக்கொண்டு, எப்படிப்பட்ட சேற்றுநீரையும் உபயோகப்படுத்துகின்றனர். இஃது எவ்வளவு அறியாமை! தூய்மையான நீரையே பருக வேண்டும். அஃது அகப்படாத போது, தண்ணீரை நன்றாகக் காய்ச்சி வடிகட்டி உட்கொள்ள வேண்டும். நல்ல நீரையே உபயோகப்படுத்தினால் அனேக வியாதிகள் வரவொட்டாமல் தடுத்துக்கொள்ளலாம்.

உணவு:—'அன்ன மயம் பிராண மயம்', 'அன்னம் ஒடுங்கினால் அனைத்தும் ஒடுங்கும்' என்பவை முதுமொழிகள். நாம் சில நாட்கள் உணவு உட்கொள்ளாதிருப்பின், மாய்ந்துபோக நேரும். நாம் செய்யும் வேலையினால் உடம்பிலுள்ள சில அம்சங்கள் குறைவு பட்டுப் பலவிதமாக வெளியே கழிந்துபோகின்றன. அக்குறைவை நிறைவாக்கும்பொருட்டு மறுபடியும் உண்ணுகின்றோம். அதனால், நமது உணவு சரீரத்தை வளர்க்கத் தக்கதாக அமைந்திருக்க வேண்டும்.

முதலில் உண்ட உணவு அற்று, நன்றாகப் பசியுண்டான பின்னரே மறுபடி உண்ணவேண்டும். உணவு, சரீரத்துக்கு

ஏற்றதாயும் காலங்களுக்குத் தக்கதாயும் அமைந்திருக்க வேண்டும்.

நாம் உணவு அருந்துவதற்குத் திட்டமாகக் காலங்களைக் குறித்துக்கொள்ள வேண்டும்; குறித்த காலங்களில் தவறாமல் உண்ணப் பழகிக்கொண்டால், அந்த வேளையில் நல்ல பசி உண்டாகும். பசிக்கும் முன் உண்பது, பட்டினி கிடப்பதினும் மிக்க கேட்டை விளைவிக்கும். ஒருநாளில் இரண்டு தடவை உணவும், ஒரு முறை சிற்றுண்டியும் உட்கொள்வது ஆரோக்கியத்திற்கு ஏற்றது. உண்ட உணவு ஜீரண மாகாத பொழுது உணவைக் குறைத்து உண்ண வேண்டும்; பட்டினி கிடப்பதும் ஆரோக்யத்தைத் தரும். அடிக்கடி உண்பதும், வயிறு நிறைய உண்பதும் நோயை வருவிக்கும். ஆனால், உடல் வருந்த உழைத்துப் பாடுபடுபவர்கள் வயிறார உண்ணுவதில் அதிகமான தீங்கு நேராது. மனமுயற்சி உடையவர் வயிறு நிறைய உண்ணுதல் கூடாது.

உணவு உடலை உரம் பெறச் செய்யத் தக்கதா யிருக்க வேண்டுமே யன்றி, சுவையும் இனிமையும் மட்டும் உடையதா யிருக்குமாறு விரும்பலாகாது. மாமிசவுணவினும் மரக்கறி யுணவே மேலானது என்று அறிஞர் பலர் கருதுகின்றனர். ஒவ்வொருவரும் தமக்கு ஏற்ற உணவை நன்கு அறிந்து உட்கொண்டு வந்தால், மருத்துவனை எதிர்பார்க்க வேண்டுவ தில்லை. முற்காலத்தவர், ஆகார நியதியினால் அரோக திட காத்திரர்களாக நெடுங்காலம் இன்புற்று வாழ்ந்தனர் என அறிகின்றோம். ஆதலால், நாமும் காலத்திற்கும் இடத்திற் கும் தேகத்திற்கும் தொழிலுக்கும் ஏற்ற உணவை ஆராய்ந்து அளவாக உண்ணப் பழகினால், நெடுங்காலம் வளனுற வாழ் வோம் என்பதில் ஐய மில்லை.

இக்காலத்தில், காபி, தேயிலை முதலானவைகளை வழக்கமாகப் பருகி வருகின்றனர். இவை உடலுக்கு உரம் தருவன ஆகா ; அன்றியும், இவற்றால் தீங்கு விளைதலும் உண்டு. ஆயினும், இவற்றை அளவாகப் பருகி வந்தால், சுறுசுறுப்பு, ஊக்கம் முதலான நன்மைகள் உண்டாகும். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்' அன்றோ?

17. திருடன் திருந்தியது

மனிதர்களுக்கு நல்லறிவு இயல்பாகவே அமைந்துள்ளது. ஆயின், செயற்கையினாலும் தீக்குணங்களின் மிகுதியினாலும் அவ்வறிவு மறைந்து போகின்றது. அப்பொழுது, அவர்கள் மனங்கொள்ளுமாறு இன்சொற்களால் நற்போதனைகள் கூறுவோமாயின், மறைந்திருந்த இயற்கையறிவு மறுபடியும் தோன்றி விளங்கும். அதனால் அவர்கள் நல்லவர்களாகித் திருந்துவார்கள். இதனை விளக்கத்தக்க கதை ஒன்றனை இங்குக் கூறுவோம்:

ஓர் ஊரில் வர்த்தகன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அவனிடத்தில் அழகான குதிரை யொன்று இருந்தது. அஃது அமைதியும் சாந்தமும் உள்ளது; யஜமானன் குறிப்பினை யறிந்து நடப்பது; வாயுவேகம் போல் விரைந்து செல்லுவது. ஆதலின், அதனைக் காண்போர் அனைவரும் வியந்து கூறி, அதனிடத்து விருப்பங் கொள்வர்.

ஒரு நாள், அக் குதிரையின் அழகும் குணமும் கதியும் அறிந்த திருடனொருவன், அதனைப் பெற விரும்பி வர்த்தகனை அடைந்து, சிறிது நேரம் அளவளாவிப் பின்பு, 'ஐய, உமது குதிரையை விலைக்குத் தருவீரா?' என்று வினவினான். வணிகன்,

'பரியை விற்பதில்லை' என்று பதிலிறுக்கவே, கள்வன், 'பிர புவே, ஒட்டையையாவது களிற்றையாவது பெற்றுக்கொண்டு அதற்கு ஈடாக உமது புரவியைத் தாரும்; அல்லது உமக்கு வேண்டிய பெரும்பொருளைக் கேளும்' என்று வேண்டினான். வணிகன் ஒன்றற்கும் இணங்காது, ஒரே பிடியாக மறுத்துக் கூறிவிட்டான்.

வர்த்தகனது மனவுறுதியை யறிந்த கள்வன், எவ்வாறாயி னும் அப்புரவியைக் கவர்ந்துகொள்ள வேண்டும் என்று எண்ணினான்; ஒரு நாள், வர்த்தகன் ஓர் ஊருக்குச் செல்வதை யறிந்து, கள்வன் முடவன்போலவேடம் பூண்டு, அவ்வழியில் தங்கியிருந்தான். வணிகன் நெடுந்தூரத்தில் வருகையில், அக் கள்வன் பசியினால் களைப்புற்று வாடினவன்போல் தரையில் வீழ்ந்து கிடந்தான். பின்னர், வணிகன் தன்னை அணுகியதும், முடவன் எழுந்து அவனை நோக்கி, 'பிரபுவே, நான் முடவன்; என்னால் நடந்து செல்ல இயலாது; பசியோ வருத்துகின்றது. தாங்கள் அன்பு கூர்ந்து, என்னைக் குதிரையின்மேல் ஏற்றிக் கொண்டு போய் அடுத்தஊரில் விட்டுவிடுவீரானால், தமக்கு ஆண்டவர் அருள்புரிவார்; தம்முடைய நன்றியை நான் என் றும் மறவேன்' என்று இரக்கமாக வேண்டிக்கொண்டான். முடவன் மொழிந்த இன்சொற்களைக் கேட்ட வணிகன் உள் ளம் உருகி, 'ஐயோ, பாவம்! இத்தகைய அங்கவீனர்களுக்குத் தான் உதவி செய்யவேண்டும். உழைத்துப் பாடு பட உடல் வலிமை உள்ளவர்கட்கு உதவி செய்தல் இத்துணைச் சிறந்த தன்று' என்று எண்ணி, முடவனைத் தன் குதிரைமேல் ஏற்றிக் கொண்டு, அதனைப் பிடித்துக்கொண்டே நடந்து சென்றான்.

இவ்வாறு சிறிது தூரம் செல்லவே, வணிகன் பரா முகமா யிருந்ததைக் கண்ட கள்வன், அதுவே சமயம் என்று

கருதிக் குதிரையைக் காலால் தட்டி வேகமாகச் செலுத்தலானான்; அதுவும் விரைந்து சென்றது. வணிகன் அதைக் கண்டு, ஒன்றும் செய்யத் தோன்றாமல் தியங்கி நின்றான். அப்பொழுது கள்வன் அவனை நோக்கி, 'ஐய, உம்மிடத்

தில் குதிரையை விலைக்குக் கேட்டவன் நானே; நீர், "என் உயிரைக் கொடுத்தாலும் கொடுப்பேன்; குதிரையைக் கொடுக்கமாட்டேன்" என்று ஒரே நிலையில் கூறி மறுத்து விட்டீர். அதனால், நான் இவ்வாறு உம்மை வஞ்சித்து இதனைக் கைப்பற்றினேன். இப்பொழுது என்ன செய்வீர் ?' என்று கூறிவிட்டுச் செல்வானாயினன்.

திருடன் கூறிய சொற்கள் செவியுற்றதும், வணிகன் அவனை நோக்கி, 'ஐய, சிறிது நில்லும்; ஒரு வார்த்தை கேளும் இந்தக் குதிரையை நீர் கொண்டுபோவதனால் எனக்குக் கவலை யில்லை. ஆனால், நீர் இவ்வாறு என்னை வஞ்சித்த செய்தியை எவரிடத்திலும் சொல்லவேண்டா; நானும் பிறரிடத்தில் கூறாது மறைத்துக்கொள்வேன். ஏனெனின், இச் செய்தி உலகத்தில் பரவுமாயின், உண்மையில் முடவர்களாயிருப்பவர்களுக்கும் இனிமேல் மாந்தர் உதவி செய்யார்; அவர்களை யும் உம்மைப்போல் வஞ்சகர்களாகவே கருதுவர். ஆதலால், இச்செய்தி மறைவா யிருப்பது நல்லது; ஏழை முடவர்களைக் கெடுத்துவிடாதீர்' என்று அவன் மனங்கொள்ளுமாறு இனிமையாகக் கூறி வேண்டினன்.

வர்த்தகன் கூறிய நல்லுரைகளைக் கேட்டதும் கள்வன் மனம் கலங்கிற்று; அவனுக்கு நல்லறிவு தோன்றிற்று. 'ஐயோ, பாவம்! இவர் கூறியவை யெல்லாம் உண்மையே. நான், ஏழைகளாகிய அங்கவீனர்களுக்குக் கேட்டை விளை விக்க லானேனே! இது பெரிதும் கொடுமையல்லவா?' என்று எண்ணினன்; உடனே அப் புரவியை வணிகனிடத்தில் விட்டு விட்டுத் தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டான். வணிகன் அவனுக்கு அன்புரை கூறி அனுப்பிவிட்டு, முன் போல் குதிரைமேல் ஏறி வழிச்செல்வானாயினன்.

பிள்ளைகளே, வர்த்தகனது அறிவும், சமயோசிதமான இன்சொற்களும் திருடனது தீச்செயலைப் போக்கி, நன்மை செய்தன. இதனால், எத்தகைய தீயோர்களும் நற்போதனை யினால் திருந்தி விடுவார்கள் என்பது நன்கு விளங்குகின்றதன்றோ?

18. பர்மியர்

பர்மா தேசம், இந்தியாவை யடுத்துள்ளது. அது, சீஞ, சீயம் என்னும் தேசங்களுக்கு மேற்கில், தெற்கு வடக்காக நீண்டு பரந்திருக்கின்றது. அதன் நடுவில் நீண்டுள்ள மலைத் தொடர்களால், அதைக் கீழ் பர்மா என்றும் மேல் பர்மா என்றும் பிரித்து வழங்குகின்றனர். அத்தேசத்தில் உள்ள ஆறுகளில் மிகப் பெரியது ஐராவதி நதி. அஃது ஆயிரத்து ஒரு நூறு மைல் நீண்டு பாய்கையில், பல கிளைகளாகப் பிரிந்து சென்று கடலிற் சேர்கின்றது. அவ்வாற்றில் 780 மைல் தூரம் வரையிலும் கடலினின்று கப்பல்கள் போகின்றனவாம். பர்மாவில் பலவிடங்களில் மழை மிகுதியாகப் பெய்கின்றது. அதனுல், அது வளம் பெருகிய தேசமாக விளங்குகின்றது. அதுபற்றி, சுவர்ணபூமி என்றும், பொன்னுலகம் என்றும் புலவர்கள் அதைப் புகழ்ந்து வழங்கலாயினர்.

நெடுங்காலத்திற்கு முன்பே, பலவிடங்களிலிருந்தும் பலஜாதியினர் போய்ப் பர்மாவில் வசிக்கலாயினர். அவர்கள் பர்மியருடன் கலந்துபோயினும், உருவத்தில் சிறிது வேறுபாடு உள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள். கலப்பில்லாத பர்மியர், உடல் பருத்து வலிமை யுடையரா யிருப்பர். அவர், நெடிய உருவ முடையவர் அல்லர். பர்மியர்களில், தாலேங்கியர், காரனியர், ஷானியர் என்பவர்களே முக்கியமான ஜாதியார்கள். பர்மியர்கள் அமரிக்கையான வாழ்க்கை யுடையவர்கள்; அரசன் ஆணைக்குக் கீழ்ப்பட்டு நடக்கும் நற்குணம் உள்ளவர்கள். அவர்கள் பொருளில் பேராசை கொள்வதில்லை; பிற்காலத்திற்கு வேண்டுமே என்று நினைத்துப் பொருளைச் சேமித்து வைப்பதும் இல்லை. ஒருவனுக்குப் பெரும்பொருள் சேர்ந்துவிட்டால், அவன் அதைக்கொண்டு சிறந்த மாளிகை

களையும் வாகனங்களையும் அமைத்துக்கொள்ள விரும்பமாட்டான்; தன் பொருளைத் தரும காரியங்களிலும் மத விஷயங்களிலும் செலவு செய்வான்; அல்லது, நண்பர்களுக்குப் பெரிய விருந்துகள் செய்து மகிழ்வடைவான். பர்மியர், எப்பொழுதும் மன அமைதியும் சந்தோஷமும் உற்சாகமும் உள்ளவர்களாய் வாழ்வர். அவர்கள், எதற்கும் கவலைப்படுதலே இல்லை. இதனை அறிவிக்கும் நிகழ்ச்சி ஒன்றனை இங்கே கூறுவோம்:

ஒருகாலத்தில், ஒரு நகரம் முழுவதும் நெருப்புப் பற்றிக் கொண்டது; அப்பொழுது, அங்கு வசித்திருந்தவர் அனைவரும் தம் உடைமைகளை அங்கே போட்டுவிட்டு, உடுத்த உடைகளோடு ஓடிப்போயினர். அதனை யறிந்த ஐரோப்பியர் ஒருவர், அவர்களுக்கு உதவி செய்ய எண்ணி, மறுநாள் அந்நகரை யடைந்தார். அப்பொழுது, அவர்கள் நடுவூரில் நாடகமொன்று நடத்தி, அங்குக் கருகிக் கிடந்த தம் பொருள்களைக் கண்டு நகைத்துக்கொண்டிருந்தார்கள். அதனைக் கண்ட ஐரோப்பியர் பெருவியப் படைந்து திரும்பினர்.

பர்மியருக்கு, வெளியிடங்களில் சுற்றித் திரிவதில் விருப்பமில்லை; ஆனல், ஆலயங்களில் நடக்கும் விழாக்களுக்குப் போய்வருவதிலும், ஆற்றோரங்களில் உலவுவதிலும் ஊக்கம் அதிகம். அவர்கள் மாலைநேரங்களில் கழனிகளில் உலாவித் திரிவதும் உண்டு. படகுப்பந்தயம், சேவற்போர், எருமைக் கடாச்சண்டை ஆகியவற்றில் அவர்களுக்குப் பேராவல் உண்டு.

பர்மியர்கள் அமரிக்கை யுடையவர்களாயினும், முன் கோபமும் முரட்டுத்தனமும் வாய்ந்தவர்கள். அவர்கள், சிறு காரியத்திற்காகவும் பிறரைக் கொலை செய்யக் கூசுவதில்லை. மனைவி சமைத்த உணவு தனக்குப் பொருந்தாததா யிருந்தால்,

சில சமயங்களில் கணவன் அவளைக் கொன்றுவிடுவானும். அந்தோ கொடுமை! பர்மியர், தாம் நினைத்த காரியத்தை ஆராயாமலே செய்துவிடும் இயல்புள்ளவர்.

வயல்களில் பயிரிடும் காலத்திலும், அறுவடை செய்யுங் காலத்திலுந்தான் பர்மியர்களுக்கு வேலை. பயிர்த்தொழிலுக்கு மழை அவசியமான காலத்தில், அவர்கள் விழாக்கொண்டாடி மழையை வேண்டுவார்கள்; மழை அவசிய மில்லாத காலத்திலும் விழாவெடுத்து மழையை விலக்குவார்கள். இந்த விழாக்களுக்காகப் பெரும் பொருள் செலவு செய்தல் வழக்கம்.

பர்மியர் ஒரு நாளில் இரண்டு வேளை உண்பர். அவர்கள், காலையில் குளித்துவிட்டு, உண்ணும்வரையும் அயலாருடன் பேசிக்கொண்டிருப்பார்கள்.

பர்மியர்களுக்கு முக்கியமான உணவு நெல்லரிசியே. அவர்கள், பெரிய உண்கலம் ஒன்றில் சோற்றைப் படைத்து,

சோற்றைப் படைத்து, அதன் பக்கத்தில் கறிவகைகளை வைத்துக்கொள்வார்கள். கலத்தைச் சுற்றி, வீட்டினர் அனைவரும் இருந்து கொண்டு உண்பர். உண்ணும்போது முழங்காற் படியிட்டுக் குதிகாலின்மேல் இருப்பர். உண்ட பின்பு அனைவரும் சுருட்டுப் பிடிப்பர். சிலவகை மீன்களில் அவர்களுக்கு விருப்பம் அதிகம். அவற்றை அவர்கள் பச்சையாகவே உண்பதும் உண்டு; எறும்புகளை எண்ணெயிற் பொரித்தும் தின்பார்கள். பர்மியர் தேயிலைநீரைப் பருகும் வழக்கமுடையவர்; அதைப் பருகும்போது வெல்லத்தைத் தின்பதும் உண்டு; இடையிடையே வெற்றிலை போடுதலும் வழக்கம்.

பர்மியர், தலைமுடி வளர்ப்பதில் மிக்க விருப்பம் வாய்ந்தவர். அவர்கள் தலைமயிர், கணுக்கால்வரையிலும் வளர்ந்து விழுந்திருப்பதைச் சாதாரணமாகக் காணலாம். ஆடவர், சிகையைச் சுருட்டி உச்சந்தலையில் முடிபோடுவர். பெண்டிர், கூந்தலைப் பின்னுக முடிப்பர். பெருஞ்செல்வரும் சாமானியமான உடையையே உடுத்துவர். ஆனால், பட்டுத்துண்டு ஒன்றை மேலே போட்டுக்கொள்வது வழக்கம். அது, பதினைந்து முழ நீளம் இருக்கும். பட்டுத்துணியைத் தலைப் பாகைக்குப் பதிலாகச் சுற்றிக்கொள்வர். ஏழைகள் உடுப்பது பருத்தினூலுடையே. ஆயினும், யாதேனும் ஒரு பட்டு உடையை மேலே தரித்திருப்பர். மகளிர், ஐந்து அடி அகலமுள்ள துணியை உடுத்தி, ஒரு சட்டையை உடம்பிற் போட்டுக்கொள்வது வழக்கம். அவர்கள், அழகான மலர்களைக் கூந்தலோடு வைத்துப் பின்னிவிட்டிருப்பர்.

பர்மா தேசத்தில், கோயில்களும் சிலைகளும் பிரசித்தி பெற்றவை. ஆயினும், மனிதர்களிற் பெரும்பாலோர் மூங்கிற் குடில்களில் வசிக்கின்றனர். பர்மியர், மச்சுக்களை அமைத்து

வீடு கட்டுவதில்லை; ஏனென்றால், மச்சில் வாழ்பவரின் கால்கள், கீழ் நிலையில் வசிப்பவரின் தலைக்குமேல் இருப்பது தாழ்வான காரியம் என்று கருதுவர். தரையிலிருந்து ஏழு அல்லது எட்டு அடி உயரத்திற்குத் தூண்கள் நிறுத்தி, அவற்றின்மேல் வீடு கட்டுவர். அதனால், தரை சதுப்புநிலமா யிருந்தாலும், மழையினால் வெள்ளம் உண்டானாலும் அவர்களுக்கு அசௌக்யம் உண்டாவதில்லை.

பர்மாவில், ஆடவர் உடல் முழுவதிலும் பச்சை குத்திக்கொள்வதுவழக்கம்; பச்சை குத்திக்கொண்ட பிறகுதான், ஆண் பிள்ளைகள் என்று மதிக்கப்படுவர். பர்மியர், சாதாரணமாக யானையின் உருவம்போலப் பச்சை குத்திக்கொள்வர்; புலி, பூனை முதலியவற்றின் உருவங்களையும் குத்திக்கொள்வது உண்டு. பச்சை குத்துவதை அவர்கள் தங்களுக்கு ரக்ஷையாகக் கருதுகின்றனர்.

பர்மியஸ்திரிகள், காது குத்தும் வரையிலும் வெளியில் தனியே சஞ்சரிப்பார்கள். அதன்பின் அவர்கள் தனியாகப் போவதில்லை. பர்மாவில், ஆடவரினும் பெண்பாலாரே குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்புடையவர். அதனால், அவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள். சிறுமியர், சிறுபொருள்களை வைத்து வியாபாரம் செய்வர்.

பர்மிய பாஷை உருது பாஷை போல இடக்கைப் பக்கத்திலிருந்து எழுதும் முறைமை யுடையது. இவ்வாறே பர்மியரின் வழக்க ஒழுக்கங்கள் பல, நமக்குப் புதுமையாக இருக்கும். ஆனால், இவற்றுட் பல செயல்கள் இப்பொழுது மாறிக்கொண்டே வருகின்றன.

19. பிராணிகள் இரை தேடும் விதம்-II

நமது நாட்டில், பச்சைநிற முள்ள ஒருவகைப் பாம்பை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அது, மரக்கிளைகளின் மேல் இருக்கையில், வடிவினலும் வண்ணத்தினலும் ஒரு சிறு கிளைபோலவே தோன்றும். சிறு பறவைகள் அவ்வுண்மையை அறியாமல் அப் பாம்பின் அருகிற் போயிருக்கும். அப்பொழுது, அப்பாம்பு அவற்றைப் பற்றி விழுங்கிவிடும்.

இதுபோலவே, பறவைகளை இரையாகக் கொள்ளும் அரவங்கள் ஆபிரிக்காக் கண்டத்துப் பாலைவனங்களில் உள்ளன. அவை, பறவைகளைப் பற்றும் உபாயம் நமக்கு



வியப்பை யுண்டு பண்ணும். பாலைநிலங்களில் மழை பெய்யும் நாட்களில், அரவுகள் வெளியிடங்களில் சுருண்டு கிடக்கும். சுருள்கள் ஒன்றன்மே லொன்ருகப் படிந்து அரை-யடி உயரம் இருக்கும்; அவற்றின் நடுவில் தம் தலையை

மறைத்து வைத்துக்கொண் டிருக்கும்போது, அவை ஒரு வட்டமான பாத்திரம்போலத் தோன்றும். அச்சுருளினுள் மழைநீர் நிறைந்திருப்பதைக் காணும் சிறு பறவைகள், அந் நீரைப் பருகச் சென்று, பாம்பின்மேல் உட்காரும். உடனே, அஃது அச் சிறுபறவைகளைப் பற்றி உட்கொள்ளும். இப் பாம்பின் உபாயம் அற்புத மல்லவா! மலைப்பாம்புகளில் சில, முப்பது முப்பத்தைந்து அடி நீளம் இருக்கும். அவை, மான், பசு முதலான பெரிய பிராணிகளையும் கொன்று தின்னும்; அவைகளைச்சுற்றிக்கொண்டு நன்றாக இறுக்கிக் கொன்று, உமிழ்நீரினால் நனைத்துப் பின்பு மெல்ல மெல்ல விழுங்கும்.

நாய்கள், வலிமையுடன் வேட்டையாடி விலங்குகளைப் பற்றி உண்ணும். நாயின் வகுப்பைச் சார்ந்த செந்நாயைப்



பற்றி நீங்கள் கேட்டிருக்கலாம். அது மிக்க கொடிய விலங்கு; தனியே செல்லும் மனிதர்களையும் கொல்லும் வலிமை

யுடையது; தந்திரமாக வேட்டையாடும் இயல்புடையது. மானிறைச்சியில் அதற்குப் பிரியம் அதிகம். செந்நாயால் மானைப் பிடிக்க முடியுமா? மான் அதிவேகமாக ஓட வல்லது. அதுவும் செந்நாய்க்கு நன்கு தெரியும். அதனால், மான்-வேட்டை யாடுதற்கு அஃது ஓர் உபாயம் செய்யும். செந்நாய், தன் பெண்ணுயையும் உடன் கூட்டிக்கொண்டு வேட்டைக்குச் செல்லும். அவற்றுள், ஒன்று ஒரு புதரில் மறைந்திருக்கும்; மற்றையது மானைத் துரத்திச் சென்று, அதை எங்ஙனமேனும் தனது துணை மறைந்திருக்கும் இடத்திற் கொண்டுசேர்க்கும். அங்கே மறைந்திருந்த நாய், மானைப் பின்தொடர்ந்து செல்லும்; கடைசியில், மான் ஓடி இளைத்த சமயம் பார்த்து அதைக் கொல்லும். இவ்வாறே செந்நாய்கள் மானைப் பற்றிக் கொன்று தின்கின்றன.

ஆறுகளிலும், குளங்களிலும், மனிதர்கள் தூண்டிலால் மீன் பிடிப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். ஒரு வகை மீன்களும் இவ்வாறே மீன்களைப் பிடிக்கின்றன! மத்திய-தரைக்கடலில் தூண்டிற்காரன் என்னும் பெயர் பெற்ற ஒருவகை மீன் இருக்கின்றது. அதன் தலையில் நீண்ட பூவை யொத்த கருவிகள் உள்ளன. அவை ஒன்றுபோலச் சேர்ந்திருக்கும் போது, ஓர் இலைபோல் தோன்றும். அந்த மீன், மற்றைய மீன்கள் தன்னை அறிந்து கொள்ள இயலாதபடி, ஆற்றோரங்களி லுள்ள செடிகளின் இலைகளில் மறைந்திருக்கும். அதன் தலையில் நீண்ட கருவி உண்டு அல்லவா? அது, விரைவில் வளைக்கவும் நிமிர்க்கவும் கூடியவாறு அமைந்துள்ளது. மீன், அதனை நீர்மட்டத்திற் கொணர்ந்து அசைத்துக்கொண்டிருக்கும். அப்பொழுது, சிறு மீன்கள் அதை ஒரு புழு என்று நினைத்து, அதைப் பிடித்துத் தின்னும்

பொருட்டு அருகிற் செல்லும். சென்றதும், அவற்றை அது, தன் வாய்க்குள் அகப்படுத்திக் கொள்ளும். மீன்களின் அறி



வும், அவை இரைதேடும் உபாயமும் என்னே! மேற் கூறிய வற்ருல், மாமிசபக்ஷணிகளெல்லாம் தந்திரமாகவே இரை தேடி வாழ்கின்றன் என்பது விளங்குமன்ருே?

இரைதேடுவதில் எறும்புகளுக் குள்ள அறிவும், ஆற்றலும், ஊக்கமும் நமக்கு மிக்க வியப்பை யுண்டாக்கும். எறும்புகளில் பல வகைகள் உள்ளன. அவற்றுள், தேன் எறும்பு என்பது ஒன்று. அது, வட அமெரிக்காவி லுள்ள, 'டெக்ஸாஸ்' என் னும் தேசத்தில் காணப்படுகின்றது. தேன்எறும்புகள் தேன் சேர்க்கும். தேன்எறும்புகளுள், சிலவகை எறும்பின் வயிற்றில் ஒரு பாகத்தே, துருத்தி போன்ற பை யொன்று உண்டு. அஃது, அந்தப் பையில் தேனை நிறைக்கும். அந்தத் தேன் அப்பொழுதே ஜீரணமாகி விடுவதில்லை; எப்பொழுதும்

அழியாமல் இருக்கும். அந்தப் பை நிறையத் தேன் சேர்த்த பிறகு, அவை ஓரிடத்தில் அசையாமற் படுத்துக் கிடக்கும். அங்கே கூட்டிலுள்ள மற்ற எறும்புகள், உணவுப்பொருள் அகப்படாத பஞ்ச காலத்தில், தேன்எறும்புகளை அடுத்து ஒவ்வொரு துளியாகத் தேனை அருந்திப் போகும். தங்கள் ஜாதியாருக்கு உணவு கிடைக்காத பஞ்சகாலத்துக்கு உதவும்படி தேன்-எறும்புகள் தேனைச் சேர்த்து வைக்கின்றன.

பிள்ளைகளே, இந்த எறும்பின் உபகாரச் செயல்களைக் கவனியுங்கள். ஒருவகை எறும்புகள் பயிரிட்டுத் தானியத்தை விளைவிக்கின்றன. எறும்புகளில் பசு எறும்புகளும் உண்டு. அவற்றை வளர்த்து அவற்றினின்றும் பாலை எடுத்து ஜீவிக்கும் எறும்புகளும் இருக்கின்றன.

சில பிராணிகள் உணவுப்பொருளைச் சம்பாதித்துச் சேர்த்து வைக்கின்றன. குளவிகள் கூடு கட்டி, அதனுள் முட்டை இடும். முட்டையிலிருந்து வெளிப்பட்ட குஞ்சுகள் புழுக்களை மட்டுமே தின்னும். அதனால், குளவி, கூட்டில் முட்டையிட்ட பிறகு புழுக்களைத் தேடிக் கொண்டுபோய்த் தன் கூட்டில் சேர்த்து வைக்கும். அவற்றை உண்டு வளர்ந்த குஞ்சு, பிறகு அக் கூட்டிலிருந்து வெளிப்படும். இவ்வாறே, தமக்காகவும், தம் இனங்களுக்காகவும் இரை சேர்த்துச் சேமித்து வைக்கும் பிராணிகள் பல உள்ளன.

20. செங்கோலரசன்

குடிகளுக்கு எந்த வகையினும் தீங்கு நேராவண்ணம் காவல் புரிந்து நன்மை செய்பவனே செங்கோலரச னவான். அத்தகைய அரசனை அவன் நாட்டவரே அன்றிப் பிற நாட்டவரும் புகழ்ந்து கொண்டாடுவர். அவ்வரசன் கீர்த்தி என்றும் அழியாது நின்று நிலவும். குடிகளின் துன்பம் கருதாமல், தம் இன்பம் ஒன்றனையே நாடி அரசு புரிபவர் கொடுங்கோலரசர் ஆவர். அவர்கள் பழியையும் பாவத்தையும் அடைவதோடு, தங்கள் நாட்டையும் இழந்து வருந்துவார்கள். தன் நலங் கருதாமலும், குடிகளுக்கு இன்னல் நேராமலும் அரசு புரிந்த செங்கோலரசனைப் பற்றிய கதையொன்றனை இங்கே கூறுவோம்:

முற்காலத்தில், செங்கோலரசன் ஒருவன் ஒரு நகரில் அரசு செலுத்தி வாழ்ந்திருந்தான். அவன், வறியர் எனவும் செல்வர் எனவும் வேற்றுமை கருதாமல், எல்லாருக்கும் ஒரே தன்மையாக நீதி புரிந்து வந்தான். அவன் ஆட்சியில், வானம் பொய்யாது மழை பொழிந்தது. எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்ந்தன. அதனால், அவனைத் தருமராஜன் என்று குடிகள் கொண்டாடிவந்தனர்.

அரசன் ஒரு நாள், புதிதாக அரண்மனை ஒன்று அமைக்கக் கருதி, அதனைச் சிற்பநூல் வல்லோருக்குத் தெரிவித்தான். அவர்கள், அரசன் கருத்திற் கிணங்கப் பெரியதோர் அரண்மனையின் அமைப்பை ஆராய்ந்து வகுக்கலாயினர். அரண்மனை கட்டுதற்குத் தக்க இடமாகத் தேர்ந்தெடுத்த இடத்தில், சிறிய குடிசை ஒன்று இருந்தது. அஃது, அரண்மனையின் நடுவில் அமைவதாயிற்று. அந்த இடமே அரண்மனை

சமைப்பதற்குத் தகுந்த இடம் என்றும், அரண்மனையை வேறுவகையாக அமைக்க இயலாது என்றும் சிற்பநூலோர் தேர்ந்தனர்; அவற்றை அரசனுக்கு அறிவித்து, அங்கிருந்த குடிசையை அப்புறப்படுத்த வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர்.

வேந்தன், அக்குடிசை ஒரு கிழவியினுடையது என்பதை அறிந்து அவளை வருவித்து, 'அம்மா, யான் புதிதாக அரண்மனை ஒன்று சமைக்கத் தொடங்கியுள்ளேன்; உன் குடிசை, அதன் நடு விடத்தில் இருப்பதாகத் தெரிகின்றது. அந்த இடமே அரண்மனை அமைத்தற்குத் தகுந்த இடம் என்று சிற்பநூலோர் கூறுகின்றனர். ஆதலின், நின் மனையை அரசாங்கத்திற்கு விடுத்து, வேண்டும் பொருளைப் பெற்றுக்கொள்' என்று வேண்டினன். முதியவள் வேந்தனை நோக்கி, 'அரசே, அந்தக் குடிசையே எனக்குக் கோயில்; அப் பழமனையே எனக்கு வளமனை, யான் அக் குடிசையிற் குடிவந்த பின்பே எனக்குச் செல்வம் சேர்ந்தது; பன்றிகள் பல்கின. ஆதலின், அந்தச் சிறுமனையை விடுத்து, வேறு அரண்மனையிலும் குடியிரேன்; பொருட்குவியல் தரினும் என் இலக்குடிலை விடேன்' என்று துணிந்து கூறினள்.

கிழவியின் மன நிலையை அறிந்த வேந்தன், வற்புறுத்துதல் முறையன்று எனக் கருதி, அவளுக்கு விடைகொடுத்து விடுத்தான். பின்னர், சிற்பநூலோரை நோக்கி, 'நீங்கள் வகுத்தவாறே மனை கோலுங்கள் ; கோயிலின் நடுவில் குடிசையிருக்கட்டும்; அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டா' என்று கூறி, அரண்மனை சமைக்குமாறு பணித்தான். அரசன் ஆணைப்படியே அவர்கள் அரண்மனையை அழகுறச் சமைத்தார்கள் ; கண்டோர் கண் கவருமாறு சித்திரங்கள் எழுதப்

பட்டன. கொற்றவன், அக் கோயிலிற் குடிபுகுந்து வாழ்ந்து வந்தான்.

சிறிய குடிசை அரண்மனையின் நடுவிடத்தில் இருந்ததனால், அவ்வரண்மனை அழகின்றி யிருந்தது. குடிசையின் முன்னால், சேற்றிற் புரண்டு திரியும் பன்றிகளும் குட்டிகளும், அரண்மனை வழியேபுறத்துப் போய் மேய்ந்து வரும்; சில சமயங்களில் அவை ஒருங்கு கூடி உறுமி, அரண்மனைக்குள் எல்லாவிடத்தும் அலைந்து திரியும்; சேற்றிற் கிடந்தவாறே எழுந்துபோய் அரண்மனையிற் படுத்துக்கொள்ளும்.

இவ்வாறு பன்றிகள் செய்யும் அசுத்தத்தைக் கண்ட அரசன், கிழவியை விளித்து, 'அன்னையே, நீ இந்த அரண்மனைக்குள் எங்கே வேண்டுமாயினும் வாழ்ந்திரு; நின் பன்றிகளுக்கு வேறு இடம் அமைத்துத் தருவேன் ; அன்றியும், நீ வேண்டும் பொருள்களை வேண்டுமளவு நல்குவேன் ; இந்தக் குடிசையை விட்டுவிடு' என்று வேண்டிக்கொண்டான். கிழவி, அரசன் கூறியவற்றிற்கு உடம்படாமல், முன்போலவே தன் குடிலில் வசித்துவந்தாள்.

அரசன் வேண்டுகோளையும், முதியவள் உடம்படாமையையும் அறிந்த நகரமாந்தரிற் சிலர், 'ஆ! நம் மன்னவன் தருமமே உருவெடுத்து வந்தாற் போன்றவன். இவனது நீதியும் நெறியும் யாரால் எடுத்துரைக்கக் கூடும்! இவன் பொறுமைதான் என்னே! இவனே செங்கோலரசன்!' என்று நெஞ்சாரப் புகழ்ந்தனர். வேறு சிலர், 'கிழவியின் குடிலை அழித்து, அவளைத் தொலைத்துவிட்டு வாழாமல், தன் கோயிலைப் பாழாக்கும் கொற்றவனோ வெற்றி பெறுவான்! இவனது அறிவின்மைதான் என்னே!' என்று அரசனைப் பழித்துரைத்தனர். மற்றுஞ் சிலர், 'அறுபது வயசானால் அறிவு மழுங்கும்

என்பார்களன்றோ? வயது முதிர்ந்த கிழவிக்கு அறிவு இல்லை. அவள் நல்லறிவு உடையவளானால், அரண்மனையில் சுகமாக வாழ்ந்திருக்க மாட்டாளோ! அல்லது, பெரும் பொருளைப் பெற்றுக்கொள்ள மறுப்பாளோ! அவளுக்கு நல்வினைப் பயன் இல்லை; அதனையல்லவா நோகவேண்டும்; அவளை நோவதில் பயன்யாது?' என்று கிழவியின் அறிவின்மைக்கு இரங்கினர். யார் எது கூறினும், மன்னவன் கிழவிக்கு இன்னல் செய்ய எண்ண வில்லை; கிழவி தன் கருத்தை மாற்றிக்கொள்ளவும் இல்லை.

இங்ஙனமாக, ஒருநாள் மன்னவன் அக் கிழவியை நோக்கி, 'அன்னையே, நான் பல தடவை வேண்டி இரந்தும், நீ என் வேண்டுகோளை மறுப்பதற்குக் காரணம் யாது? அதனை எனக்குத் தெரிவிக்கவேண்டும்' என்று வேண்டினான். அம் முதியவள், 'அரசே, நான் குடிசையில் வசித்திருப்பதினும் உமது கோயிலில் வாழ்வதில் குறைவுண்டோ! நான் அதற்கு உடம்படாமைக்குக் காரணம் ஒன்று உண்டு. அஃதாவது, உமது அரசாட்சியின் நீதி உலகத்தில் எந்நாளும் அழியாது நிற்கவேண்டும் என்பதே; வேறில்லை' என்று வணங்கிக் கூறினாள்.

கிழவியின் கருத்தை அறிந்த மன்னவன் மன மகிழ்ந்து, 'அன்னையே, இதனால் உனது வரலாறும் என்றும் நிலைநிற்பதாகும்; நீ முன்போலவே உன் குடிலில் வாழ்ந்திரு' என்று பணித்தான். அதனை அறிந்த மாந்தர், மன்னவன் நீதியை மனங்கொண்டு அவனை வாயார வாழ்த்தினர்.

21. சுகத்தைக் காக்கும் முறை-II

முன்னொரு பாடத்தில், சரீர சௌக்யத்துக்கு அவசியமான சில விஷயங்களை அறிந்தோம். இன்னும் சிலவற்றைப் பற்றி இங்கே கவனிப்போம்:

நித்திரை:—மாந்தர்க்கு, உணவைப்போலவே நித்திரையும் அவசியமானது. பகலில் வேலை செய்வதனால் நம் உடலும் உளமும் தளர்ச்சி யடைகின்றன. உறக்கம், அத்தளர்ச்சி யைப் போக்கி, வலிமையையும், ஊக்கத்தையும் உண்டுபண்ணு கின்றது. தகுந்த அளவு உறங்காவிடின், சோம்பலும் பசி யின்மையும் ஏற்படும். சில நாட்கள் உறங்காவிடின், மயக்கம் முதலான பல நோய்கள் உண்டாகும்.

உறங்குவதற்கு ஏற்ற காலம் இராக்காலமே. ஆனால், குழவி களும் முதியவரும் எந்த நேரத்திலும் உறங்கலாம். கைக் குழந்தைகள் அதிகநேரம் உறங்கவேண்டும். உடலாலும் உளத் தாலும் அதிகமாக உழைப்பவர்கள் நெடுநேரம் நன்றாக உறங் குதல் அவசியம். குறித்த காலம் தவறாமல் நித்திரை செய்ய வேண்டும். அதிகாலையில் எழுந்திருந்தால், சரீர ஆரோக்கிய மும், புத்தி விருத்தியும், ஞாபக சக்தியும் உண்டாகும். வயிறார உண்டவுடனே உறங்குதல் கூடாது. இரவில், உணவு அருந்தியபின் சிறிது நேரம் உலாவுதல் வேண்டும். உண்ட வுடனே உறங்கினும், மனத்தில் பல எண்ணங்களை எண்ணிக் கொண்டிருப்பினும் நல்ல நித்திரை வாராது; பற்பல விதமான கனவு காண்போம். ஆதலால், மன அமைதியோடு உறங்கப் போதலே நலம்.

இளைப்பாறுதல்:—பகலில் வேலை செய்பவர்கள் இளைப் பாறுதற்கு இரவு அவசியமாயிருத்தல் போலவே, பல நாள்

வேலை செய்பவர்களுக்குச் சில நாள் ஓய்வு நாளாக இருத்தலும் அவசியமாகும். இது கருதியே பாடசாலைகளிலும், நீதிமன்றங்களிலும் விடுமுறைக்காலங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர். வேலைக்குத் தக்கவாறு ஓய்வு வேண்டும். செய்யும் வேலைகளை மாற்றிக்கொள்வதும் ஒரு வகை இளைப்பாறுதலே. அஃதாவது, சிறிது நேரம் படித்தால், பிறகு கணக்குச் செய்தல், எழுதுதல் முதலானவைகளைச் செய்தலாம். அதிக வேலை செய்பவர்களுக்கு ஓய்வு இன்றியமையாததாகும்.

உடற்பயிற்சி:—நாம் ஒரே இடத்தில் அதிகநேரம் இருப்போமானால், சோம்பலும் ஒருவிதமான வெறுப்பும் உண்டாதல் கூடும். அப்பொழுது சிறிது நேரம் வெளியிற் சென்று உலாவி வந்தால், அவை நீங்கிவிடும்; ஊக்கமும் உற்சாகமும் உண்டாகும். உலாவுவதனால் உடம்பின் எல்லாப் பாகங்களுக்கும் சுத்தமான ரத்தம் பரவும்; உண்ட உணவு சரியாக ஜீர்ணமாகும்; உடம்பும் உரமடையும். சுத்தமான வாயு நிறைந்துள்ள வெளியிடங்களில் உலாவவேண்டும். உலாவுதல், முதியவர்களுக்கே ஏற்றது. சிறுவர்கள், ஓட்டம், பந்தாட்டம் முதலான விளையாட்டுக்கள் விளையாடவேண்டும். சரீரத்தால்வருந்தி வேலைசெய்பவர்களுக்கு வேறு உடற்பயிற்சி அவசிய மில்லை. ஆசிரியர், மாணவர், உத்தியோகஸ்தர் முதலானவர்கள், சிறிதுநேரமாவது உடற்பயிற்சி செய்யவேண்டும். அவர்கள் தம் தம் உடல்வலிமைக்கு ஏற்றவாறு உடற்பயிற்சியைத் தெரிந்துகொண்டு, அதைத் தவறாமல் செய்துவரவேண்டும்.

சுத்தம்:—'சுத்தம் சோறு போடும்' என்பது பழமொழி. ஒவ்வொருவரும் தம் உடம்பைப் பரிசுத்தமாக வைத்துக் கொள்ளுதல் அவசியம். நம் உடம்பினுள் ளிருந்து, அழுக்

கான பொருள்கள் பலவழிகளில் வெளிப்படுகின்றன. அவற்றுள், முக்கியமானவை மல ஜலங்களாம். அவை, ஒவ்வொரு நாளும் சரியாகக் கழியாவிடின், உடம்பில் பலவகையான நோய்கள் உண்டாகும்.

நாடோறும் உடம்பை நன்ருகத் தேய்த்துக் குளிக்க வேண்டும். ஏனென்ருல், உடம்பினுள் இருக்கும் அழுக்கு, வியர்வையின் மூலமாக மயிர்க்கால்களின் வழியே வெளிப்படுகின்றது ; உரோமத்துவாரங்கள் அடைபட்டு விட்டால், அழுக்குநீர் வெளிவர முடியாது. நாம் உடுக்கும் உடைகளும் சுத்தமானவையா யிருக்கவேண்டும்.

ஆற்றுநீரில் முழுகுதல் சிறந்தது. குளிர்ச்சியான நீர், ஆரோக்யத்திற்கு ஏற்றது. ஆனல், எண்ணெய் தேய்த்து முழுகுவதற்கு வெந்நீரே தகுந்தது. முதியவரும் பிணியாளரும் வெந்நீரில் முழுகுதல் நல்லது. வைகறைப் பொழுதில் நீராடுதல் நன்மையை உண்டாக்கும்.

பல்துலக்குதலும் சரீர ஆரோக்யத்திற்கு அவசியம். பல்லில் அழுக்கு அடைந்திருப்பின், அதனல், வயிற்று வலி, அஜீர்ணம் முதலிய பல நோய்கள் ஏற்படும்.

மனிதர்களுக்கு மன அமைதியும் இன்றியமையாததே. திருப்தி இல்லாத மனமுடையவன், சுகமுடையவனுக வாழ முடியாது. மனக்கவலேயே பல நோய்களுக்குக் காரணம். ஆதலின், மனக்கவலை இல்லாதிருத்தலும், ஆரோக்யத்திற்கு அவசியமாகும். ஓய்வு நேரங்களில் விளையாடியும், நண்பர்களுடன் அளவளாவியும், சங்கீதம் முதலானவைகளைக் கேட்டும், சிறந்த காவியங்களைப் படித்தும் மன உற்சாகத்தை அடைய வேண்டும். மன அமைதியும், மகிழ்ச்சியும் வறியவர்களுக்கு மிக்க நன்மையைத் தரும் ; பிணியாளருக்குத் துன்

பத்தைக் குறைக்கும். நாம், துன்பம் வந்த காலத்தில் மனந் தளர்தல் கூடாது. ஒன்றன்பின் ஒன்றாகத் துன்பம் அடுக்கி வரும் காலத்தில், அவற்றை யெல்லாம் பொறுத்துக்கொள்பவர்கள், பின்னால் வெற்றி அடைவார்கள்.

தெய்வ வழிபாடும், சரீர சௌக்யத்திற்கு ஒரு காரணமாகும். நம்முடைய ஆசாரங்களும் அனுஷ்டானங்களும் பெரும்பாலும் சரீர சௌக்யத்திற்காக ஏற்படுத்தப்பட்டவைகளே. ஆதலால், சரியான அநுஷ்டானம் உடையவர்கள், நோயில்லாமல் வாழக் கூடும். நாம், கடவுளிடத்து அன்பு செலுத்தி, பரிசுத்தமும் மன அமைதியும் உடையவர்களாயிருந்தால், நலமாக வாழலாம்.

22. அக்பர்

பிள்ளைகளே, நமது தேசத்தைச் சிறப்பாக ஆண்டு புகழ் படைத்த அரசர் பலர். அவர்களுள் அக்பர் என்பவரும் ஒருவர்; அவர் மொகலாய வம்சத்தைச் சேர்ந்தவர். அக்பர் மிக்க நற்குணம் வாய்ந்தவர் ; குடிகளுக்குப் பல நன்மைகள் செய்தவர். அவருடைய குணங்களைப் பற்றியும், அரசாட்சியைக் குறித்தும் சில செய்திகளை இங்குக் கூறுவோம் :

அக்பர், ஹுமாயூனுடைய புத்திரர். அவர், கி. பி. 1542-ஆம் வருஷம் நொவெம்பர் மாதத்தில் பிறந்தார் ; தம்முடைய பதின்மூன்றாம் வயசில் அரசாட்சியை மேற்கொள்ளலானார். அக்பர் அழகான உருவம் உள்ளவர் ; மிக்க ஆண்மையும் திண்மையும் அமைந்தவர்; எவருக்கும் அஞ்சாத தறுகண்மை வாய்ந்தவர்.

அக்பர், எல்லாரிடத்தும் அன்பு செலுத்தும் இயல்பினர் ; நட்பாளும் திறன் மிகுந்தவர் ; பிறர் செய்த குற்றங்

களைப் பொறுத்துக்கொள்ளும் பொறையுடையவர்; ஆயினும், கொடியவர்களைத் தண்டிப்பது அரசநீதி யாதலால், தாக்ஷண்ய மின்றி அவர்களுக்குத் தண்டனை விதிப்பவர். அவர், குடிகளுக்கு நன்மை செய்வதிலேயே நாட்ட முள்ளவர்; தேச பரிபாலனத்திலும், மத விஷயத்திலும், மாந்தர்களுக்குத் தீங்கு விளையாத முறைகளையே மேற்கொண்டவர்.

நாட்டில் அடிக்கடி போர்கள் நிகழுமாயின், அவற்றால் குடிகளுக்குக் கேடு விளையும் என்பதை அக்பர் நன்கு அறிந்திருந்தார். அதனால், அவர், போர்புரிவதில் விருப்பம் கொள்வதில்லை; ஆயினும், தேச நன்மையின்பொருட்டுப் போர் புரிய நேருமாயின், அதற்குப் பின்னிட மாட்டார்; அவர் வீணாகப் போர் புரிந்ததே இல்லை.

அக்பர், தம் படைவீரர்கள் போருக்குச் செல்லுங் காலத்தில், அவர்களால் நாடுகளில் தீங்கு நேராதபடி கவனம் கொள்வார். தம்முடைய குதிரைப்படை முதலானவைகளால் பயிர்கள் அழிவுறுமானால், அந்த நஷ்டஈட்டை அவர் கொடுத்துவிடுவது வழக்கம். அதனால், வீரர்கள், மாந்தர்களுக்குத் தீங்கு செய்வதில்லை; பயிர்களை அழிப்பதில்லை; போர்மேற் செல்கையில் இயன்ற அளவு கேடு நேராதபடி கவனித்துச் செல்வார்கள்.

அக்பர், மத விசாரணைகளிலும் சாஸ்திர ஆராய்ச்சியிலும் மிக்க விருப்ப முள்ளவர்; அதனால், நன்கு கற்றுத் தேர்ந்த அறிஞர்களிடம் அவைகளைப் பற்றி விசாரணை செய்வார். அவர், பிறர் கூறுவனவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ள மாட்டார்; நன்கு ஆராய்ந்து உணர்ந்த பின்னரே, அவற்றை மேற்கொள்வார். அக்பர், தமது ஸம்ஸ்தானத்தில் புலவர் பலரைக் கூட்டி வாதம் செய்வித்து, அவர்கள் கொள்கை

களுள் நல்லவைகளைக் கைக்கொள்வது உண்டு. பைஜீ, அபுல்பஜல் என்னும் புலவர் இருவர், அக்பருடைய ஸம்ஸ் தானத்தில் சிறந்த புலவர்களாக விளங்கினர். அவர்கள், மத விஷயங்களில் உள்ள அபிப்பிராய பேதங்களைப் பொறுத் துக் கொள்ளும் இயல்புள்ளவர்கள்; ஜாதி பேதம், மத பேதம் ஆகியவைகளைக் கவனியாமல் எல்லாருக்கும் ஒரே விதமான நீதி செலுத்துவதிலும், குடிகளுடைய பொது நன்மையை நாடுதலிலும் நாட்ட முள்ளவர்கள். அவர்களுடைய கொள் கைகள், அக்பருடைய எண்ணத்திற்கு இயைந்திருந்தன. ஆதலால், அக்பர் அவர்களை மிகவும் விரும்பிப் போற்றி வந் தார்; அவர்களும் அக்பரை விட்டு நீங்காமல் அவருட னிருந்து வாழ்ந்துவந்தார்கள். அவர்கள், அக்பரின் அர சியலைப் பற்றிய வரலாறுகளை எழுதியுள்ளார்கள். அவர்களுள் அபுல்பஜல் என்பவர், அக்பருக்குச் சிறந்த மந்திரியாயும் விளங்கி யிருந்தார்.

அக்பருக்குச் சங்கீதத்தில் நல்ல பயிற்சி உண்டு. அவர், நாடோறும் சங்கீத வித்வான்களை வருவித்து, அவர்கள் பாடும் இன்னிசையைக் கேட்டு மகிழ்வார். அவரே சில கீர்த் தனைகள் பாடியிருக்கின்றார். அக்பர், பல கலைகளை விருத்தி செய்தது போலவே சித்திர வித்தையையும் விருத்தி செய் தார்; சிறந்த ஓவியங்களை எழுதுபவர்களுக்குத் தகுந்த பரிசில் அளித்து வந்தார். அதனால், சித்திரக்கலையை வெறுத்த வர்களும் அதில் ஈடுபடலானார்கள்.

அக்பருக்குத் தத்துவ சாஸ்திரத்திலும் விருப்பம் உண்டு. அவர், சாஸ்திர ஆராய்ச்சி செய்வதற்காகப் பெரிய மண்டபம் ஒன்றை அமைத்திருந்தார். அதனுள், ஒவ்வொரு பக்கத் திலும் புலவர்கள் சபை கூடி, ஒவ்வொரு விஷயத்தைக்

குறித்து வாதம்செய்வார்கள். அக்பர், வெள்ளிக்கிழமை தோறும் தவருமல் அங்கே சென்று, புலவர்களோடு அளவளாவிப் பேசுவார்; மிக்க புலமை படைத்தவர்களுக்குப் பரிசில் அளித்துப் பாராட்டுவார்.

இவ்வாறு, அக்பர் பலவகையான சாஸ்திர விசாரணைகளில் காலங் கழித்தார். ஆயினும், நாடோறும் குடிகளின் நன்மையை நாடி வந்தார். அவர் செய்த சீர்திருத்தங்கள் பல. அவற்றுள் முக்கியமானவைகளைக் குறித்து இங்கே கூறுவோம்:

முற்காலத்தில், போரில் வெற்றி பெற்ற அரசர், தோற்றுப்போன அரசர்களின் பெண்டிரையும், மக்களையும் சிறையிடுவது வழக்கம்; அவர்களை அடிமைகளாகக் கொள்வதும் உண்டு. அப்படிச் செய்வது மிக்க கொடுஞ் செயல் என்பதை அக்பர் உணர்ந்தார். அவர், அரசாட்சியை மேற்கொண்ட ஏழாம் வருடத்தில் அந்த வழக்கத்தைத் தவிர்த்தார்; தோற்ற அரசர்களைச் சார்ந்தவர்கள், தங்களுக்குப் பாதுகாப்பான இடங்களிற்போய் வாழ்ந்திருக்கலாம் என்று உத்தரவு செய்தார்.

அக்பர், பாழாகக் கிடந்த தரிசு நிலங்களில் பயிர் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்; நிலவரிகளிலும் காலத்திற்குத் தகுந்தவாறு சில மாறுதல்கள் செய்தார்; கல்வியைக் கற்க விரும்பி, அதிலே காலங்கழிப்பவர்களுள் வறியவர்களுக்கு வேண்டுமளவு நிலங்களை மான்யமாக நல்கினர்; உண்மையான அபிமானத்தோடு போர் புரிந்த வீரர்களுக்கும் நிலங்களை இனமாக விடுத்தார்; துறவிகளா யிருப்பவர்களுக்கும் நன்கொடையாக நிலங்களை விட்டிருந்தார்.

அக்பர் காலத்தில் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்தது. அஃதாவது, கணவன் இறந்துபோனால் அவன் மனைவி அவனோடு தீயில் வீழ்ந்து உயிர் விடுவதாம். இவ் வழக்கம், மிகப் பழைய காலத்திலேயே நம் நாட்டில் நடைபெற்றிருந்தது. அக்காலத்தில், மகளிர், கணவன் இறந்தபின் உயிர்வாழ்ந்திருக்க லாகாது என்று கருதி, அவன்மேலிருந்த அன்பினால் அவனோடு தீயில் வீழ்ந்து மாய்தல் வழக்கம். பிற்காலத்தில், அவ்வாறு தீ மூழ்குதற்கு விருப்ப மில்லாத பெண்களையும், அவர்கள் சுற்றத்தார் பலவந்தமாகத் தீயில் வீழ்த்தி வரலாயினர். அந்தக் கொடுமையை அறிந்து, அக்பர் அச் செயலை விலக்கினர். அக்பருடைய அரசாங்கத்தில் உயர்ந்த பதவியில் இருந்த ஒருவர் இறந்துபோனபோது, அவருடைய மனைவி உடன்கட்டை ஏற உடன்படாதிருந்தாள். ஆனால், அவள் மகனும் சுற்றத்தாரும் அவளைத் தீயில் விழும்படி வற்புறுத்தினர்கள். அதனை அறிந்த அக்பர் குதிரைமேல் விரைந்து சென்று அவள் உயிரைக் காப்பாற்றினர்.

தீர்த்தயாத்திரை செய்யும் இந்துக்களுக்கு, மொகலாய அரசர் வரி விதித்திருந்தனர். அந்த வரியினால் ஆயிரக் கணக்காகப் பொருள் கிடைத்தது. ஆயினும், அக்பர், தமது ஆட்சியில் அந்த வரியைத் தவிர்த்துவிட்டார். அதனால், இந்துக்கள் அவரைப் புகழ்ந்து வாழ்த்தினர்கள். அக்பர், இந்துக்களுக்கும் அரசாங்கத்தில் பெரிய பதவிகளை அளித்தார். அவர், சகல மதஸ்தரையும சமமாகக் கருதிப் பாதுகாத்துவந்தார். அதனால், அவர் காலத்தில் முஸ்லீம்களும் இந்துக்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்திருந்தார்கள். ஆதலால் அக்பருடைய பெரும்புகழ் என்றும் அழியாது விளங்குவதாயிற்று.

23. திருஞான சம்பந்தர் விஷம் தீர்த்தது

நமது நாட்டில் சைவ சமயத்தை வளர்த்துவந்த நாயன்மார் களுள், திருஞானசம்பந்த நாயனர் சிறந்தவராவர். அவர், சீர்காழியில் சிவபாத இருதயர் என்பவருக்குப் புத்திரராக அவதாரம் செய்தார்; தமது மூன்றும் வயசில், சிவபெரு மான் அருள் பெற்ருர். அது முதல், அவர் பல அருஞ் செயல்களைச் செய்து புகழ்பெற்று விளங்கினர். அவற்றுள் ஒன்றை இங்குக் கூறுவோம்.

ஒரு நாள் திருஞானசம்பந்த நாயனர் திருமருகல் என் னும் க்ஷேத்திரத்தை அடைந்து, ஆலயத்துட் சென்று, முறைப்படி வலம்வந்து, மாணிக்கவண்ணரையும், வண்டு வார்குழல் அம்மையையும் பேரன்பு பெருக வணங்கி வாழ்த் துவாராயினர்.

அப்போது, வழிப்போக்க ஞகிய வணிகன் ஒருவன், தன் மனத்துக்கு இனியளாகிய மங்கை ஒருத்தி தன்னுடன் செல்ல, திருமருகல் என்னும் அத் தலத்தை யடைந்து, ஆலயத்திற்கு அருகிலுள்ள ஒரு மடத்தின்கண் தங்கி, அன்றிரவு உணவு சமைத்து உண்டான்; பின்னர், ஒரு படியின்மீது தலை வைத் துத் துயில்வானுனன். அக் காலத்தே விஷநாகம் ஒன்று, அவன் அறியாவண்ணம் அங்குப் போந்து, அவனைத் தீண்டிற்று. தீண்டுதலும்,விஷம் தலைக்கேற, அவ் வணிகன் உடல் சோர்ந்து, உணர்வு துறந்து உயிர்ப்பு நீங்கினன்.

அருகில் இருந்த அம் மங்கை, தன் காதலனுக்கு நேர்ந்த அவதியைக் காணப்பொருளாய், மத்தினல் எறிபட்ட தயிரே போல் மனஞ் சிதறினள்; எரி சுட வாடிய பூங்கொம்பே போல் துவண்டு, ஒருபுறம் ஒதுங்கி நின்ருள்; உள்ளம் பதைக்

கக் கண்ணீர் சோர, வாய்விட்டு அரற்றினள். அப் பெண் மணியின் திக்கற்ற நிலையைக் கண்ட விஷவைத்தியர் பலர் விரைந்து வந்து, செய்வன செய்தும், ஏதும் பயன்படா தாயிற்று. ஆகவே, அப் பெண்மணி, இறந்துபட்ட அக் காதலனது ஆகத்தை நோக்கி, 'என் அண்ணலே, அன்பே, ஆருயிரே, என்னை இம் மண்ணுலகில் விட்டு, நீர் அவ் விண்ணுலகிற்குச் சென்றீரே! இஃது உமக்கு அழகோ! உம்மை அன்றி இவ்வுலகில் ஒரு துணையும் காணேனே! கொழு கொம்பு இல்லாத கொடியேபோல் என்னை இங்கு அலையவிட்டீரே! தாய் தந்தையரைத் துறந்து உம்மையே சார்வாகப் பற்றி வந்தேனே! வணிகர் குலமணியே, என் வாழ்வே, யான் என் செய்வேன்! என் செய்வேன்! இனி ஒரு கணமும் இவ் வுலகில் உயிர்வாழேன்; உம்முடனே யானும் வருவேன்; அந்தோ, அந்தோ, யான் ஓர் அகதி யானேனே!' என்று நொந்து நொந்து அலறினள்.

பின்பு, அப் பெண்மணி, அருகில் இருந்த ஆலயத்தை நோக்கி, சிறிது மெய்யுணர்வு பெற்று, 'திக்கிலிலார்க்குத் தெய்வமே கதி என்பார்களே, அத்தெய்வம் அகதியான என்பால் சிறிது அருட்கண் வைக்கலாகாதா!' என்று பெரிதும் ஒலமிட்டாள்; அந்த ஆலயத்துள் எழுந்தருளியுள்ள பெருமானைக் கும்பிட்டு, 'கருணையங் கடலே, தமது நெற்றிக்கண்ணால் நீறுபட்டு அழிந்த மன்மதனை, அவன் காதலியின் வேண்டுகோளுக்கு இரங்கி, எழுப்பியருளிய இறைவனே, பேதையாகிய என்னைக் காக்கும்பொருட்டு என் காதலர்க்குத் தமது கடைக்கண் அருளைக் காட்டலாகாதோ! திருமருகற் பெருமானே, திருவருள் புரியாயோ!' என்று கதறி முறையிட்டாள்.

அம் முறைப்பாடு அனைத்தும் திருஞானசம்பந்தப் பிள்ளையார் செவியிற் புகுதலும், அப் பெரியார் பெரிதும் மனமிரங்கி, அடியார் புடைசூழ, அம் மங்கை தங்கியிருந்த மடத்தை அணுகினர்; அவள்தன் செயலற்ற நிலைமைக் கண்டு, பேரருள் கொண்டு, 'அம்மையே, நீ அஞ்சாதை ; இறைவர் திருவருளால் யாவும் இனிது முடியும்; நீவிர் யாவிர்? இருவீரும் இங்குப் போந்ததன் காரணம் யாது?' என்று வினவியருளினர்.

அதன்மேல், அப் பெண்மணி, காழியர் பெருமான் கூறியருளிய கனிவு மொழியால் மனந் தேறி, அவரது அடிகளில் விழுந்து எழுந்து, வணங்கிக் கூறுவாள்: 'எம்மைக் காக்கும் பொருட்டு ஈண்டு எழுந்தருளிய இறைவரே, எங்கள் வரலாறு இது: வைப்பூர் என்னும் பதியில் வணிகர் மரபில் வந்த தாமன் என்பவர் எனக்குத் தந்தை. அவருக்குப் புதல்வியர் எழுவர் ; எழுவருள்ளும் இளையவள் யான். இறந்துபட்ட இவர் என் அத்தை மகனர். என் தந்தை எங்களில் மூத்தவளைத் தம் உடன்பிறந்தாள் மைந்தராகிய இவருக்கு மணம் முடிப்பதாக வாக்களித்திருந்தனர். இருந்தும், பொருளாசை மேலிட்டவராய், அவளை வேறொருவருக்குப் பாணிக்கிரகணம் செய்வித்தனர். பின்பு, அடுத்தவளை இவருக்குத் தருவதாகக் கூறினர். அவளையும், பெரும் பொருள் பெற்றுக்கொண்டு, மற்றொருவருக்கு மணமுடித்தனர். இவ்வாறு அறுவரை அந்நியருக்கே கொடுத்துவிட்டனர். அதுகண்ட இவர் கருத்தழிந்து, செயலற்று வருந்துவா ராயினர். இவரது நிலைமைக் கண்ட எனக்குப் பெரிதும் இரக்கம் உண்டாயிற்று. என் தந்தை என்னையும் வேறொருவருக்கு விவாகஞ் செய்து கொடுத்துவிடுவர் என்று கருதி, நான் இவருடன்

வந்துவிட்டேன். வரும் வழியில் இங்குத் தங்கினோம்; இங்கே இவருக்கு இக் கதி நேர்ந்தது. நடுக்கடலில் கலங் கவிழப் பெற்றார்போற் கலங்குகின்றேன்' என்று கூறி நின்றாள்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் அக் கன்னிகையின் வரலாற்றைக் கேட்டருளியபின், அவளது திக்கற்ற நிலைக்குப் பெரிதும் இரங்கினர் ; திருமருகற் பெருமானை நோக்கி, ஒரு தெய்வத் திருப்பதிகத்தைப் பாடியருளினர். உடனே, அவ் வணிகன் துயிலுணர்ந்து எழுந்தவன்போல், எழுந்து நின்றான். அதனைக் கண்டு, அங்கிருந்த அடியார் அனைவரும் ஆனந்தப் பெருக்கினால் ஆரவாரித்து, பிள்ளைப்பெருமானை வாழ்த்தினர். கன்னிகையும் தன் துயர்க்கடலுக்குக் கரை கண்டு, காழியர் பெருமானைக் கைகூப்பி வணங்கி, நிலத்தில் விழுந்து, 'உய்ந்தேன்! உய்ந்தேன்! உய்ந்தேன்!' என்று கூறித் தொழுதனள். வணிகனும் மாதவப் பிள்ளையாரை வாழ்த்தி வணங்கி, மெய்ம்மறந்து நின்றான்.

பின்பு, பிள்ளையார் அவ்விருவரையும் நோக்கி, அன்புடையீர், நீவிர் இத்தலத்திலேயே, மாணிக்க வண்ணரும் வண்டுவார் குழலம்மையும் சாக்ஷியாக, திருமணம் முடித்துக் கொண்டு செல்லக்கடவீர்' என்று ஆணையிட்டு, அவ் விருவர்க்கும் பாணிக்கிரகணஞ் செய்வித்தனர். பின்பு, தம்பதிகள் இருவரும் இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு, பிள்ளையாரையும் அடியாரையும் வணங்கி வாழ்த்தி, பிரியா விடை பெற்று, தம் பதியை அடையச் சென்றனர். பிள்ளையாரும் திருவருளைப் புகழ்ந்து அடியாருடன் அங்கே இனிதிருந்தனர்.

சிங்கத்தை முயல் கொன்ற கதை

குறுமுயல் சிங்கந் தன்னைக்
கொன்றதொன் றுண்டே தென்னில்
செறியுமோர் காட்டி லேயோர்
சிங்கம்உண் டந்தக் காட்டில்
உறு விலங் கனைத்தும் வேட்டை
ஆடி ஊன் மிகவுந் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலாம் ஒருங்கு கூடி. (1)

'ஆண்இளஞ் சிங்க மே! உன்
அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டாம்
விதத்தினில் தினம் ஒன் றாக
ஊண் உனக் களிப்போம்' என்ன
உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையும் இட் டொவ் வொன்று
அருந்திஅங் கிருக்கும் நாளில். (2)

தனிமுயல் ஒன்றுக் கோர்நாள்
தன்முறை வருத லோடும்
இனிஅது விடாது நம்மை
எனினும் ஓர் எடுப்பெ டுத்து
வினையைஇப் போது செய்து
வென்று நாம் உய்ந்தோ மாகில்
நனிவிலங் கனைத்தும் உய்யும்
நமக்கும்நற் புகழுண் டென்றே. (3)

கருதிஅச் சிங்கத் தின்தன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும் முயலை நோக்கி
மன்னன்'நம் பசிவே ளைக்குப்

பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை பிந்தி
வருவ தென் உரைநீ' என்று
மனந்தனிற் சினந்து கூற. (4)

'ஐய!நின் பசித்த வேளைக்
கடியனேன் வந்தேன் ஆங்கோர்
வெய்ய சிங் கத்தைக் கண்டு
வெருவிஅங் கொளித்தி ருந்தேன்
பையவே சிங்கம் ஆங்கோர்
பரு முழை புகுந்த பின்னர்
துய்ய வுன் பக்கல் வந்தேன்
சுவாமி'என் றிறைஞ்சி நிற்க. (5)

சிங்கம் 'நாம் அல்லால் வேறோர்
சிங்கம்நீ கண்டா யாகில்
அங்கதைக் காட்டு வா' என்
றழைத்தலும் அழைத்துப் போய்ஓர்
பங்கமும் புனலுஞ் சேர்ந்த
பாழ்ந்துர வதனைக் காட்ட
அங்கதை எட்டிப் பார்த்த
ததன் நிழல் உருவம் தோன்ற. (6)

தன்உரு நிழலைத் தானே
சத்துரு என்று பாய்ந்து
துன்னு பங் கத்த முந்தித்
துளங்கியே உயிர்இ ழந்த
தென்னலால் உபாயத் தாலே
யாவையும் வெல்ல லாம் என்
றின்னம்ஓர் நண்டு கொக்கை
ஈர்ந்ததோர் கதையும் சொல்லும். (7)

துஷ்டபுத்தி கெட்ட கதை

துட்டபுத்தி என்பவன்தான் பிதாவும் தானும்
துஞ்சினன் என்னலும்அக் கதை ஏ தென்னப்
பட்டணம்ஒன் றுண்டதிலே வணிகர் ஈன்ற
பாலர்இரு வோர் ஒருவன் தரும புத்தி
துட்டபுத்தி மற்றொருவன் இவர்கள் கூடித்
தூரத்தில் நிதிதேடப் போனார் அங்கே
இட்டமுடன் தருமபுத்திக் காயி ரம் பொன்
எய்தஅவன் தன்க்கெய்தா திடர்உற் றானே. (1)

'ஆயிரம்பொன் கிடைத்திருந்தும் விசாரம் என்ன
ஐந்நூ றைந் நூறாகப் பகுந்து கொள்வோம்
நீ யிரங்கல்' என்றுதர்ம புத்தி வைத்த
நேசத்தால் அங்கவனைக் கூட்டிப் போக
'ஞாயம்அல்ல இதை ஊரிற் கொண்டு போதல்
நாம்இந்த மரத்தின்கீழ்ப் புதைத்து வைத்துப்
போய் இதனை மற்றொருநாள் எடுத்துப் போதல்
புத்தி' என்றே துஷ்டபுத்தி போதித் தானே. (2)

அன்னவன் சொற் படிகேட்டோர் மரத்தின் கீழே
ஆயிரம்பொன் னையும் புதைத்து வைத்துப் போனார்
பின்னிரவில் துஷ்டபுத்தி கொண்டு போனன்
பிறகொருநாள் இருவருமாய்க் கூடிக் கொண்டு
பொன்னிருந்த இடம் பார்த்தார் காணர் துஷ்ட
புத்தி'நீ இதைஎடுத்துப் போக லாமோ'
என்னஅவன் 'நீஎடுத்துப் போனய்' என்ன
இருவரும் போய் வழக்கர்முன்னம் இயம்பி னரே. (3)

ஒருவர்மே லேஒருவர் சாற்ற அந்த
ஊர்வழக்கர் சாட்சி பிறர் உண்டோ என்ன
இருவருமே அறிந்ததல்லாற் பிறர்அங் கில்லை
என்று தர்ம புத்தி சொல்ல இதற்குச் சாட்சி

மரம் உரைக்கும் என்று துஷ்ட புத்தி சொல்ல
வழக்கரெலாம் அதிசயமாய் 'மரத்தைக் கேட்போம்
இருள்விடிந்த பின் வாரும் நீவிர்' என்றார்
இல்லிடத்துக் கவர்அவரும் ஏகி னாரே. (4)

துட்டபுத்தி தன்னுடைய பிதாவை 'அந்தத்
தொல்மரப்பொந் தொளித்து நீ கூறு கென்ன
'நட்டம் வரும் நீநினைத்த நினைவி னாலே
நமக் கின்று முன்னம் ஒரு நாகம் கொக்கின்
முட்டைதனைக் களவுகொள்ளக் கொக்கு நண்டின்
மொழிப்படியே கீரி வலை தொடுத்துப் பாம்பின்
வட்ட வளை மட்டாக மீனைப் போட
வந்தொருகீ ரியும் பாம்பை வதைத்த தென்ன. (5)

தந்தை உரைத் ததுங் கேளான் வலிமை யாலே
தான் இழுத்துப் போய் இருளில் தருவின் ஆழ்ந்த
பொந்தினுள்ளே அங்கவனை வைத்து மீளப்
பொழுது விடிந் ததன்பின்பு வழக்கர் கூடி
வந்துநின்று கேட்கஅவன் 'தர்ம புத்தி
வணிகன் எடுத் தான்'என்றே கூற லோடுஞ்
சிந்தைஅதி சயமாகி வழக்கர் 'ஈது
செப்பினது புதுமை'என்றே செப்பி னாரே. (6)

இதுகபடம் என்று தர்ம புத்தி எண்ணி
எறிமரப் பொந்தில் எரி தழலை மூட்ட
அதில்இருந்த கிழ்வணிகன் பதைத்து வீழ்ந்தே
'ஐயகோ! துஷ்டபுத்தி கெடுத்தான்' என்ன
மதியுடைய வழக்கரும் போய் அரசர் முன்னே
வகுத்தலும்அங் கவன்தன்னை வதைத்தார் தந்தை
குதிகொள் அன லால் வெதும்பி மாய்ந்தான் பொன்னும்
குறையாமல் தர்மபுத்தி கொடுபோ னானே. (7)

நல்வழி

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந் துனக்கு நான் தருவேன்—கோலம்செய்
துங்கக் கரி முகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா. (1)

சாதி இரண் டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி. (2)

எண்ணி ஒரு கருமம் யார்க்கும் செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்து போதல்லால்—கண்ணிலான்
மாங்காய் விழஎறிந்த மாத்திரைக்கோல் ஒக்குமே
ஆங்காலம் ஆகும் அவர்க்கு. (3)

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன் போமின்என்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம்புண் ஆக நெடுந்தூரம் தாம் நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். (4)

உள்ள தொழிய ஒருவர்க் கொருவர் சுகம்
கொள்ளக் கிடையா குவலயத்தில்—வெள்ளக்
கடல்ஓடி மீண்டு கரைஏறி னால் என்
உடலோடு வாழும் உயிர்க்கு. (5)

எல்லாப் படியாலும் எண்ணினால் இவ் வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை—நல்லார்
அறிந்திருப்பார் ஆதலினால் ஆங் கமல நீர் போல்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு. (6)

ஈட்டும் பொருள்முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ
கூட்டும் படி யன்றிக் கூடாவாம்—தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணும் தனம். (7)

ஆற்றுப் பெருக்கற் றடிசுடும்அந் நாளு மவ்வா
றாற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை என மாட்டார் இசைந்து. (8)

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா
நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்
எமக் கென்னென் றிட் டுண் டிரும். (9)

ஒருநாள் உணவைஒழி என்றால் ஒழியாய்
இருநாளுக் கேல்என்றால் ஏலாய்—ஒருநாளும்
என்னோ வறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது. (10)

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும்அன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. (11)

ஆவாரை யாரே அழிப்பார் அதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர்—ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல். (12)

சிவாய நமஎன்று சிந்தித் திருப்போர்க்
கபாயம் ஒருநாளும் இல்லை—உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும். (13)

தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணம்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால்—பெண்ணீர்மை
கற்பழியா ஆற்றால் கடல் சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி. (14)

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்—வையத்
தறும்பாவம் என்னஅறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல். (15)

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் எனவேண்டார்—மற்றோர்
இரணம் கொடுத்தால் இடுவர் இடாரே
சரணம் கொடுத்தாலும் தாம். (16)

சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம். (17)

நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வரும்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தரும்சிவந்த தாமரையாள் தான். (18)

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடு விட்டிங்
காவிதான் போயினபின் பாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம். (19)

வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரம் சொன்னார் மனை. (20)

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டிபாழ்
ஆறில்லா ஊருக் கழகுபாழ்—மாறில்
உடற்பிறப் பில்லா உடம்புபாழ் பாழே
மடக்கொடி இல்லா மனை. (21)

ஆன முதலில் அதிகம் செலவானல்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனய் ஏழ்பிறப்பும் தீயனய்
நல்லார்க்கும் பொல்லனம் நாடு. (22)

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப் பறந்து போம். (23)

ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல். (24)

உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடி நினைந் தெண்ணுவன—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்தனையும் சஞ்சலமே தான். (25)

மரம்பழுத்தால் வெளவாலை வா என்று கூவி
இரந்தழைப்பார் யாவரும்அங் கில்லை—சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றார் உலகத் தவர். (26)

இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று சால
ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று—வழுக்குடைய
வீரத்தின் நன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தின் நன்று தனி. (27)

ஆறிடு மேடும் மடுவும்போல் ஆம் செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர்—சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. (28)

கல்லானே யானாலும் கைப்பொருள்ஒன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள் மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். (29)

பூவாதே காய்க்கும் மரமும்உள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாம் உளரே—தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலும் தோன்றா துணர்வு. (30)

நீதிவெண்பா

தாமரைபொன் முத்து சவரம் கோரோசனை பால்
பூமருதேன் பட்டு புனுகு சவ்வா—தாம் அழல் மற்
றெங்கே பிறந்தாலும் எள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என். (1)

அரிமந் திரம் புகுந்தால் ஆனை மருப்பும்
பெருகொளிசேர் முத்தும் பெறலாம்—நரிநுழையில்
வாலும் சிறிய மறியென்பும் கர்த்தபத்தின்
தோலும்அல்லால் வேறும்உண்டோ சொல். (2)

சற்றோர் கனம்அறிவர் கற்றோரே கற்றறியா
மற்றோர் அறியார் வருத்தம்உறப்—பெற்றறியா
வந்தி பரிவாய் மகவைப் பெறும்துயரம்
நொந்தறிகு வாளோ நுவல். (3)

கோம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்பு கரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. (4)

கர்ப்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கர்ப்பூரம் ஆமோ கடலுப்பு—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியர்ஆ வாரோ புகல். (5)

சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பார் நன்றமைந்த
முற்றுணர்வோர் என்றும் மொழியாரே--வெற்றி பெறும்
வெண்கலத்தின் ஓசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தில் உண்டோ ஒலி. (6)

போற்பறிவில் லாத பல புத்திரரைப் பேறலின் ஓர்
நற்புதல்வ னைப் பெறுதல் நன்றாமே—பொற்கொடியே
பன்றிபல குட்டி பயந்ததனால் ஏது பயன்
ஒன்றமையா தோ கரிக்கன் றேது. (7)

தாமும் கொ டார் கொடுப்போர் தம்மையும் ஈ யாதவகை
சேமஞ்செய் வாரும் சிலர்உண்டே—ஏம நிழல்
இட்டுமலர் காய்கனிகள் ஈந்தருளும் மாமரத்தைக்
கட்டும் உடை முள் எனவே காண். (8)

போன் னும் கரும்பும் புகழ்பா லும் சந்தனமும்
சின்னம் பட வருத்தம் செய்தா லும்—முன்னிருந்த
நற்குணமே தோன் றும் நலிந்தா லும் உத்தமர்பால்
நற்குணமே தோன் றும் நயந்து. (9)

உத்தமர்தாம் ஈயுமிடத் தோங்கு பனை போல்வரே
மத்திமர் தாம் தெங்குதனை மானுவரே—முத்தலரும்
ஆங்கமுகு போல்வர் அதமர் அவர்களே
தேங்கதலி யும் போல்வர் தேர்ந்து. (10)

TB
031(6)
N31
85152

சிங்கார வனமதில் உதிப்பினும் காகமது
தீஞ்சொல் புகல் குயிலாகுமோ
திரைஎறியும் வாவியிற் பூத்தாலு மே கொட்டி
செங்கஞ்ச மலராகுமோ
அங்கான கத்திற் பிறந்தாலும் முயலான
தாணையின் கன்றாகுமோ
ஆண்மையா கிய நல்ல குடியிற் பிறந்தாலும்
அசடர்பெரி யோராவரோ
சங்காடு பாற்கடல் பிறந்தாலும் நத்தைதான்
சாளக் கிராமமாமோ
தடமேவு கடல்நீரி லே உப்பு விளையினும்
சாரசர்க் கரை யாகுமோ
மங்காத செந்தமிழ் குறுமுனிக் குபதேசம்
வைத்த மெய்ஞ் ஞான குருவே
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே. (1)

தங்கமா னது தழலில் நின்றுருகி மறுகினும்
தன்னொளி மழுங்கிடாது
சந்தனக் குறடுதான் மெலிந்துதேய்ந் தாலுமே
தன்மணம் குன்றிடாது
பொங்கமிகு சங்கு செந் தழலில் வெந் தாலுமே
பொலிவெண்மை குறைவுறாது
போதவே காய்ந்து நன் பால் குறுகி னாலும்
பொருந்துசுவை போய்விடாது

துங்கமணி சாணையில் தேய்ந்துவிட் டாலும்
துலங்குகுணம் ஒழியாது பின்
தொன்மைதரு பெரியோர் மடிந்தாலும் அவர்களது
தூயநிறை தவறுகுமோ
மங்களகல் யாணி குற மங்கை சுர குஞ்சரியை
மருவு திண் புயவாசனே
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே. (2)

அரசர்பகை யும் தவம் புரிதபோ தனர் பகையும்
அரிய கரு ணீகர்பகையும்
அடுத்துக் கெடுப்போர் கொடும்பகையும் உட்பகையும்
அருளிலாக் கொலைஞர்பகையும்
விரகுமிகும் ஊரிலுள் ளோருடன் பகையும் மிகு
விகடப்ர சங்கி பகையும்
வெகுசனப் பகையும் மந் திரவாதி யின்பகையும்
விழை மருத் துவர்கள்பகையும்
உரமருவு கவிவாணர் பகையும் ஆ சான்பகையும்
உறவின்முறை யார்கள்பகையும்
உற்ற திர வியமுளோர் பகையும் மந் திரிபகையும்
ஒருசிறிதும் ஆகாதுகாண்
வரநதியின் மதலைஎன இனிய சர வண மிசையில்
வரு தருண சிறுகுழவியே
மயிலேறி விளையாடு குகனே புல் வயல் நீடு
மலைமேவு குமரேசனே. (3)

திருவேங்கட சதகம்

பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
பெரியோரை முனிதல்வேண்டாம்
பின்ஞென்று முன்ஞென்று பேசியே அவமானப்
பேர்கொண்டு திரிதல்வேண்டாம்
உற்றவர்கள் போல உட் பகையான வஞ்சகரை
ஒருநாளும் நம்பவேண்டாம்
ஒருவருக் கிச்சையாய்ப் பொய்சொலிப் பின் சபையில்
ஊமைபோல் நிற்றல்வேண்டாம்
சற்றுமே பொறுமையில் லாதவர்கள் சண்டையில்
தான்போய் விலக்கல்வேண்டாம்
தைரியந் தனில் விக்ர மாதித்தன் என்னினும்
தன்னையே புகழவேண்டாம்
மற்றென்றும் எண்ணது செய்யவேண் டாம் என்பர்
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே
வரத வேங் கடராயனே. (1)

கதித்திடும் பகைவரென் றாலும் ஆ பத்தினிற்
கண்டுதவி செய்யல்வேண்டும்
கல்வியறி யாத சபை எனினும் ப்ர சங்கங்கள்
கவிராசர் செய்யல்வேண்டும்
விதித்தமுழு மூடரென் றாலும் தம் மைந்தர்க்கு
வித்தை கற் பித்தல்வேண்டும்
வெய்ய சின மூர்க்கரென் றாலும் நல் லோர்கண்டு
மேற்புத்தி சொல்லல்வேண்டும்

அதிர்ஷ்டமிலை என்னினும் சலியர்மல் மிக்கதொழி
லதிலே முயற்சிவேண்டும்
அசாத்தியம தான கன ரோகம்என் றாலும் ஓர்
ஔஷதம தீவர்கண்டாய்
வதிஷ்டரொடு வான்மீக முனி துதி சரித்ரனே
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே
வரத வேங் கடராயனே. (2)

அதிவீரன் என்னினும் தந்திர வுபாயமுடன்
அடையலரை வெல்லல்வேண்டும்
ஆயிரம் வித்தைகற் றாலும் உல கந்தனில்
அடக்கம திருத்தல்வேண்டும்
நதிகோடி நீந்திவந் தாலும் ஒ டந்தனை
நயந்து கரை சேரல்வேண்டும்
ஞானதத் துவம் உணர்ந் தாலும் உல கத்தினில்
நடக்கைதனை அறிதல்வேண்டும்
துதிசேர் குபேரன்என் றாலும் ஒரு லாபம் உறு
தொழிலுடன் இருத்தல்வேண்டும்
துய்யவல் லமையுடையன் எனினும் ஒரு சார்பினல்
துரைகளைக் காணல்வேண்டும்
மதியூகி என்னினும் பெரியோர்சொல் கொளல்வேண்டும்
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே
வரத வேங் கடராயனே. (3)

85152

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.